உ

பாண்டவ அக்ஞாதவாஸம்.

ஒரு தமிழ் நாடகம்.

சென்னை:

சானிட்டரி இஞ்சினீயராபீஸ் டெக்னிகல் ஸூப்பரின்டெண்டெண்டு

B. இராமமூர்த்திபந்துலு அவர்களால்

இயற்றப்பட்டது.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

1930.

All Rights Reserved.]

[இதன் விலை ரூ. 1.

ஸ்ரீ:

முகவுரை.

"பாண்டவர் அஜ்ஞாதவாஸம்" என்னும் இப்புத்தகத்தைப்பற்றி என் அபிப்பிராயத்தை இங்கு வெளியிட மிகவும் விருப்பமுடையேன். நாடகவியல் வாய்க்குமாறு எளிய நடையில் எழுதப்பெற்ற இது, யாவர்க்கும் இன்பம் விளைக்கும் ஒரு சிறிய தமிழ்நூலாகும். இது பலவகைச் சுவைகளும் பயக்குமாறு நடிக்கத்தக்கது. கதை நிகழ்ச்சியின் நாடக அமைப்பும் அருமையாக அமைந்துள்ளது. நாடக பாத்திரங்களின் குணஞ்செயல்கள் அவரவர் கூற்றுக்களால் நன்கு வெளிப்படுகின்றன. கற்பின் பெருமை, காமத்தின் விளைவு, ஸத்யம், தயை, வீரம், அரசியல், முதலிய அரிய நீதிகள் பலவும் இதனுல் அறியலாவன. இது நிற்க.

ஸ்ரீ மஹாபாரதம் ஒருவர்க்கு இம்மை மறுமை இரண்டிலும் உறுதி பயப்பது. அறிஞர்கள் அதனை ஐந்தாம்வேதமென்று ஆதரிக்கக் காண்கிறோம். அதனுள்ளும் விராடபர்வம் மிகவும் மேன்மையுடையதாம். "விராடோத்யோகஸாரவாங்" என்று பாரதமே அதனைப் பாராட்டு கின்றது. அன்றியும் அப்பருவத்தைப் படனம் செய்தால் நாடு சுபிக்ஷமடையுமென்று நல்லோர்கள் சொல்லக் கேள்விப்படுவதுண்டு. அத்தகைய அதன் கதை நிகழ்ச்சியே இந் நாடகத்திற்குப் பொருளாக அமைந்தது. ஆகையால் இதனை அன்புடன் வாசித்து அரங்கங்களில் நடனமும் செய்வதாயின் அதனுலெய்தும் நன்மை அளவிடற்பாலதன்று.

இனி, இதன் ஆசிரியர் ஸ்ரீமாந். இராமமூர்த்திபந்துலு அவர்களுடன் எனக்கு நீண்டகாலமாக நட்புரிமையுண்டு. அவருடைய உயர் குணங்கள் யாவரையும் மகிழச்செய்வன. ஆந்திரபாஷையில் அவர் அரிய பெரிய புலமைபடைத்தவர். அம்மொழிக்கு அலங்காரமாக

'வருதினி,' 'ஹரிணு' என்ற இரண்டு நாடகங்களை அவர் இயற்றியுதவி யுள்ளார். அவை உரியவாறு அறிஞர்களின் நன்குமதிப்பைப் பெற்றிருக்கின்றன. அவர் வடமொழியிலும் வல்லுநர்.

தமிழ்மொழி அவர்க்குத் தாய்மொழியாக அமைந்ததன்று. ஆயினும், அம்மொழியில் ஆற்றல் பெற்று அதனையும் வளம்பெறச் செய்ய, 'பாண்டவா அஜ்ஞாதவாஸம்' என்னும் இந்நாடகத்தை எழுதியுபகரித்த அவருடைய அருஞ்செயலை என்னென்று புகழ்ந்துரைப்பது? அவர் மதிவன்மை யாவராலும் பெரிதும் வியந்து பேணுதற்குரியது. நாடகவுலகில் அவருடைய பெயர் நன்கு நிலையுறுவதாகுக.

இவர்போன்ற அறிவு திரு ஆற்றல்களமைந்த சான்றோர் சேர்க்கையினாலே நாடகமும் ஏத்தப்படுவதாகிறது. இக்காலம் தலையுயர்ந்தோங்கி வரும் நாடக இயக்கத்தில் பற்றுளு அவர்கள் ஊக்கமும் உழைப்பும் உடையவர்களாகையால் அவருடைய நன்முயற்சிகள் பயனுறும்வண்ணம் எம்பெருமான் திருவருள்புரிவாளுக.

டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்கார்,
மதுரை.

DEDICATED

TO

M. R. Ry.

G. C. V. Strinivasachariar Avl.,

MY MASTER,

great scholar, poet, actor

AND

pioneer of oriental stage

IN

Southern India.

B. Ramamurti.

FOREWORD.

I present this little Drama "**Pandavas Incognito**" to the Tamil Public not in the capacity of a scholar or a student of Tamil but as an actor and one who is associated with Tamil.

I am a Telugu student and Play Wright. In my early days I wrote two Dramas "**Varudhini**" and "**Harina**" in Telugu, adaptation of the great Telugu Kavya "**Manucharitra**" of Alasani Paddanna popularly known as "**Andhra Kavita Pitamaha**" one of the gems of Krishnadeva Raya's Court. "**Varudhini**" was popular in Madras and it was enacted several times by the members of the Suguna Vilasa Sabha of Madras with great success.

Stage was an attraction for me from my boyhood. In early-nineties I appeared as Uttara Kumara, in Pandava Agnatha Vasa Charitra, a drama in Telugu written by late M R Ry Susarba Ananda Row Pantulu Garu He was connected with the Madras Christian College as a Telugu Pandit and was a good poet, actor and friend I had always an admiration for him and for his dramas.

When my friends of the Madura Dramatic Club, with which I am intimately connected, requested me to select a new piece to enact, this plot "**Pandva Agnatha Vasa**" was uppermost in my mind I at once commenced to write this drama, with the inspiration I derived from the Telugu

drama and with the assistance of M. R. Ry. K. Ramanatha Iyer, B.A., Vakil and an actor Madura, whose help and co-operation I gratefully acknowledge, and completed it early in 1926. This Drama was enacted by the members of the Madura Dramatic Club about half a dozen times in Madura and outside with distinct success.

Encouraged with the success the drama attained on the Stage and with the assurance of my friends and eminent pandit Brahmasri Thirunarayana Aiyengar Swamigal of Tamil Sangam Madura, that the drama is a fit production for publication, I ventured to publish it. I had much encouragement from the Swamigal and the "**Nandi**" verse is his production. I am thankful to him.

It is for the Stage going Tamil public, to judge how far I was able to maintain the dignity of the plot and of the characters in this drama.

My thanks are specially due to M. R. Ry., T. V. S. Thathachariar B.A., B.L., Advocate Madura and M R. Ry., Ramanuja Iyengar Avl., of Tamil Sangam for getting the publication through the press.

Anyone who intends to stage this drama is requested to obtain my permission before staging the drama.

B. RAMAMURTHI.

நாடக பாத்திரங்கள்.

தர்மபுத்திரர் பீமசேனன் அர்ஜுனன் நகுலன் ஸகாதேவன்	....	பாண்டவசகோதரர்கள்
தௌமயர்	....	ஓர் முனிவர்.
ஸ்ரீக்ருஷ்ணன்	....	பரந்தாமன்.
துர்யோதனன்	....	ஹஸ்தினாபுரத்து மன்னன்.
கர்ணன்	....	அங்கதேசாதிபதி.
சகுனி	....	துர்யோதனன் மாமன்.
பீஷ்மர் த்ரோணர் க்ருபர்	....	துர்யோதனன் ஆசாரியர்கள்.
அஸ்வத்தாமா	....	த்ரோணபுத்திரன்.
விராடன்	....	விராடதேசத்து மன்னன்.
உத்தரகுமாரன்	....	விராடன் மைந்தன்.
கீசகன்	....	விராடன் மைத்துனன்-சேனாதிபதி.
இந்திரன்	....	தேவராஜன்.
மாதலி	....	தேவலோக சேவகன்.
கஞ்சுகி	....	துர்யோதனன் வேலையாள்.
மல்லன்	....	துரியோதனன் ஸமஸ்தான மல்லன்.
சந்தனகன் நந்தகன்	....	துர்யோதனன் சாரர்கள்.
வனபாலன்	....	தோட்டக்காரன்.
ஊர்வசி	....	தேவதாசி.
த்ரௌபதி	....	பாண்டவர் பத்னி.
சுதேக்ஷ்ணை	....	விராடன் மனைவி
உத்தரை	....	விராடன் புதல்வி.
முரளீ	....	கீசகன் மனைவி.
குமுதா லலிதா ஸரளா	....	சுதேக்ஷ்ணையின் பணிப்பெண்கள்.

தர்மதேவதை.

சேவகர், போர்வீரர் முதலியோர்.

ஸ்ரீ:

ஸ்ரீகிருஷ்ணயபரப்ருஹ்மணே நம:

ஸத்யம் வத ; தர்மம் சர ; ஸத்யே ஸர்வம் ப்ரதிஷ்டிதம் ।

பாண்டவ.
அக்ஞாதவாஸம்.

நாந்தி.

மும்மையுல காடரங்கம் முழுமதிசெங் கதிர்விளக்கு முழவேழ் முந்நீர்
எம்மறையும் இசைப்பாடல் இரவுதிரை பகலியக்கம் எழில்வான் பந்தல்
பொம்மைகள்நாற் கதியுடம்பு போதமிகு மாதவர்காண் போர்க ளாக
நம்மையெலாம் கூத்தாட்டு நாரணன்தா ளிணைதொழுது நாமுய்வோமே. *

ஸூத்ரதாரன்:— [நாந்திமுடிவில் நேபத்யத்தைநோக்கிநின்று] மித்ரா! இங்கே வருவாயாக.

பாரிபார்சுவிகன்:— [பிரவேசித்து] இதோ வந்துவிட்டேன்.

---

*(இதன்பொருள்:—)ஸ்வர்க்க மத்ய பாதாள மென்று சொல்லப்பட்ட திரி லோகங்களுமே ரங்கஸ்தலமாகவும், பூர்ணசந்திரனும் பாலஸூர்யனும் தீபங்களாகவும், ஸப்த ஸாகரங்களின் உத்கோஷங்களே மிருதங்கத்வனியாகவும், ஸகல வேத கீதங்களும் சங்கீதமாகவும், ராத்திரிகாலமே யவனிகையாகவும், பகற்காலமே ப்ரவேசமாகவும், அண்டமூகடே பந்தலாகவும், தேவாதி சரீரங்களே வேஷமாகவும், ஞானாதிகரான சிஷ்டர்களே பார்ப்போராகவும் வைத்து, பெத்தாத்மாக்களாகிய நம்மையெல்லாம் கூத்தாட்டுகின்ற ஸூத்ரதாரனை வாஸுதேவனுடைய உபயசரணாரவிந்தங்களை வந்தித்தும் சிந்தித்தும் வாழ்வோமாக,

ஸூத்ர:—நண்பா! ஸபையோர்கள் பூர்விகர்களால் இயற்றப்பட்ட நாடகங்கள் பல பார்த்துத் திருப்தியடைந்திருக்கிறார்கள்; இப்போது பரிபாகரஸமாயிருக்கும்படி ஆதுநிகமாயியற்றப் பட்டிருக்கிற பாண்டவாக்ஞாதவாஸம் என்னும் ஒரு அருமையான நாடகத்தை நடத்த நிச்சயித்திருக்கிறேன்; ஆகையால் நடிப்பவர்கள் தங்கள்தங்களுக்கேற்பட்ட பாத்திரங்களில் பிசகிப்போகாமலும் கெவனமுடையவர்களாகவும் இருக்கவேண்டுமென்பதை முன்னமே தெரிவிப்பாயாக.

பாரி:— தங்கள் உத்தரவுப்படியே செய்கிறேன். இந்த நாடகம் யாரால் இயற்றப்பட்டது?

ஸூத்ர:—நாட்யரங்கத்தில் சிரகால பரிசயத்தாலும், புண்யபுருஷர்களான பாண்டவர்களிடத்துள்ள கௌரவத்தாலும், நண்பர்களாகிய நம்மிடத்துள்ள அபிமானத்தாலும் இந்நாடகம் ஸ்ரீமாந் ராமமூர்த்தி அவர்களால் இயற்றப்பட்டது.

பாரி:— ஓகோ! அதுவா! ஞாபகத்திற்கு வந்துவிட்டது. நாடகலோகத்திற்கே ஒரு அபூர்வமான களையாக அது விளங்கிக் கொண்டிருக்கிறதல்லவா! [சற்றுக் கவனித்து] ஏதோ ஒரு திவ்ய கானம் கேட்கப்படுகிறது.

ஸூத்ர;—ஹா ஹா! அர்ஜுனன் இந்திரபவனத்தில் கிரீடியாகி இந்திரனுடைய அர்த்தாஸநத்தை வஹித்து இந்திரபோகத்தோடு உல்லாசமாக இருக்கும்பொழுது நாரணனை ஸ்தோத்ரம் செய்கிறதுபோல் காணப்படுகிறது, நாமும் நம்முடைய பாத்திரங்களைத்தரித்து நடிக்கச்செல்வோம் வா.

[போகிறார்கள்]

பாண்டவ அக்ஞாதவாஸம்.

Act I. Sc. I.

உபக்ரமம்.

இந்திரனுடைய மந்திரம்.

காலம் இரவு.

[அர்ஜுனனும் மாதலியும் பிரவேசம்.]

அர்ஜு:— 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌸𑍁𑌰𑌗𑍁𑌰𑍁𑌂 𑌜𑌗𑌦𑍇𑌕𑌨𑌾𑌥𑌂
𑌭𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌸𑌕𑌲𑌲𑍋𑌕𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌂 𑌚 ।
𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑌜𑌂 𑌵𑌿𑌭𑍁𑌮𑌾𑌦𑍍𑌯𑌮𑍀𑌶𑌂
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌭𑌵𑌘𑍍𑌨𑌮𑌮𑌰𑌾𑌸𑍁𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌮𑍍 ॥

மித்திரா! மாதலி! இப்பொழுது எவ்விதமாகக் காலத்தைக் கழிக்கலாம்? சொல் பார்ப்போம்.

மாதலி:— தேவா! அலங்கரிக்கப்பட்டிருக்கும் இந்நகரம் நிலவுவீசும் இச்சமயத்தில் எவ்விதம் காணப்படுகிறதென்று சுற்றிப் பார்த்துவரலாம். இல்லாவிடில் அதி பரிமளத்தோடு வாடாமலிருக்கும் உத்கிருஷ்டமான பாரிஜாதபுஷ்பவிருக்ஷங்களால் அடர்ந்திருக்கும் அழகான நந்தவனத்தில் உல்லாசமாய்ச் சஞ்சரிக்கலாம். இல்லாவிடில் ரம்பாதிகளை வரவழைத்து இனிய கானங்களைக்கேட்கலாம். [மேனகை பாடுகிறாள்] அதோ கேட்டீர்களா!

அர்ஜு:— எங்கிருந்து இந்த ஸங்கீதம் வருகின்றது! மித்திரா! சிரமங்களையெல்லாம் போக்கடித்து இனிமையாகவும், குளிர்மையாகவும் மதுரமான ஸ்வரங்களோடும், லயத்தோடும் சேர்ந்து சித்தத்தை அபகரிக்கும் மகாமந்திரத்தைப்போல் என் மனத்தைக் கவர்கின்றது.

மாதலி:— தேவா! நாளையதினம் தேவஸபையில் நடிப்பதற்காக மேனகையானவள் பாதாசாரியரிடத்தில் அபிநயம்கற்றுக்கொள்கிறாள். அதுதான் அந்த சங்கீதத்வனி. நல்லது. சங்கீதத்தைமட்டும் கேட்டு ஆநந்தப்பட்டீரே,- அதன் அர்த்தத்தை அறிந்தீரா?

அர்ஜு:— கானத்தையும் கேட்டேன். அர்த்தத்தையும் அறிந்தேன். என்னுடைய அபிப்பிராயத்துக்கு ஒத்ததாகவேயிருக்கிறது. அது இருக்கட்டும். மாதலி! அஸ்தினாபுரத்தில் என் ஹ்ருதயேசுவரி – கண்ணபிரானின் தங்கை – சுபத்திரையை விதுரருடைய க்ருஹத்தில் விட்டு வந்தேன். அங்கு எனது மைந்தன் அபிமன்யு எவ்வாறு வளர்ந்துவருகிறானோ என்று எனக்குக் கவலை உண்டாகின்றது. மாதலி! இந்தக்ஷணமே என்னுடைய சந்தோஷ வார்த்தைகளை அந்த ரத்தினங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். எழுதும் கருவிகள் கொண்டுவா.

[மாதலி ஓர் ஓலைச்சுருளையும் எழுதுகோலையும் கொடுக்க, அர்ஜுனன் எழுதுகிறான்].

[ஊர்வசி பிரவேசம்.]

ஊர்வசி:– [தனக்குள்] இந்தப் புண்யபுருஷனைத் தனியாகச் சந்திக்கவேண்டுமென்று மூன்று தினங்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இப்போதுதான் சமயம் வாய்த்தது. ஆணில் அழகன் அர்ஜுனன் என்று பூதலத்தோர் புகழ்தலைப் பன்முறை கேட்டிருக்கிறேன். ஆயினும் நேரில் காணும் பொழுதுதான் அதனுண்மை தெரிகிறது. அநங்கனைப் போன்ற இம்மகாபுருஷனை நான் என்னவென்று வருணிப்பேன். இப்பேர்ப்பட்ட மன்மத ஸ்வரூபியுடன் மதன கேளிக்கைகளை அனுபவிக்காவிடில் நான் இத்திவ்யரூபத்தை அடைந்ததின் பயனென்ன ?

அர்ஜு:— மாதலி! இப்பொழுதே இந்த லிகிதத்தை என் மைந்தன் அபிமன்யுவிடம் சேர்ப்பிக்கிறேன்.

[ஓலைச்சுருளைப் பாணத்தில் தொடுத்துவிடுகிறான்].

மாதலி:— தேவா! த்வைதவனத்திலுள்ள தங்கள் ஸஹோதரர்களுக்கு எழுதவேண்டாமா.

அர்ஜு:— மித்ர! நன்றாய் ஞாபகப்படுத்தினாய்!

[மறுஓலை எழுதி அவ்வாறே அனுப்புகிறான்].

ஊர்வசி:— [தனக்குள்] மாதலியை இவ்விடமிருந்து அனுப்பிவிடவேண்டும். அதற்கென்செய்கிறது. [சற்று யோசித்து] ஆம் இது தான் நல்ல யோசனை.

[ஊர்வசி வெளியில்போக முயல்கிறாள்].

அர்ஜு:— ஸகே! மாதலி! நீ போய்த் தேவேந்திரனை அழைத்துவருகிறாயா?

மாதலி:— அப்படியே. [போகிறான்]

ஊர்வசி:— [தனக்குள்] நான் எது எண்ணினேனோ அது நடந்துவிட்டது. இனி என் எண்ணம் நிறைவேறிவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. இன்றைக்காவது அவர் தனிமையாக அகப்பட்டாரே. [அர்ஜுனனை அடுத்து] ராஜபுத்ர! பூர்ண சந்திரன் ஸகல கலைகளோடு துலங்க, நந்தவனத்தின மந்தமாருதம் மெல்லெனவீச மதனபரிவாரங்கள் எங்கும் பரவ மதிமயங்கச் செய்யும் இச்சமயத்தில் நீர் எப்படி ஏகாந்தமாகக் காலத்தைக் கழிக்கின்றீர்.

அர்ஜு:— யாரது! ஜநநி ஊர்வசியா! அம்மா! வர்வேண்டும். புத்ர வாஞ்சை மேலிட்டு என்னைக் கண்டாநந்தித்துப்போகலாமென்று தாங்கள் இங்கு விஜயம்செய்தீர்கள்போலும்! நான் மிகவும் கிருதார்த்தனானேன். தாயே தங்களுக்கு என்மீது இவ்வளவு அன்பு ஏற்பட நான் எவ்வளவோ புண்யம் செய்திருக்கவேண்டும். தேவேந்திரன் ஸபையில் திவ்யமான நர்த்தனம் செய்து களைத்திருப்பீர்கள்.

ஊர்வசி:— மானிடர்களைப்போல எங்களுக்குச் சிரமம் என்பதில்லை. ஆயினும் இது என்ன? தாங்கள் எனக்கு இவ்வாறு மரியாதை செய்கிறீர்கள்!

அர்ஜு:— அம்மணி! நான் தங்களுக்குச்செய்யவேண்டிய மரியாதையைத்தானே செய்தேன். வேறு விசேஷமொன்றுமில்லை.

ஊர்வசி:— [தனக்குள்] மனமே சற்றுப் பொறு. [அர்ஜுனனை அடுத்து] அர்ஜுனா! உன்னுடைய இணையில்லாத சௌரிய தீர பராக்ரமங்களை நாரதர் தேவஸபையில் வருணிக்கும்பொழுது அதைக்கேட்டு உன்னை எப்பொழுது காண்பேன்; எப்பொழுது இன்பசுகங்களை அனுபவிப்பேன்—என்று எண்ணி இங்கு வர,—

அர்ஜு:— மாதா! தாங்கள் என்ன சொன்னீர்கள்! எனக்குப் புலப்படவில்லையே.

ஊர்வசி:— பல்குனா! என்னை என்னவென்று அழைக்கின்றாய்! மாதே! என்பதற்குப் பதிலாக மாதா என்று வாய்தவறி அழைக்கின்றாயா! பரமசிவனை உன் பாஹுபாசத்தினால் பந்தித்துப் பாசுபதத்தைப்பெற்ற பிரதாபத்தை இந்திரஸபையில் நாரதர் புகழக் கேட்டதுமுதல் அப்பாசத்தின் திறத்தை யறிய ஆவலாக இருக்கிறேன்! ஏதோ...........பந்தியும்...........அம் முக்கண்ணன் துன்பம் விளக்கும் பாணத்தை அளித்தால் யான் இன்பம் விளைக்கும் பாணங்களை அளிப்பேனே.

அர்ஜு:— [காதைப்பொத்தி] ஹா! ஹா! சிவ சிவ. தாயே! இதென்ன? தாம் இவ்வாறு தர்ம விரோதமாக நடக்கலாமா? இவ்விதம் என்னுடன் தாங்கள் வார்த்தையாடுவது நீதியா? முறையா? வேண்டாம். இது தமக்குத் தகாது.

ஊர்வசி:— அர்ஜுனா! உலகில் உன்னை அதிசதுரன் என்று சொல்வார்கள். நானும் இதுவரை அவ்வாறே எண்ணியிருந்தேன். நீ என்னை ஜநநீ! என்றும் மாதா! என்றும் தாயே! என்றும் அழைக்கிறாயே. அந்த முறை எப்படி வந்தது? நான் உனக்கு எப்படி ஜநநீ? தாய்? நானோ அமரலோகவனிதை. எனக்குப் பூலோகபாந்தவ்ய முறைகளே கிடையாதே! மேலும், இந்த தேவலோகத்தில் ஸ்த்ரீபுருஷர்கள் அவரவர்கள் இஷ்டம்போல் சஞ்சரிப்பார்கள். இங்கு அது அநிந்திதமான ஆசாரம். நீ எப்பொழுது தேவலோகத்துக்கு வந்துவிட்டாயோ அப்பொழுதே தேவலோகத்துப் புண்யபுருஷனாகிவிட்டாய். இது உனக்குத் தெரியாதா.

அர்ஜு:— ஸ்ரீஹரி! தாயே! — தாங்கள் புகன்ற புதுமையான தர்மம் எங்களுக்குப் பொருந்தாது. ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவும் ரக்ஷிக்கவும் வல்ல தேவர்கள் எப்படி நடந்தாலும் தர்மவிரோதமாகாது. நானோ கர்மபூமியில் ஜனித்தவன். ஆகையால் தேவலோக தர்மம் எனக்குப் பொருந்தாது. மேலும் எனது வம்சகர்த்தாவான புரூரவசுக்குப் பத்தினியான காரணத்தினாலேயும் தேவேந்திரனுக்குப் பரிசர்யம் செய்வதினாலேயும் தாங்கள் எனக்குத் தாய் என்பதற்குச் சந்தேகமுண்டோ? ஆகையால் என்மீது அன்புகூர்ந்து புத்ரவாத்ஸல்யத்தைக் காட்டி ஆசீர்வதியுங்கள்.

ஊர்வசி:— நல்லது நல்லது. அர்ஜுனா! தேவமாதர்களாகிய எங்களுக்கு அப்படிப்பட்ட முறைகளெல்லாம் கிடையாதென்பதை மறந்தாயோ; நன்றாய்ச் சொன்னாய்! நான் என்ன! அந்தத் தேவசரீரத்துடனா புரூரவபத்தினியாயிருந்தேன்? ஏதோ ஒரு சொல் காரணத்தினால் மனுஷ்யரூபமெடுத்தேன்; அதற்கும் இப்போதிருக்கும் ரூபத்திற்கும் என்ன சம்பந்தம்? நீ சொல்வது சரியன்று. இந்திரனுக்குப் பரிசர்யம் செய்பவளென்று சொன்னாய்? ஆம் வாஸ்தவம்தான். இந்திரனுடன் அர்த்தாஸனத்திலமர்ந்து நீ கிரீடியாகவில்லையா? அதனால் உனக்கும் பரிசர்யம்செய்யப் பாத்தியப்பட்டவளானேனல்லவா? ஆகையால் நீ சொல்லும் நீதியும் முறையும் தர்மமும் சரியன்று. மேலும் இன்று தேவேந்திரன்ஸபையில் நீ என்னைக் கண் கொட்டாது கவனிக்கவில்லையா? ஏன் நிந்திக்கின்றாய்?

அர்ஜு:— தாயே! நான் நோக்கியதைத் தாங்கள் தவறாக எண்ணியிருக்கிறீர்கள். அருமையான பரதஸாஸ்திரத்தைப் பழுதறக் கற்றிருக்கிறீர்களேயென்று ஆச்சரியமும் சந்தோஷமும் மேலிட அவ்வாறு கண்ணுற்றேன். தாயின் சாமர்த்தியத்தைக் கண்டு தநயன் சந்தோஷிப்பது ஓர் ஆச்சர்யமா?

ஊர்வசி:— இன்னும் அந்த முறையை விடமாட்டாய்போலும். இச் சமயம் உன்னை நாடிவந்தகாரணம் அறிந்தும் இப்படி என்

னுடன் வார்த்தையாடலாமா? இது உனக்கழகல்ல. வேண்டாம். என் மனத்தைப் புண்படுத்தாதே. உனக்குக் கொடும்பாவமும் துன்பமும் நேரிடும்.

அர்ஜு:— எவ்விதமான துன்பங்களாயினும் நான் அநுபவிப்பேனேயல்லாது இப்படிப்பட்ட அதர்மவசனங்களை ஒருநாளும் கேட்கமாட்டேன். தாங்கள் சொல்லும் வார்த்தைகள் எல்லாம் காதில் நாராசம்போல் வீழ்ந்து புண்படுத்துகின்றன. வேண்டாம். விட்டுவிடுங்கள். எப்பேர்ப்பட்ட கொடிய பாவமானாலும் ஸகிப்பேனேயொழிய இவ்விதமான நடத்தைக்கு உட்படமாட்டேன். நான் பன்முறையும் உங்களை வேண்டிக்கொள்கிறேன். அம்மணீ! தாங்கள் எனக்குக் குந்தியைப்போலல்லவா? இந்திராணியைப்போல் அன்னையல்லவா?

ஊர்வசி:— நான் எவ்வளவு இரந்துகேட்டும் உன்மனம் இளகவில்லையே. பெண்பழிக்கஞ்சாது இவ்வாறு நடக்கலாமா?

அர்ஜு:— அம்மணீ! பெரும்பழிக்கஞ்சியே நான் இவ்வாறு நடக்கிறேன்.

ஊர்வசி:— இது நிச்சயம்தானா? முடிவுதானா?

அர்ஜு:— முடிவுதான் ஜநநீ!

ஊர்வசி:— ஹாஹா! அர்ஜுனா! நான் உன்னிடம் இச்சைகொள்ள நீ யென்னை மறுத்தாயல்லவா? நீ எந்த ஆண்மைச்செருக்கினால் வலியவந்த ஸ்த்ரீயை வெறுத்தாயோ அந்த ஆண்மையற்று பூலோகத்தில் நீ மானமழிந்து ஸ்த்ரீகளின் மத்தியில் நபும்ஸகனாக இருக்கக்கடவாய்.

அர்ஜு:— அப்படியே. அப்படியிருந்தபோதிலும் சரி. அதை நான் ஸகித்துக்கொள்வேன். ஆனால்,

[இந்திரன் வருகிறன்].

இந்திரன்:— அர்ஜுனா! என்ன இது.

அர்ஜு:— தந்தையே! நான் புத்திரன் என்றும் பாராமல் என்னை இவள் இச்சித்தாள். அதற்கு நான் உடன்படாததால் நபும்ஸகனாகும்படி சபித்தாள்.

இந்திரன்:—வத்ஸ! நீ இவ்வளவு ஜிதேந்த்ரியனென்று இன்றுதான் நான் அறிந்தேன். ஊர்வசி! நீ இப்படிச் சபிக்கலாமா.

ஊர்வசி:— தேவநாத! நான் என்ன செய்வேன். என் புத்தித்தவறுல் நேர்ந்தது. ஆயினும், அது இவருக்கு அநுகூலமாகவே ஆகும்படி தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்.

இந்திரன்:—குழந்தாய்! அர்ஜுனு! நீ கவலைப்படாதே. இந்தச் சாபத்தை எப்படியும் அனுபவித்தே தீரவேண்டும். உனக்கு இந்தச் சாபம் நேர்ந்த விஷயம் ஓர் தேவரகஸியம். அதுவும் உன் நன்மைக்காகவே ஏற்பட்டது. இப்பொழுது நீங்கள் ஐவரும் பாஞ்சாலியும் அனுபவிக்கும் வனவாஸ முடிவில் ஒருவருஷம் நீங்கள் அஜ்ஞாதவாஸத்தைக் கழிப்பதற்கு இச்சாபமே உனக்கு அநுகூலமாயிருக்க நான் அநுக்ரஹித்தேன்.

அர்ஜுன:— (வணங்குகிறான்.)

பாண்டவ அக்ஞாத வாஸம்.

அங்கம்-I. காட்சி-I.

விராடநகரின் சமீபத்தில் ஒரு வனம்.

[பாண்டவர்களும் திரௌபதியும் பிரவேசம்.]

அர்ஜுன:— அண்ணு! நான் ஆங்காங்குத் தீர்த்தயாத்திரைக்கு சென்றபொழுது இந்த மத்ஸ்யதேசத்தைப் பார்த்திருக்கிறேன். இந்த விராடநகரம் மிகவும் செழிப்பானது. நீதி தவறுது பரிபாலிக்கப்படுகிறது. அதிலுள்ள பிரஜைகளோ ராஜ விசுவாசத்துடனும் சந்துஷ்டியுடனும் இருக்கின்றார்கள். தனசம்பத்தும் தான்யசம்பத்தும் நிறைந்திருக்கின்றது. விராடன் ஒரு சிற்றரசனுயிருந்தாலும், சக்ரவர்த்தியின் லக்ஷணங்களோடு ராஜ்யபாரம் செய்துவருகிறான்.

தர்ம:— அர்ஜுனு! நீ சொல்வது உண்மைதான். இவ்விராடநகரம் நீ சொன்னவாறேயிருக்கின்றது. இவ்விடத்தில்தான் மேது

அக்ஞாதவாசத்தைக் கழிப்பது உசிதமென்று தோன்றுகின்றது. இங்கு நமது அக்ஞாதவாசத்தைக் கழித்தால் இவ்வரசனுக்கும் பிரியம் ஏற்படும்.

அர்ஜு:— ராஜ்பத்துக்கும் க்ஷேமம் ஏற்படலாம். இருந்தாலும், அண்ணா! நாம் எவ்வாறு இவ்வருஷத்தைக் கழிப்பதென்று யோசிக்கவேண்டாமா?

தர்ம:— ஆம். அர்ஜுனா!

அர்ஜு:— ராஜாதிராஜனாகவிருந்து திக்விஜயம்செய்து ராஜசூயயாகம் செய்த தாங்கள் எவ்வாறு மாறுவேஷம்பூண்டு பிறரைவணங்கி அக்ஞாதவாசத்தைக் கழிப்பீர்கள்?

தர்ம:— வத்ஸ! என்னைப்பற்றி நீ துயரப்படவேண்டாம். என் பிதா எனக்கு உபதேசித்த மந்திரத்தின் வலிமையால் நான் பிராமணவேஷம் தரித்துச் சாஸ்திரங்களையும் வேதங்களையும் எனக்குத்துணையாகக்கொண்டு விராடனிடம் சென்று கங்கபட்டர் என்ற நாமத்துடன் அக்ஞாதவாசகாலத்தைக் கழிக்கின்றேன். நான் தர்மபுத்ரனைச் சேர்ந்தவனென்றும் அவருக்குத் தர்மோபதேசம் செய்வதுடன் விநோதமாகப் பாச்சிகைகள் ஆடிக்கொண்டிருந்தேனென்றும் அவர் அக்ஞாதவாசத்துக்குச்சென்றதால் அவ்வொருவருஷத்தையும் இங்குக் கழிக்க எண்ணி வந்தேனென்றும் கூறுகின்றேன்.

பீம:— அண்ணா! தர்மநந்தன! அஜாத சத்ருவாகப் பிறந்தும் தங்களுடைய குணங்களே தங்களுக்குச் சத்ருக்களாக ஏற்பட்டுவிட்டனவே வனவாசத்திலிருந்தபோதிலும் ராஜாதிராஜனாக இருந்து காலங்கழித்தீர் இப்பொழுது தங்களுக்குத்தாழ்ந்தவரிடம் சேவகத்திற்குச் செல்வதா? ஒரு வார்த்தை சொல்லுங்கள். இக் கௌரவர்களேயல்ல; பீஷ்மத்ரோணாதி சிரேஷ்டர்களல்ல; அவர்களைச் சேர்ந்த யாராயிருந்தாலும் அவர்களை த்வம்சம்பண்ணி நிர்மூலமாக்கி அந்த ராஜ்யஸ்ரீயைத் தங்கள் பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன். ஹே தம்பி அர்ஜுனா! நீ, கற்ற அஸ்த்ரவித்யையெல்லாம்

எதற்காயது? வீர்யமே ப்ரதானமாகக்கொண்ட க்ஷத்ரிய வம்சத்தில் ஜனித்து ஸமஸ்த அஸ்த்ரவித்தைகளையும் கற்று எங்கும் புகழ்பெற்றுத் திக்விஜயம்செய்து ராஜசூய யாகம் செய்த இந்த மஹாப்ரபு ஒருவரிடத்தில் சேவகம் செய்ய இச்சிப்பதும். அதற்கு நீயும் நானும் சம்மதிப்பதும்! சீ இதென்ன விபரீதம்? இது என்னால் ஸஹிக்கமுடியாது.

அர்ஜு:— அண்ணா! இது பராக்ரமத்துக்குத் தருணமல்ல. இவ்வொருவருஷகாலத்தை எப்படியாவது கழித்துப் பின்பு நமது பராக்ரமத்தைக் காட்டலாம். ஆயினும் இவ்வருஷத்தை நீ எவ்வாறு கழிக்கப்போகின்றாயோ?

பீம:— நீ ஏன் பேடிபோல் பேசுகின்றாய்? உங்களைவிடக் கௌரவர்கள் எனக்குப் பிரியமான சகோதரர்களென்று எண்ணுவேன். அவர்களோ என் பராக்ரமத்தைக் காட்டுவதற்குத் தக்க சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகிறார்கள். நீங்களோ அதை மறைப்பதற்கும் நிருபயோகமாக்குவதற்கும் பார்க்கிறீர்கள். இந்தக் கதைதான் எதற்கு? கூந்தலை விரித்துக்கொண்டு தான்பட்ட அவமானத்தை நினைத்துத் துக்கித்துக்கொண்டிருக்கும் தேவியின் ஸ்திதியையாவது பார்க்கவேண்டாமா?

த்ரௌ:— நாதா! தங்களுக்கு அவ்வளவு அபிமானம் உண்டென்பதை நான் அறிவேன். ஆயினும் இவ்வொருவருஷகாலம் சென்ற பின்பு—

பீம:— யாக்ஞசேனி! இது வீரபத்நியின் வாக்கல்ல.

தர்ம:— அப்பா! உன் சாமர்த்தியத்தை நான் நன்கு அறிவேன். குபேரபட்டணத்துக்குச் சென்று சுகந்தபுஷ்பத்தைக் கொண்டு இந்நாரீரத்னத்தின் கூந்தலில் அலங்கரித்த உனக்கு உன் ப்ரதிக்ஞைபின்படியே இவள் கூந்தலை முடிவதற்குக் காலம ஏற்படும். நான் அதை அறியாதவனல்ல. தர்மத்தைக் கைவிடாது இந்த ஒருவருஷத்தைக் கழித்த பிறகு உன் ப்ரதிக்ஞையை முடித்துக்கொள்ளலாம். ஆயினும் இந்த அக்ஞாதவாஸத்தை நீ எப்படிக் கழிக்கப் போகின்றாய்.

பீம:— அண்ணா! இந்த ஸிம்மத்தை வீணாகக் கட்டிவிட்டீர்கள்; இருக்கட்டும். நான் விராடனிடம் சென்று பாகசாலாத்யக்ஷனாக இருந்து அவன் மனம் குளிர ஷட்ரஸோபேதமாக பாகங்கள் செய்தும் என் பராக்ரமத்துக்கு அவகாசம் ஏற்பட்டபொழுதெல்லாம் என் வீர்யத்தைக் காட்டியும் இவ்வொருவருஷகாலத்தையும் கழிப்பேன். நான் தர்மநந்தனரைச் சேர்ந்தவனென்றும், என் பெயர் பலாயனன் என்றும், அவர்கள் அக்ஞாதவாசத்திலிருப்பதால் நான் இங்கு வந்தேனென்றும் சொல்லுகின்றேன்.

அர்ஜு:— அண்ணா! என்னைக்குறித்து நீங்கள் கவலையுறவேண்டாம். பீமண்ணா என்னைப் பேடி என்று கூறிவிட்டார். நான் தேவலோகம் சென்றிருந்தபொழுது ஊர்வசி என்னைப் பேடியாகும்படி சபித்தாள். அது எனக்கு அக்ஞாதவாஸத்திற்கு உதவும்படி இந்திரன் வரமளித்தார். ஆகையால் பேடிரூபமெடுத்துப் பிருகந்நளை என்று நாமம்பூண்டு விராடபத்தினியிடம் சென்று கான வித்யாகௌசலத்தையும், ந்ருத்த நாட்ய விநோதத்தையும் ராஜகுமாரிகளுக்குக் கற்பித்து என் காலத்தைக் கழிக்கின்றேன்.

தர்ம:— [நகுல-சகதேவர்களைப்பார்த்து] குழந்தைகாள்! மாத்ரீதேவியால் ஜனித்துக் குந்தீதேவியால் வளர்க்கப்பட்டு அதிசுகுமாரர்களாகக் காலம் கழித்தீர்கள். நீங்கள் என் ஸஹோதரர்களானபோதிலும் உங்களை நான் என் பிரியநந்தனர்களைப் போலவே பாவித்துவந்தேன். இப்பொழுது உங்களை ஒருவரிடம் பணிவிடைசெய்ய ஏவுவதென்றால் என்மனம் சகிக்கவில்லையே. நீங்கள் எவ்வாறு இவ்வொருவருஷகாலத்தைக் கழிப்பீர்கள்?

நகுல:— அண்ணா! தங்கள் க்ருபையால் நான் அசுவசாஸ்த்ரத்தை நன்றாக அறிவேன். நான் விராடனிடம் சென்று தாமக்ரந்தி என்னும் பெயருடன் அசுவபாலகனாக இருந்து இவ்வொருவருஷத்தையும் கழிக்கின்றேன். நான் பாண்டவர்களைச் சேர்ந்தவன் என்றும், அவர்களுடைய அக்ஞாதவாச

ஒருவருஷம் முடியும்வரை நான் இங்கு தங்கியிருக்கின்றேன் என்றும் தெரிவிக்கிறேன்.

சக:— அண்ணு! நான் தந்த்ரீபாலனென்ற நாமதேயத்துடன் கோபாலகனுக இருந்து ஒருவருஷகாலத்தைக் கழித்துவிடுகிறேன்.

தர்ம:— த்ருபதராஜபுத்ரீ! உனக்கும் இப்படிப்பட்ட காலம் வந்துவிட்டதே யக்ஞவேதியிற் பிறந்து பரிசுத்தையான நீ ஒருவருக்கு அடிமையாக எவ்வாறு நடக்கமுடியும். உன் திவ்யரூபத்தைக் கண்டவர்கள் நீ வேலைக்காரியென்று எண்ணமாட்டார்கள். சமயபங்கம் நேரிடாமல் உன்னுல் எவ்வாறு நடக்கமுடியும்?

த்ரௌ:— நாதா! என்னைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். விராடபத்னியிடம் சென்று நான் பாண்டவர்களைச் சேர்ந்தவளென்றுகூறி, அவ்விடத்தில் அந்தத்தேவிக்குப் புஷ்பச்செண்டுகள் கட்டியும், கூந்தல் பின்னியும், அலங்கரித்தும், தங்களுடைய சரித்திரங்களையெல்லாம் சொல்லி மனங்குளிரச் செய்தும் நான் இவ்வொருவருஷ காலத்தைக் கழிக்கின்றேன். எனக்கு ஐவர் கந்தருவர்கள் நாயகர்கள் என்றும், யாராயினும் என்னைச் சிறிதேனும் அவமதிப்பாராயின் அவர்களுயிருக்கே ஹானி வருமென்றும் சொல்லிச் ஸைரந்திரி வ்ரதத்துடன் காலத்தைக் கழிக்கிறேன்.

பீம:— அண்ணு! இதென்ன அநியாயம்? ஐவர் சூரர்களுக்குப் பத்னியாயிருந்தும் யாக்ஞசேனியின்கதி இவ்வாறிருக்கவேண்டுமா? அண்ணு! உத்தரவுகொடுங்கள்.

தர்ம:— பீமா! இந்த ஒருவருஷம் கழிந்தபிறகு உனக்கு உத்தரவளிக்கின்றேன். நமது ஆசாரியர் வருகின்றுர். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பிறகு நாம் செல்வோம்.

[தௌம்யர் வருகிறுர். தர்மர் அர்க்யபாத்யாசமனீயங்களுடன் அவரை வரவேற்கின்றுர்.]

தௌம்ய:– விஜயீபவ. ஸமஸ்த மங்களாநிசந்து. வத்ஸ! தர்மநந்தன! பீமா! அர்ஜுந! குழந்தைகாள்! பதிவ்ரதாசிரோமணி பாஞ்சாலி! இப்பொழுது அக்ஞாதவாஸத்தை எப்படிக் கழிப்பதென்று தீர்மானித்துக்கொண்டீர்களா? இந்தப் பன்னிரண்டு வருஷம் வனவாசத்தைக் கழித்தது பெரிதல்ல. இவ்வொருவருஷத்தைப் பிறர் அறியாமற் கழிக்கவேண்டும். தர்மஸ்வரூபிகள் நீங்கள். எங்கிருந்தபோதிலும் எப்படியிருந்தபோதிலும் உங்கள் தர்மமே உங்களைக் காக்கும்.

தர்ம:— ஸ்வாமீ! நாங்கள் எப்படியிருக்கவேண்டுமோ அதைத் தீர்மானித்துக்கொண்டோம். இவ் விராடராஜனை அண்டியிருப்பதாக எண்ணியிருக்கின்றோம். தங்களுடைய க்ருபையால் இவ்வொருவருஷத்தையும் கழிக்கவேண்டும்.

தௌம்ய:–வத்ஸ! தர்மநந்தன! காலத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியது தர்மந்தான். வனத்திலிருந்தபோதிலும் ராஜாதிராஜனாக இருந்த நீ ஓர் அரசனிடம் சேவகாவ்ருத்தியில் இருப்பதென்றால், சாமான்யமன்று. ராஜதர்மங்கள் அநேகமிருக்கின்றன. அவை உனக்கு நன்றாகத்தெரியும். எல்லாம் தெரிந்த உங்களுக்கு நான் என்ன சொல்லப்போகிறேன். நீங்கள் ஆயுதங்களுடன் அங்குச் சென்றால் விபரீதமாக முடியும். ஆகையால் ஆயுதங்களையெல்லாம் விராடநகரின் ஸ்மசானத்தினருகில் தர்மதேவதையிடம் ஒப்புவித்துச்செல்லுங்கள்.

தர்ம:— சுவாமி! அப்படியே செய்கின்றோம். வந்தனம்.

[எல்லோரும் வணங்கி ஆசீர்வாதம் பெறுகின்றார்கள்.]

தௌம்ய:—உங்களுடைய அக்ஞாதவாஸம் நிர்விக்னமாக ஸமாப்தியாகக் கடவது. வத்ஸ! பீமா! இந்த அக்ஞாதவாஸத்திலும் உன் பராக்ரமத்துக்குக் குறைவில்லாமலிருக்கும். அஞ்சாதே நான் போய்வருகிறேன்.

[தௌம்யர் செல்லுகின்றார்.]

தர்ம:— அர்ஜுனா! நம்முடைய ஆயுதங்களையெல்லாம் ஆசாரியர் கூறியபடி ஸ்மசானத்தினருகிலிருக்கும் சமிவிருக்ஷத்தில் வைத்துவிட்டுச் செல்வோம். உன்னையும் என்னையும் தவிர அதனருகிற் சென்றவர்களுக்கு அவ்வாயுதங்கள் ஸர்ப்பங்களாகக்கடவது. இவ்வாயுதங்களைத் தருமதேவதையே ரக்ஷிக்கட்டும்.

[அனைவரும் செல்லுதல்]

அங்கம் 1.] [காட்சி 2.

சுதேக்ஷணையின் அந்தப்புரம்.

[சுதேக்ஷணை, தோழிகள், சைரந்திரீ : வருகிறார்கள்.]

சுதே:— [சைரந்திரியைப்பார்த்து] அம்மா! தாங்கள் யார்? எந்தக்குலம்? யாரைச்சேர்ந்தவர்கள்? எங்குச் செல்லுகின்றீர்கள்? இந்த நகரத்துக்குவந்தகாரணம் யாது? தங்களைப் பார்த்தால் இப்பூலோகவாஸியாகத் தோன்றவில்லை. தாங்கள் கந்தருவ வம்சத்தைச் சேர்ந்தவர்களா? வித்யாதரர்களா? சித்தர்களா? அல்லது தேவமாதா? அல்லது திரிமூர்த்திகளில் ஒருவரின் பத்னியா? இப்படிப்பட்ட திவ்யரூபத்துடன் பாதசாரியாக வருவதற்குக் காரணம் யாதோ? நான் அறியக்கூடுமோ?

சைரந்:— அம்மணி! தாங்கள் கூறின எந்த வம்சத்திலும் நான் உதித்தவளல்ல. நான் பாஞ்சாலீதேவிக்கு உயிர்த்தோழியாயிருந்தேன். என் துர்ப்பாக்கியத்தால் அவர்கள் ஒருவருஷம் அக்ஞாதவாஸத்தைக் கழிக்க எங்கோ சென்றுவிட்டார்கள். நானும் அவ்வொருவருஷத்தை எவ்வாறு கழிப்பதென்று யோசிக்கையில் தங்கள் திவ்ய குணங்களைக் கேள்வியுற்றுத் தங்களை நாடி வந்தேன்.

சுதே:— அம்மா! எனது பாக்யமே பாக்யம். இந்த க்ருஹத்தைத் தங்களுடையதாகவே பாவிக்கலாம். தங்கள் இஷ்டப்படி இருக்கலாம்.

சைரந்:— தேவி! அதற்குச் சில நிபந்தனைகளுண்டு. என்னை நீங்கள் நீசமான காரியங்களைச் செய்யும்படி ஏவலாகாது. உச்சிஷ்டத்தை நான் அருந்தமாட்டேன். பரபுருஷர்கள் என்கண் முன் தென்படலாகாது. நானும் தங்கள் மனம் களிக்க அழகாகக் கூந்தலைப் பின்னவும் புஷ்பச்செண்டுகளைக் கட்டவும் விசித்திரமாக மணிகளைக் கோக்கவும் செய்வேன். தங்களுக்குத் திலகமிட்டுச் சந்தனாதிகளால் அலங்கரித்து எப்பொழுதும் குதூகலத்துடன் இருக்கும்படி செய்வேன்.

சுதே:— கல்யாணி! மிகவும் சந்தோஷம். ஆனால் நீ யாரைச்சேர்ந்தவளென்று வினவியதற்கு என் பதில் கூறவில்லை.

சைரந்:— அம்மா! என் பிறப்புவிஷயத்தை நான் அறியேன். ஆனால் எனக்கு ஐவர் கந்தர்வர்கள் பதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் சதாசர்வகாலமும் என்னை ரக்ஷித்து எனக்கு ஒரு தீங்கும் வராதபடி காப்பாற்றுகிறார்கள். ஆகையால் நான் எங்கிருந்தபோதிலும் எப்படிப்பட்ட நிலைமையிலிருந்தபோதிலும் என்னைத் தீங்கு அணுகாது. எப்படிப்பட்ட பலிஷ்டர்களாயிருந்தாலும் என்னை ஸாமான்யமாகப் பாவித்து எனக்குக் கெடுதிசெய்ய நினைத்தால் அவர்களுக்குக் கட்டாயம் துன்பம் நேரிடும். ஆயினும் தங்களிடம் நான் ஒரு குற்றம் குறையில்லாமல் நடந்துவருவேன்.

சுதே:— அதை நான் அப்பொழுதே நினைத்தேன். இப்படிப்பட்ட திவ்யமங்களஸ்வரூபத்தைப்பார்த்தால் யாருக்குத்தான் மனம் சலனமடையாது. ஆயினும் தங்களுக்கு என் அரண்மனையில் யாதொருகஷ்டமும் நேரிடாது.

குமுதா:— அம்மணி! மஹாராஜா வருகிறார்கள்.

[விராடன் வருகிறான்.
சைரந்த்ரீ போகிறாள்.]

விராடன்:—கண்மணி! இங்கு ஒரு உருவம் ஜோதிபோல் தோன்றி மறைந்ததே! அதென்ன?

சுதே:— [தனக்குள்] நினைத்தேன் அப்பொழுதே. (பிரகாசம்) ஜோதியா? நான் ஒன்றும் அறியேனே!

விராடன்:—கண்மணி! இப்பொழுது நீ யாருடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தாய்? கிளிகளுடன் பேசிக்கொண்டிருந்தாயா? அல்லது குயில்களுடன் பேசிக்கொண்டிருந்தாயா? நான் வரும்பொழுது குயிலினிசைபோன்ற சப்தம் என்காதிற் பட்டது.

சுதே:— அதா? ஆம் நாதா! எனக்கு இன்று கிடைத்த பாக்யத்தைப் பற்றி நான் என்னசொல்வேன். பார்வதி, ஸரஸ்வதி: இவர்களுக்கொப்பான கண்களைப்போன்ற இரண்டு ரத்னங் கள் எனக்குக் கிடைத்தன. அவைகளை எவ்வாறு வர்ணிப் பேன். ஒன்று தேஜோருபமாயும் வினயத்துடனும் இருப்பது. மற்றது சகல சிருங்காரங்களையும் ஒன்றாகச் சேர்த்துத் திரட்டி உருவாகச்செய்யப்பட்டது.

விராடன்:—[சிரித்து] அப்படியா! அப்பேர்ப்பட்ட ரத்னங்கள் யாவை?

சுதே:— நாதா! ஏன் சிரிக்கின்றீர்கள். தங்கள் முகவிகாசத்தைப் பார்த்தால் நான் சொன்னதற்கு என்னைப்பரிகசிப்பதுபோலத் தோன்றுகின்றது. அப்படிப்பட்ட அத்யாச்சர்யவிஷயம் என்னவென்று எனக்குத் தெரிவிக்கலாகாதா?

விராடன்:—கண்மணீ! உன் னிடம்கூறவே நான் இங்குவந்தேன். இன்று நமக்கு ஏற்பட்டபாக்யத்தைப்பற்றி எவ்வாறு பிரசம்சிப் பது? நான்கு வேதங்கள்போன்ற நான்கு ரத்னங்கள் எனக்கு இன்றுகாலை கிடைத்தன. அப்படியிருக்க, உனக்கு இரண்டுரத்னங்கள் கிடைத்தன என்று கேள்வியுற்றவுடன் என்முகத்தில் விகாசம் ஏற்பட்டது.

சுதே:— என்ன ஆச்சர்யம்! இன்று காலையில்தானா தங்களுக்கும் அவ்வரிய ரத்னங்கள் அகப்பட்டன? நாதா! அப்படிப்பட்ட ரத்னங்கள் யாவை? கூறுங்கள்.

விராடன்:—கண்மணீ! நீ அறியாததென்னவிருக்கின்றது? நமது பாண்ட வர்கள் துரியோதனனுடைய மோசத்தால் பன்னிரண்டுவரு ஷம் ஆரண்யத்தில் வசித்துவந்ததை நீ அறிந்திருப்பாய்.

சுதே:— ஆம் நாதா! ஐயோ பாவம். மஹா உத்க்ருஷ்டமான அந்தத் தர்ம ஸ்வரூபிகளுக்கும் இத்தகைய கஷ்டங்கள் நேரிடுவதென்றால் உலகவாழ்க்கையை என்னவென்று கூறுவது. ஆயினும் அவர்களுக்கு என்ன குறை யிருக்கின்றது? அவர்களை ஸதாஸர்வகாலமும் ஸ்ரீகிருஷ்ணபகவான் கவசமாகநின்று ரக்ஷித்துவருகிறார். அர்ஜுனனுடைய மைந்தன் அபிமன்யு எப்படி வளர்ந்துவருகின்றானோ? நமது புத்திரி உத்தரையை அவனுக்கு எப்பொழுது பாணிக்ரஹணம் செய்யமுடியுமோ?

விராடன்:—கண்மணி! இன்னும் ஒருவருஷம் பொறுத்துக்கொள். இப்பொழுதுதான் பாண்டவர்கள் அக்ஞாதவாஸம் செய்யச் சென்றிருக்கிறார்கள். இப்பன்னிரண்டு மாதங்களும் கழிந்தவுடன் உன் மனோபீஷ்டம் நிறைவேறும்.

சுதே:— ஐயோ பாவம்! அவர்கள் எங்குச்சென்றார்களோ தெரியவில்லை. நாதா! அவர்கள் நாயகியான த்ரௌபதீதேவியிடம் பணிவிடைசெய்துகொண்டிருந்தவளாம், ஸைரந்த்ரீ ஜாதியிற் சேர்ந்தவளாம். தன்பிறப்பே தனக்குத் தெரியாதாம். அப்படிப்பட்ட திவ்யமங்களரூபமுள்ள ஒரு ஸ்த்ரீ இன்று காலையில் என்னிடம்வந்து, தான் பாண்டவர்களின் அக்ஞாதவாஸம் முடியும்வரை இங்கு இருக்க விருப்பங்கொண்டதாக உரைத்தாள். அந்த மாதுசிரோமணியின் ரூபத்தைக் கண்டுதான் தாங்கள் ஜோதியென நினைத்தீர்கள்.

விராடன்:—அப்படியா! என்ன ரூபம்! என்ன லாவண்யம்! இப்படிப்பட்ட ஸ்த்ரீயும் ஒரு பணிப்பெண்ணாக இருக்கமுடியுமா? (தனக்குள்) அதைப்பற்றி நமக்கென்ன? (ப்ரகாசம்) கண்மணி! மற்றொரு ரத்னம்?

சுதே:— நாதா! மற்றொன் றவ்யக்தியில்லாதது. ஆயினும் கானத்திலும் நாடியத்திலும் அபிநயத்திலும் பரமசாமர்த்தியமுடையது. நம்முடைய குழந்தை உத்தரைக்கு ந்ருத்த நாட்யங்களைக் கற்பிக்க அந்த ரத்னத்தை நியமித்திருக்கின்றேன். தங்களுக்குக் கிடைத்த ரத்னங்களை அறியவிரும்புகிறேன்,

விராடன்:—கண்மணி! இது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கின்றது. பிராமணராம்; ஆனால் முகத்தில் தேஜஸ்ஸும் பராக்ரமமும் பொங்கித் ததும்புகின்றது. வேதஸ்வரூபியாம்; ஆனால் மதுரமான வாக்கைப் பெற்றிருக்கின்றார். தர்மநிஷ்டராம்; ஆனால் சூதாட்டத்தில் அதிகப் பிரமைபாம். இப்படிப்பட்ட மஹாநுபாவர் தர்மபுத்திரரோடு ஸதாஸர்வகாலமும் இருந்தவராம். அவர் இன்றுகாலை நமது நகரத்தை நாடிவந்து என்னைச்சேர்ந்தார். அவரைக்கண்டதும் நான் பிரமித்துவிட்டேன். இப்பொழுது அவர் ஆஸ்தானமண்டபத்தில் தர்மத்தை நிலைநாட்டுவதற்கு எனக்கு ஸஹாயமாக இருக்கிறார்.

[உத்தரை வருகிறாள்.]

உத்தரை:—அம்மா! அம்மா! [விராடனைக்கண்டு] அண்ணா! அண்ணா! இதுவரை பால் கொடுக்காத பசுக்களெல்லாம் அபரிமிதமாகப் பாலை வருஷிக்கின்றன. என்னுடைய ராதா, கோகிலம்: இவைகளெல்லாம் நிரம்ப க்ஷீரத்தை அளிக்கின்றன. நான் அதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டேன். யாரோ ஒருவர் சிறந்த ரூபவானாக இருக்கின்றார். அவர் கோக்களைப் பால் கொடுக்கும்படி செய்கின்றார். எல்லோரும் அவ்வாச்சர்யத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நானும் போய்ப் பார்த்தேன். உடனே உங்களிடம்சொல்ல ஓடிவந்தேன்.

விராடன்:—[சுதேக்ஷணையைப் பார்த்து] கண்ணே! அந்நால்வரில் அவருமொருவர். அவர் நாமதேயம் தந்த்ரீபாலராம். கோக்களைக் காப்பவராம்.

[உத்தரகுமாரன் வருகிறான்.]

உத்தரன்:—அப்பா! நமது பஞ்சகல்யாணியை அடக்கமுடியாமல் அசுவபாலகர்களெல்லோரும் நேற்று முறையிட்டார்களே! அதைப் பிடித்து அதன்மீது ஆரோஹணம்செய்து அதை விதம் விதமாய் நாட்யமாடும்படி ஒருவர் செய்கிறார். அவர் இன்று காலையில் தங்களிடம் வேலையிலமர்ந்த தாமக்ரந்தி என்ற மஹாபுருஷராம். இதை ஜனங்கள் வெகு வேடிக்கையாகப் பார்க்கின்றார்கள். அதோபாருங்கள்.

சுதே:— [விராடனைப்பார்த்து] என்ன ஆச்சர்யம்! அசுவினீதேவதை யின் ரூபத்தை யொத்தரூபமுடையவராயிருக்கின்றார். எவ்வளவு நேர்த்தியாக அவ்வசுவத்தை நாட்டியமாட்டிவைக்கிறார்! அவர் யார்?

விராடன்:—அவர் பாண்டவர்களுடைய அசுவசாலையில் அத்யக்ஷராக இருந்தவராம். இன்று அகப்பட்ட நான்கு ரத்னங்களில் அவருமொருவர்.

சுதே:— நான்காவது ரத்னம்?

விராடன்:—கண்மணி! அந்த ரத்னத்தை நினைக்கும்பொழுதே எனக்குக் கௌரவம் ஏற்படுகிறது. எவ்வளவு பராக்ரமம்! என்ன தேஜஸ்! மலையையொத்த கௌரவமும் சமுத்திரத்தைப் போன்ற காம்பீர்யமும் சிம்மத்தின் பராக்ரமமும் கஜங்களின் மத்தகங்களைப்போன்ற புஜங்களும் பாலசூரியனது காந்தியும் உடையவராயிருந்தும் ஒருகையிற் கரண்டியும் மற்றொரு கையில் மத்தும் எடுத்து ஷட்ரஸோபேதமாகப் பாகம் செய்வதிற் சமர்த்தரென்று கூறிவந்தார்.

சுதே:— ஐயோ! பாவம்! அப்படிப்பட்ட பராக்ரமசாலிக்கு இத்தகைய தொழிலா ஏற்பட்டது?

உத்தரை:—[விராடனைப்பார்த்து] அண்ணா! எனக்கு இன்று காலை ப்ருகந்நளை ஒரு பதம் கற்றுக்கொடுத்தாள். அபிநயமுறைகளையும் முத்திரைகளையும் கற்பித்தாள். என்ன இனிமையாகப் பாடுகிறாள்! தாங்கள் கேட்கவில்லையே!

விராடன்:—[சுதேஷ்ணையைப்பார்த்து] கண்ணே ப்ருகந்நளை யார்?

சுதே:— பாண்டவர்களுடைய அந்தப்புரத்தில் நாட்டியங் கற்றுக் கொடுத்தவளாம். [உத்தரையைப் பார்த்து]. உத்தரா! அவளைப்பார்த்தால் உனக்கு என்ன தோன்றுகிறது?

உத்தரை:—அவளுக்கு அபிமன்யுவின் முகச்சாயல் இருக்கின்றது.

[விராடனும் சுதேஷ்ணையும் சிரிக்கின்றார்கள்].

விராடன்:--[உத்தரையை நோக்கி] குழந்தாய்! அபிமன்யூ யார்?

உத்தரை:--எனக்குத் தெரியாதா? நாங்கள் இருவரும் த்வாரகையில் விளையாடிக்கொண்டிருந்தோமே.

விராடன்:--கண்ணே! நீ அவனை விவாஹம் செய்துகொள்ளுகிருயா?

உத்தரை:--போங்கள் அண்ணு! எப்பொழுதும் விளையாட்டுத்தானு?

சுதே:-- [உத்தரையைப் பார்த்து] கண்மணி! இந்த ஒருவருஷமும் பொறுத்திரு. மாதவனுடைய கிருபையிருந்தால் உன் இஷ்டப்படியே விவாஹம் நடக்கும்.

உத்தரை:--என்ன அம்மா! நீயுமா பரிகாஸம் செய்கிருய்? நான் போகிறேன்.

சுதே:-- எங்கே? துவாரகைக்கா?

உத்தரை:--போ அம்மா. [விராடனைநோக்கி] அப்பா! நான் நன்ருக நாட்யம் கற்றுக்கொண்டபிறகு நீங்கள் நாட்யத்தைப் பார்க்கின்றீர்களா?

விராடன்:--அப்படியே ஆகட்டும்; போ அம்மா!

[உத்தரையும் உத்தாதுமாரனும் போதல்.]

விராடன்:--[சுதேக்ஷ்ணையைப் பார்த்து] கண்மணி! உன்னிடத்தில் ரகஸியமாக ஒன்று கூறவேண்டும். இத்தனை தர்மஸ்வரூபிகள் ஏககாலத்தில் நமது நாட்டிற்குவந்திருப்பதால் நமக்கு யாதொரு குறையும் ஏற்படாமல் மேலும் மேலும் அபிவிருத்தியே உண்டாகும். ஆயினும் அவர்கள் இங்கிருக்கும்வரை ஏதேனும் அதர்மம் நேரிட்டால் அது விபரீதமாக முடியும்.

சுதே:-- ஏன் இவ்வாறு பயப்படுகின்றீர்கள்.

விராடன்:--யாருடைய பாகுபலத்தால் இவ்விராஜ்யத்தை ஸத்ருபாதையின்றி நாம் பரிபாலனஞ்செய்துகொண்டு வருகின்றோமோ, அப்படிப்பட்ட உன் தமயனும் நம் சேனுபதியும் ஆன அவன் ஏதேனும்—........

சுதே:— நாதா! நானும் அவ்விதமே நினைத்தேன். இருவருக்கும் ஒரேமாதிரியாக மனதில் தோன்றியது ஆச்சரியம். சைரந்த்ரி அவன்முன் தோன்றாமல் நான் வெகு ஜாக்ரதையாய்ப்பார்த்துக்கொள்கிறேன். சாயங்காலமாகின்றது. நான் போய் வருகிறேன்.

[ஒரு சேவகன் வருதல்]

சேவகன்:—மஹாராஜா! கங்கபட்டர் ஸபைக்கு வந்துவிட்டாரென்றும் தங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாரென்றும் மந்திரிகள் தங்களிடம் தெரிவிக்கச்சொன்னார்கள்.

அங்கம் 2. **காட்சி 1.**

துர்யோதனன் அரண்மனையில் ஓர் அறை.

[கஞ்சுகி ப்ரவேசம்].

கஞ்சுகி:— துர்யோதனமஹாராஜா பாண்டவர்களுக்கு எவ்வளவு கெடுதல்செய்ய எண்ணியபோதிலும் அவர்களுக்கு மேன்மேலும் நன்மையே உண்டாகின்றது. அர்ஜுனன் தேவலோகத்தில் அடைந்த புகழைப்பற்றி நாரதர் ஸ்தோத்ரம் செய்ததைக் கேட்கக் கேட்க ஸுயோதனமஹாராஜாவின் கஞ்சுகியாகிய எனக்கே ஆநந்தமுண்டாகின்றது. தர்மம் ஓங்குவதென்றால் யார்மனம்தான் சந்துஷ்டியடையாது? ஸுயோதனமஹாராஜாவுக்கோ மேன்மேலும் அசூயையே அதிகமாகின்றது. இதுதான் ராஜபதவியின் பலன் போலும். அதோ மஹாராஜா வருகின்றார், கர்ணப்ரபுவுடன் ஸல்லாபம் செய்துகொண்டு. என்ன மகிமை! இவரை ஸதா பார்த்துவரும் எனக்கே இவரைப் பார்க்கும்போதெல்லாம் புதியவராகவே தோன்றுகின்றார். இவரைப் பார்க்க அச்சமும் பக்தியும் கௌரவமும் ஏற்படுகின்றன. என்ன ரூபம்! என்ன காந்தி! கர்ண சுயோதனர்கள் சேர்ந்துவருவதைப் பார்த்தால் ஏககாலத்தில் இரண்டு சூரியர்கள் உதித்ததுபோலிருக்கின்றது. இப்படிப்பட்ட சாம்ராஜ்பத்துட

னிருக்கும் இவ்வரசனுக்கு அவ்வசூயைமட்டும் இல்லாவிடில் எவ்வளவு மேன்மையாக இருக்கும்? இந்த ஒரு துர்க்குணம் எல்லாநற்குணங்களேயும் மறைத்துவிடுகிறது.

[துர்யோதனனும் கர்ணனும் ப்ரவேசம்.]

துர்யோ:—நண்ப! அர்ஜுநன் தேவேந்திரனுடன் அர்த்தாஸனத்தில் வீற்றிருந்தானென்று—

கஞ்சுகி:— விஜயதாம் ஆயுஷ்மந்தெள.

துர்யோ:—கேட்க உனக்கு அச்சமும் சம்ப்ரமமும் ஆநந்தமும் உண்டா கின்றதென்று சொன்னாய்! எனக்கோ மனத்தில் அந்த...... ......கொந்தளித்துக்கொண்டிருக்கிறது.

கர்ணன்:— சுயோதனா! வாஸ்தவம்தான். நமது பகைவர்கள் எவ்வளவு மேன்மையை அடைந்தபோதிலும் அவர்களை ஜயித்தோ மென்ற கீர்த்தியை நாம் பெறுவது அதற்குமேலான ஆநந்த மல்லவா? ஆயினும்,

துர்யோ:—நண்பா! உண்மையைப் பார். சிறுவயதுமுதல் நாமெல்லோ ரும் ஒன்றாகவே வளர்ந்துவந்தோம். ஒரேகாலத்திற் கல்வியைப் பயின்றோம். ஒரேஆசாரியரிடத்தில் அஸ்த்ர வித்யையைப் பெற்றோம். இருந்தபோதிலும் பால்யம்முதல் பாண்டவர்கள் நம்மைவிட எவ்விஷயத்திலும் மேன்மை யாகவேயிருக்கிறார்கள்.

கர்ணன்:— நண்பா! ராஜநீதியை அறிந்த உனக்கு ஏன் இந்த நீசகுணம்? அவர்களுக்கும் நமக்கும் எவ்வளவு பேதமிருக்கின்றது பார். என்னை ஸகாவென்று பாவித்ததும் நீதான். என்னை உன் னுடன் அர்த்தாஸநத்தில் வீற்றிருக்கும்படிசெய்ததும் நீ தான். உனக்குச்சமானமாக என்னை அரசனாக்கியதும் நீ தான். ஆனால் அந்தப் பாண்டவமத்யனுக்கோ ஸகா கண்ணன். போர்புரிந்து பரிசு கொடுப்பவரோ பரமசிவன். வீற்றிருக்கவோ ராஜஸூயாதியாகங்கள்செய்த க்ஷத்ரிய வீரர்க்கன்றி மற்றவர்க்குக் கிடைக்காத தேவேந்த்ரனுடைய ஸிம்மாஸநம், அவனுடையபுகழ் மூவுலகிலும்பரவியிருக்

கின்றது. அவனது கீர்த்திப்ரதாபம் எங்கும் புகழப்படு கின்றது. ஆயினும், அப்படிப்பட்டவனை ஜயித்து ராஜ்ய ஸ்ரீ பாண்டவர்களை அணுகாது செய்தபிறகுதான் எனக்கு மனஅமைதி உண்டாகும். இவ்வளவேன்? கந்தர்வர்களை வென்று உன்னையே அவன் விடுவித்தான். அவர்களுடைய ஸம்பந்தமோ தேவர்களோடும் லோககர்த்தர்களோடும். நமக்கோ!!

துர்யோ:—கர்ணு! உன்மனம் ஏன் இவ்வாறு சஞ்சலமடைகின்றது. அக் கிரீடியை வெல்லுதற்கென்றே உன்னிடத்தில் நாகாஸ்த் ரத்தை வைத்துக்கொண்டு ஏன் இப்படி அதைரியப்படுகிறாய்.

[ஒரு சாரன் வருகிறான்.]

சந்தன:— [வாயில் காப்பவரை நோக்கி] துர்யோதன மஹாராஜாவுக்குப் பிரியசமாசாரம் கொண்டுவந்திருக்கிறேன். உடனே பார்க்க வேண்டும்.

[சந்தனகன் துர்யோதனனைக் கண்டு வணங்குதல்]

துர்யோ:—யார்? சந்தனகனு! என்ன சமாசாரம்? த்வைதவனத்தில் பாண்டவர்களுடைய சமாசாரமென்ன?

சந்தன:— பாண்டவர்கள் த்வைதவனத்திலிருந்து தங்களுடைய அக்னி ஹோத்ரங்களையும் ரத கஜ துரகாதிகளையும் எடுத்துக் கொண்டு த்வாரகையை நோக்கிச் சென்றுவிட்டார்கள்.

கர்ணன்:— த்வாரகையை நோக்கிச் சென்றுவிட்டார்களென்று உனக்கு நன்றாய்த்தெரியுமா?

சந்தன:— ஆம் மகாராஜா! நானே பார்த்தேன், இங்குத் தெரிவிக்கவே விரைந்துவந்தேன்.

துர்யோ:— என்ன? கர்ணு! இதற்குள் பன்னிரண்டுவருஷங்கள் ஆய் விட்டனவா?

கஞ்சுகி:— ஆம் மஹாராஜா ! பன்னிரண்டுவருடங்களும் ஆய்விட்டன. இனிமேல் அவர்கள் அக்ஞாதவாஸத்தை எப்படிக் கழிக்கப் போகின்றார்களோ ?

கர்ணன்:— மிகவும் ஸந்தோஷம். நமது பராக்ரமத்தைக் காட்டுவதற்குத் தருணம் இவ்வருஷமுடிவிலேயே ஏற்படும். சுயோதனா ! நமது ஸேனைகளையெல்லாம் ஸித்தஞ்செய்யவேண்டும். அக்ஞாதவர்ஸம் முடிந்தவுடன் பாண்டவர்கள் ராஜ்யத்தை விரும்பி வருவார்கள். அப்பொழுது உன்பிதா தடுக்காவிட்டால் யுத்தந்தான் ஏற்படும்.

துர்யோ:— நண்ப ! என்ன சொல்லுகின்றாய்? ஏன் இந்த யோசனை? ப்ரபு மந்த்ர உத்ஸாக சக்திகளில் மந்த்ரசக்திக்குச் சமான மானது ஒன்றுமில்லை. ஆம் இதுதான் நல்ல யோசனை. கஞ்சுகி ! நமது சகுனிமாமாவை அழைத்துவா. இந்த அக்ஞாதவாஸத்திலேயே அவர்களைக் கண்டுபிடித்துவிட்டால் மறுபடியும் அவர்கள் பன்னிரண்டுவருஷம் வனவாஸமும் ஒருவருஷம் அக்ஞாதவர்ஸமும் செய்யநேரிடும்.

கர்ணன்:— சுயோதனா ! கேவலம் மோசத்தால் நாம் ராஜ்யத்தை அபகரித்தோமென்று உலகமுழுவதும் சொல்வதை நீ கேட்டதில்லையா ? அந்த அபகீர்த்தியை நீ எப்படிப் பொறுப்பாய் ? இன்னும் அவர்களைச் சூதுமார்க்கத்தால் வெல்வதா ? கௌரவ ஸிம்மங்களாகவிருந்து பராக்ரமத்தைக் காட்டாமல் மந்த்ர சக்தியினால் அவர்களைத் தடுப்பது வீரர்களுக்கு அழகன்று. அப்படி உனக்குப் போர்புரியச் சம்மதமும் தைரியமும் இல்லாவிட்டால் பாதிராஜ்யத்தை அளித்து அவர்களுடன் சமாதானம்செய்துகொண்டு உலகத்திற்கு நன்மையுண்டாகும்படி செய்.

துர்யோ:— கர்ணா ! யாதுரைத்தாய் ? சமாதானமாவதா ? சிறுவயது முதல் மந்த்ர சக்தியால் அவர்களை ஜயித்த நானா அவர்களுக்கு அர்த்தராஜ்யம் கொடுப்பேன் ? அர்த்த க்ராமங்கூடக் கொடுக்கமாட்டேன். மந்த்ர சக்தி பலிதமாகாமற்போனா,

லன்றோ பாகுபலத்தை நாடவேண்டும்? பாகுபலத்தில்தான் நமக்கென்ன குறைவா? நானும் என் 99 ஸஹோதரர்களும் நீயும் பீஷ்மர், த்ரோணர், க்ருபர், அசுவத்தாமா முதலான வர்களும் என்பக்கத்தில் இருக்க என்ன குறை? அதோ மாமா வருகின்றார்.

கர்ணன்:— மாமா! மாமா! வாவேண்டும்.

துர்யோ:—மாமா! நமஸ்காரம். உட்காருங்கள்.

[தன்னாசனத்தில் உட்கார வைக்கிறான்.]

சகுனி:— என்ன சமாசாரம்! உபசாரம் பலமாக இருக்கின்றது. என்ன விஷயம்?

துர்யோ:—மாமா! பாண்டவர்கள் இங்கிருந்துசென்று பன்னிரண்டு வருஷங்களானதை அறியாததுபோல் கேட்கிறீர்களே!

சகுனி:— ஆம். அதற்கென்ன இப்பொழுது?

துர்யோ:—இந்த அக்ஞாதவாஸத்தில் அவர்களை எப்படியாவது கண்டு பிடிக்கவேண்டாமா?

சகுனி:— ஓஹோ அதற்காகவா? அதுதான் மாமாவைத் தேடினாற் போலிருக்கிறது?

துர்யோ:—மாமா! தாங்கள் அவ்வாறு சொல்லலாகாது. தங்கள் க்ருபையாலன்றோ நான் வணங்காமுடிமன்னனாய் விளங்கு கின்றேன்.

சகுனி:— ஆமாம். சமயத்திற்குத்தானே மாமா? கோஷயாத்திரை சென்றிருந்தாயே! அப்பொழுது மாமா வேண்டியதில்லை.

துர்யோ:—மாமா! அந்த அவமானத்தைப்பற்றி இப்பொழுது ஏன் சொல்லுகிறீர்கள்? நான் அப்பொழுதே பிராயோபவேசம் செய்திருப்பேன். நீங்கள்தான் தடுத்தீர்கள். மாமா! இப் பொழுது அவர்களைக் கண்டுபிடித்து மறுபடியும் பன்னிரண்டுவருடம் காட்டிற்கனுப்பவேண்டும், அதற்கு ஏதேனும் உபாயம் சொல்லுங்கள்,

சகுனி:— ஏன்? அவர்களை நீயே கண்டுபிடிக்கிறது தானே?

துர்யோ:—அதற்குத்தான் உங்களுடைய மந்த்ராலோசனைவேண்டும்.

சகுனி:— எங்கேயிருப்பார்கள்? த்வாரகைக்குத்தான் சென்றிருப்பார்கள்.

[இரண்டாவது சாரன் வருதல்.]

துர்யோ:—நந்தகா! வா. என்ன விசேஷம்?

நந்தக:— மஹாராஜா! பாண்டவர்களுடைய ரத கஜ துரக பதாதிகளெல்லாம் விதுரமஹாராஜாவின் க்ருஹத்திற்கு வந்துவிட்டன. அங்கு விசாரித்ததில் பாண்டவர்கள் த்வைதவனத்திலிருந்து தங்களுடைய பரிவாரங்களை அனுப்பிவிட்டார்களென்றும் அவர்கள் எங்கு சென்றார்களென்று தெரியவில்லையென்றும் தெரியவருகிறது.

துர்யோ:—சந்தனக! பாண்டவர்கள் த்வாரகைக்குச்சென்றதாகக் கூறினையே?

சந்தனக:– ஆம் மஹாராஜா! அவர்கள் த்வாரகையை நோக்கித்தான் சென்றார்கள்.

நந்தக:— மஹாராஜா! இவன்சொல்வது அவ்வளவு சரியல்ல; ஒருவேளை அக்நிஹோத்ரங்களைமட்டும் அங்கே அனுப்பியிருக்கலாம்.

சந்தனக:– இல்லை இல்லை; பாண்டவர்கள் கஜாரோஹணம் அசுவாரோஹணம் செய்வதை நான் நேரில் பார்த்தேன்.

சகுனி:— சுயோதனா! உன்னைப்போல் அவர்களுக்கும் மந்த்ரசக்தியுண்டென்பதை அறிவாய். அங்கும் உன்சாரர்கள் இருப்பார்களென்று அறிந்து அவர்கள் உன் சாரர்களை ஏமாற்றியிருப்பார்கள்.

கர்ணன்:– [துர்யோதனனை நோக்கி] இருக்கும்; மாமாசொல்வது சரியாக இருக்கலாமென்று தோன்றுகிறது. [சந்தனகனை நோக்கி] சந்தனகா! நீ அவர்களைக் கடைசியாக எங்கு பார்த்தாய்?

சந்தனக:— மஹாராஜா! அவர்கள் த்வைதவனத்திலிருந்து த்வாரகையைநோக்கிச் செல்வதைக் கண்டேன். உடனே இங்கு தெரிவிக்க ஓடிவந்தேன்.

சகுனி:— அந்த கஜ துரகங்களின்மீது ஆரோஹித்திருந்தவர்கள் யாரென்று பார்த்தாயா?

நந்தக:— அவைகளின்மீதிருந்த அம்பாரியைமட்டும் பார்த்திருப்பான். உடனே—

சந்தனக:— இல்லை; இல்லை; சத்ர சாமரங்களும் இருந்தன.

சகுனி:— அதைப்பார்த்துவிட்டு ஓடிவந்துவிட்டான்.

கர்ணன்:— [துர்யோதனனைநோக்கி] சுயோதனா! இந்த மூடர்களால் நமக்கு உபயோகமில்லை. [சாரர்களைநோக்கி] சந்தனகா! நீ த்வாரகைக்குச்சென்று அங்கு விஷயங்களை நன்றாய்க் கவனித்துவா. நந்தகா! நீ விராடர்மனைக்குச்சென்று அவர்களுக்குள் ஒருவனை இருந்து சமாசாரத்தை முழுதும் தெரிந்துகொண்டுவா. நீங்கள் போகலாம். [சுயோதனனையும் சகுனியையும் நோக்கி] சுயோதனா! மாமா! அவர்கள் ஒருகாலும் த்வாரகைக்குச் சென்றிருக்கமாட்டார்கள்.

துர்யோ:— ஆம். மாமா! பலராமரோ என் பக்ஷவாதி; கர்ணன்கூறினபடி அவர்கள் ஒருபொழுதும் அங்கு சென்றிருக்கமாட்டார்கள்.

சகுனி:— ஆம். அது உண்மைதான். இவ்வளவு கவலையேன்? நாமேன் இதைப்பற்றி ஸ்ரமம் எடுத்துக்கொள்ளவேண்டும்? ஏதோ பாவம். எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்துவிட்டார்கள். இதற்கு நான் நிந்தனைக்கு ஆளானேன். இனியாவது அவர்கள் வந்தபிறகு பாதிராஜ்பத்தைக் கொடுத்து ஸமாதானம் செய்துகொள்ளுவது நலம். ஏன் அவர்களோடு இன்னும் பிடிவாதம்?

கர்ணன்:— மாமா! 'யுத்தத்திற்காவது சன்னத்தமாயிரு. அல்லது பாதிராஜ்யத்தையாவது கொடுத்துவிடு' என்று சொன்னேன். ஒன்றுக்கும் இணங்கமாட்டேன் என்கிறான் சுயோதனன். குறுக்குவழியாக ஜயிப்பது நமக்கு அழகா?

துர்யோ:—மாமா! என்னசொன்னீர்கள்? சமாதானமா? பாதிராஜ்யமா? பாண்டவர்களும் கௌரவர்களும் ஜன்மவிரோதிகள் என்று உலகத்தில் வதந்தி ஏற்பட்டுவிட்டது. ஆகையால் அதிற் புதுமை ஒன்றுமில்லை. அவர்களுக்குப் பாதிராஜ்யமல்ல; என் ராஜ்யத்தில் அரையடி பூமியேனும் கொடுக்கமாட்டேன்.

சகுனி:— ஆனால் அவர்களுடன் யுத்தஞ்செய்.

கர்ணன்:— அதுதான் நலமென்று நானும் நம்புகிறேன்.

துர்யோ:—மாமா! மந்த்ரமூர்த்தியாகிய உம்மை அடைந்தும் நான் யுத்தத்திற்குப் போவதென்றால் தங்களுக்குக் கீர்த்தியா? யுத்தமென்றால் ஜயாபஜயம் ஒருவருடையதன்று. சந்தேகாஸ்பதமான யுத்தமார்க்கத்தைவிட்டு, அவர்களை இப்பொழுது கண்டுபிடித்தால் மறுபடியும் அவர்கள் பன்னிரண்டு வருஷம் வனவாஸம்செய்யவேண்டியதுதானே. அதற்கு மார்க்கம் தெரிவியுங்கள்.

சகுனி:— சுயோதனா! நீ எவ்வாறு அவர்களைக் கண்டுபிடிக்கப்போகிறாய். அவர்களை நீ ஸாமான்யர்களென்று எண்ணலாகாது. அவர்களோ தேவாம்ச ஸம்பூதர்கள். அந்தந்த அம்சத்தில் அவர்கள் மறைந்திருந்தால்?

துர்யோ:— மாமா! ஏன் என்னை இவ்வாறு பரீக்ஷிக்கிறீர்கள். தாங்கள் சொன்னது முடியாத காரியம். ஆயினும், அவர்களும் வெகு ஜாக்ரதையாய் ஒருவருஷகாலத்தைக் கழிக்கவேண்டுமென்றிருப்பார்கள். அவர்களை எப்படியாவது கண்டுபிடிக்கும்படியான யுக்தியைச் சொல்லுங்கள்.

கர்ணன்:—மாமா! பாண்டவர்கள் எங்கிருந்தபோதிலும் வெளியாகிவிடுவார்கள். அவர்கள் அக்ஞாதமாக இருப்பதென்றால் அந்த பலிஷ்டன் பீமனை யார்தான் கண்டுகொள்ளமாட்டார்கள்? அவர்களைக் கண்டுபிடிக்கும்விதத்தைமாத்திரம் சொல்லுங்கள்.

சகுனி:—கர்ண! நீ சொல்வது வாஸ்தவம். அவர்களிருக்குமிட மெல்லாம் நீர்வளமும் நிலவளமும் ஸம்பூர்ணமாகவிருக்கும்; ப்ரஜைகள் சந்துஷ்டியுடனும் அமைதியுடனும் இருப்பார்கள்; நித்யோத்ஸவங்கள் கோலாகலமாக நடந்துகொண்டிருக்கும்; ந்ருத்த நாட்யங்கள் எங்கும் ஸதா நடக்கும்; பல வ்ருக்ஷங்களெல்லாம் ஸதாஸர்வகாலமும் பலத்தை யளிக்கும்; புஷ்பங்களெல்லாம் எக்காலத்திலும் விகஸித்துப் பரிமளத்தைப் பரவச்செய்யும்; துஷ்டர்கள் தலையெடுக்கமாட்டார்கள்; பலிஷ்டர்களும் பயந்திருப்பார்கள். இந்தச் சின்னங்களைக்கொண்டு அவர்களிருக்கும் ப்ரதேசத்தை அறியலாம்.

துர்யோ:—ஆம். மாமா! நன்றாகச் சொன்னீர்கள்.

கர்ணன்:—ஆயினும், அவர்களைக் கண்டுபிடிக்கும் மார்க்கம் என்ன?

சகுனி:— நம்முடைய ஆஸ்தானமல்லன் அதிசாமர்த்தியசாலி. அவனை எதிர்ப்பதற்கு ஸாமான்யர்களால் முடியாது. அவன் பீமனுடன் பலதடவைகளில் மற்போர் புரிந்திருக்கிறான். அவனை வெல்லக்கூடியவன் பீமன் ஒருவன்தான் என்று எண்ணுகின்றேன்.

கர்ணன்:—ஆம். சுயோதனா! அவனை இப்பொழுதே த்வாரகை முதலிய பல தேசங்களுக்கும் அனுப்பிப் பாண்டவர்கள் எங்கிருக்கின்றார்களென்று அறிந்துவரும்படி செய்வோம்.

துர்யோ:—மாமா! நன்றாகச் சொன்னீர்கள்.

கஞ்சுகி:—மஹாராஜா! கொலுமண்டபத்துக்கு எல்லோரும் வந்து தங்கள்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

துர்யோ:— அப்படியா! [சகுனியைப் பார்த்து] மாமா! உங்களுக்கு அநந்தகோடி நமஸ்காரம். [கர்ணனைப் பார்த்து] வா கர்ணா! போவோம்.

அங்கம்–II. காட்சி–II.

விராடநகரத்தில் ஸுதேக்ஷ்ணதேவியின் அந்தப்புர நந்தவனம்.

[சைரந்த்ரீ ப்ரவேசம்.]

சைரந்:— ஜகதீசா! ஜகந்நாதா! நாங்கள் எங்கள் ஞாதிகளால் ஏற்பட்ட சகல கஷ்டங்களுக்கும் உட்பட்டுத் தர்மத்துக்குக் கட்டுப்பட்டுப் பன்னிரண்டுவருஷ வனவாஸத்தை ஒரு குறையுமின்றிக் கழித்துவிட்டோம். இந்த அக்ஞாத வாஸத்தையும் பெரும்பாலும் கழித்துவிட்டோம். இன்னும் சிறிதுகாலந்தான் இருக்கின்றது. இதையும் உன்னுடைய கருணையால் ஸமயபங்கம் நேரிடாது நாங்கள் கழிக்கும்படி செய்வாயா! ஏனோ இன்று என்றுமில்லாத சஞ்சலம் ஏற்பட்டு ஹ்ருதயத்தைப் பாதிக்கின்றது. அன்று அப்பாவி துச்சாசனன் என் கூந்தலைப் பிடித்து இழுக்குங்கால் ஏற்பட்ட துர்நிமித்தங்களெல்லாம் இன்று தோன்றுகின்றன. ஹே க்ருஷ்ணா! பரந்தாமா! உன்னை அண்டினோரைக் கைவிடாது காப்பாற்றும்பொருட்டே நீ அச்சுதனாக விளங்குகிறாய். கண்ணா! நான் உன் தங்கையாக விருந்தும் எனக்கும் இப்படிப்பட்டநிலைமை ஏற்படுவதா? என்ன உலக மாயை!

இவ்வுலகில் சிலர் உன்னையன்றி உலகமென்பதே வேறில்லையென்றும் த்ருஸ்யமான ஸமஸ்தமும் ப்ராந்தியினால் ஏற்படுவனவென்றும் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஞானிகளுக்கு இன்பமும் இல்லை; துன்பமென்பதும் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட மஹான்கள் அரியர்.

மற்றும் சிலர் நீயே உலகமென்றும் உலகமே நீ யென்றும் எண்ணுவார்கள். இப்படி யிருக்கும் மஹான்கள் ராகத்வேஷாதிகள் அற்றவராய் உன்னுடைய லீலாவிநோதங்களை யறிந்து கேவலம் அந்த ஆநந்தத்தையே நாடியிருப்பார்கள்.

இன்னும் சிலர் ஸமஸ்த ப்ரபஞ்சமும் உன்னுடைய அருளினால்தான் ப்ரகாசிக்கின்றனவென்றும், அப்படிப்பட்ட உன்னுடைய அருளைப்பெறுவதே ஜன்மத்துக்குப் பலமென்றும் எண்ணுவார்கள். அவர்கள், அவ்வருளைப் பெறுவதற்கே உன் திவ்ய குணங்களையும் உன் லீலாவைபவங்களையும் காதாரக்கேட்டும், வாக்காரக் கீர்த்தனம்செய்தும், மனதார ஸ்மரித்தும், உன்பாதங்களை ஸேவித்தும் கைகளார அர்ச்சித்தும், சிரசாரவந்தித்தும் ஸதாஸர்வகாலமும் உனக்குத் தாஸ்யம் செய்து உன்னுடைய தர்ம மார்க்கங்களை அநுஷ்டித்து உன் ஸக்யத்தையடைந்து ஸமஸ்தவிதத்தாலும் உனக்கே ஆத்மஸமர்ப்பணம் செய்வார்கள். அப்படிச்செய்யும் பக்தர்களை ஒரு குறையுமின்றி நீ ரக்ஷிப்பாயென்றுதான் உன்னைப் "பக்தவத்ஸலன்" என்று சொல்லுவார்கள்.

என்ன ஆச்சர்யம்! நித்ய நிர்ம்மல நிர்க்குண நிர்விகார நிரதிசய ஆநந்தஸ்வரூபியாக இருக்கும் நீ அவ்யக்த நிலைமையிலிருந்து வ்யக்தமானவுடன் உனக்கும் இன்ப துன்பங்களும் ராகத்வேஷங்களும் அகங்கார மமகாரங்களும் ஏற்படுகின்றனவே! உனக்கும் ஸ்நேக உதாஸீந த்வேஷ குணங்கள் ஏற்படுகின்றனவே! கண்ணா! உன் பக்தர்களாகிய எங்களுக்கு ஸமயபங்கம் நேரிடாமல் இந்த அக்ஞாதவாஸம் கடைத்தேறும்படி செய்வாயாக. [மலர்பறிக்கச்செல்லுகிறாள்.]

[கீசகன் ப்ரவேசம்.]

கீசகன்:—வனபாலா! நான் இங்குவந்து சுமார் பத்துமாதங்களாயின. இப்பொழுது நூதனமாக என்ன என்ன செடிகள் வளர்த்திருக்கின்றாய்?

வனபால:—தங்கள் ஸஹோதரியின் நந்தவனம் இப்பொழுது அபூர்வமான எழிலைப் பெற்றிருக்கின்றது. தாங்கள் இங்குவருவது அபூர்வமாயிற்றே! இன்று வந்ததற்குக் காரணம் அறியலாமோ?

கீசகன் :—என்ன விசேஷம்? நீ கூறியதும் உண்மைதான். இப்பூம்பொழில் புதிதான ஒரு சோபையை அடைந்திருக்கின்றது. ஒருகால் நான் சிலமாதங்களாக இதைப் பார்க்காததனால் அவ்வாறு தோன்றுகின்றதோ? ஹா! ஹா! என்ன நறுமணம்! இதுகாறும் இப்படிப்பட்ட சுகந்தத்தை நான் அநுபவித்ததில்லையே!

வனபால:—ஸ்வாமி! இப்பொழுது இந்தப் பூங்காவனத்தில் எத்தகைய புஷ்பங்களும் எக்காலத்திலும் புஷ்பிக்கின்றன அவைகளுக்குத் தோஹதம் என்பதே தேவையில்லை. அதைக் காண எனக்கு மிகவும் ஆச்சர்யமாக இருக்கின்றது. இதோ பாருங்கள்! அசோகம் தேசியினுடைய பாததாடனமில்லாமலே எவ்வளவு ரமணீயமாகப் புஷ்பித்திருக்கின்றது!

கீசகன்:— வனபால! இதென்ன புதுமை! இக்காலத்தில் மா பழுத்திருக்கின்றது?

வனபால:—இதில் ஒரு விசேஷமுண்டு. ஒரு பழமாவது கைக்கு எட்டுவதும் இல்லை; நம்மால் பறிக்கவும் முடியாது. நேற்று நான் தங்களுக்கனுப்பியவை தானாக நழுவினவை.

கீசகன்:— ஓ! ஓ!; அப்படியா! அவைகள் வெகு மதுரமாக இருந்தன. ஹா! ஹா! என்ன கானம்!

வனபால:—ஐயனே! அது கானமன்று. குயில்கள் இங்கு நடக்கும் கானத்தைக் கேட்டுத் தாமும் எதிரொலிக்கின்றன.

கீசகன்:— என்ன இது! யாரோ ஒரு ஸ்த்ரீ தன்னுடைய நிலைமையை நினைந்து வருந்துகின்றாள். என்ன ஜங்காரம் இது?

வனபால:—தாங்கள் இங்கு புதியராய் வந்ததற்காகக் குயில்கள் பாடுகின்றன. அன்னங்கள் தாளம்போடுகின்றன. லதைகள் புஷ்பக்கொத்துக்களுடன் ஆடுகின்றன.

கீசகன்:— ஆனால் அவைகளுக்கெல்லாம் நட்டுவன் நீதானோ!

வனபால:—அல்ல, தென்றல்.

கீசகன்:— நன்றாகச்சொன்னாய்! நான் இங்கே சற்று உலாவிவிட்டுவரு கின்றேன். நீ இங்கேயே இரு. [உலாவிவரும்பொழுது ஸைரந்த்ரியைப் பார்த்துத் தனக்குள்] என்ன உருவம்! என்ன ஜோதி! இவள் யார்! எந்தநாட்டு மாது! இங்கே எவ்வாறு வந்தாள்! தெய்வமங்கையோ! தெய்வமங்கையாயின் இப்பொழுது இங்கு வருவானேன்! ஸௌந்தர்யஸாகரத்திற் பிறந்த திருமகளோ! அல்லது ஸௌந்தர்யமே பெண்வடிவத்துடன் என்னெதிர்ப்பட்டதோ! அல்லது இவ் வனதேவதையோ! முகம் பூர்ணசந்த்ரன்போல் விளங்குகின்றதே! என்ன நடை! என்ன அழகு! ஹா! ஹா! இவளைக் காணப் பலவாயிரம் கண்களன்றோ வேண்டும்! ஸௌந்தர்யம் இவளிடமிருந்தே தோன்றியதுபோலும்! இவள் பூக்கொய்யும் விசித்திரந்தான் என்ன! மைவிழியால் நோக்கி மலர்க்கையாற் றீண்டலும் கிளைகள்வளைந்து மலர்களை யளிக்கின்றனவே! இவ்வாறு மங்கையர்விஷயத்தில் மரக்கிளையும் வணங்குமாயின் மானிடர் வணங்குதல் சொல்லவும் வேண்டுமோ! வனபாலன் கூறியது இப்பொழுதுதான் விளங்கியது. இவள் சஞ்சரிப்பதாலன்றோ இப்பூஞ்சோலை இவ்வளவுசோபையுடன் துலங்குகின்றது. [வனபாலனைநோக்கி ப்ரகாசமாய்] இத்திருமகள் இங்கே எப்படி வந்தாள்?

வனபால:—[தனக்குள்]. அடாடா! இவன்கண்ணில் இவள் படவேண்டுமா? இங்கே ஸைரந்த்ரி இருப்பதை நான் அறிந்திருந்தால் அப்பொழுதே ஏதாவது போக்குச்சொல்லி இவனை வெளியே அனுப்பியிருப்பேனே. அவள் இங்கிருந்து சென்றுவிட்டாளென்றல்லவோ நினைத்திருந்தேன்.

கீசகன்:— சீ மூர்க்கா! ஏன் பதில் சொல்லாமல் நிற்கின்றாய்?

வனபால:—[பயந்து] ... சொ ... சொ ... சொல்றேன்.

கீசகன்:— என்ன பிதற்றுகின்றாய்? என்முன் நில்லாதே. [தனக்குள்] ஹா! ஹா! இவளை அடைவேனாகில் நான் பாக்கியவானாவேன், இவளை அடைவேனாகில் என்புதேன். அதிபராக்ரம

சாலியாகிய யான் விரும்பிய அனைத்தும் பெறத்தக்கவ னன்றோ? ஆதலின் யானே சென்று அறிந்து இப்பெண் மணியை அடைகின்றேன்.

[கீசகன் போதல். ஸைரந்த்ரீ வருதல்]

ஸைரந்த்ரீ: [புஷ்பங்களைக் கொய்தெடுத்துக்கொண்டு தனக்குள்] ஹே பக வான்! திவ்யமூர்த்தி! இதோ உமக்கு வந்தனம் செய்கின் றேன். எவ்விதமாகவோ நான் இதுவரை அக்ஞாதவாஸத்திற் பெரும்பாகத்தை யாதொருகுறையுமின்றிக் கழித்துவிட் டேன். இன்னம் சிறிது காலம்தான் இருக்கிறது. என் னைக் காப்பாற்றுவீராக. [ப்ரகாசமாக] வனஜா! குமுதா! ஸரஸா! எங்கு சென்றீர்கள் என் தோழிகளெல்லாரும்? [கீசகன் தன்ஸமீபம் வரக் கண்டு] இவன் யார்? இங்கே வரு கின்றானே? பார்க்கப் பயமாயிருக்கிறதே. இந்நந்தவனத் துள் ஆடவர் வருவதில்லையென்று கூறினார்களே.

கீசகன்:—[ஸைரந்த்ரீயைக் கிட்டி] பெண்மணி! நீ யார்?

ஸைரந்த்ரீ:-[முகத்தைத் திருப்பிக்கொண்டு] ஐயா! நான் ஸுதேஷ்ணா தேவியின் பணிப்பெண். மலர்கொய்யவந்தேன். நான் செல்லு கின்றேன்.

கீசகன்:— மங்கையர்க்கரசே! சற்று நில். உன் உருவமோ மிக்க அழ குடையதாயிருக்கிறது. பருவமோ நல்ல யௌவனம். ரூபத் தையும் யௌவனத்தையும் வீணாகச்செய்து இப்படிப் பாங்கி யாக வருவதற்குக் காரணமென்ன? இதுவரை நான் உன்னை அரண்மனையில் கண்டதில்லையே?. நீ யார்? எங்கிருந்து இங்குவந்தாய்?

ஸைரந்த்ரீ:- அதைப்பற்றித் தங்களுக்கேன் கவலை? நானோ ஓர் அற்பப் பாங்கி.

கீசகன்:— கல்யாணி! நீ எவ்விடத்திலிருந்து விராடநகரைவந்தடைந் தாய்? உண்மையை உரைப்பாயாக. தையல் நாயகி! உனது குரலோ கோகிலத்தின் இனிமையான த்வனியை ஒத்திருக்கி றது. உன்னைப்போன்ற ரூபலாவண்யமுள்ள ஸ்த்ரீயை

நான் பூமண்டலத்தில் இதுவரை பார்த்ததில்லை. நீ யார்? தாமரைமலரை வாசஸ்தலமாகக்கொண்ட மஹாலக்ஷ்மியோ! ஹ்ரீயோ! ஸ்ரீயோ! கீர்த்தியோ! காந்தியோ! அல்லது மதனனுடைய ரதீதேவியோ? இவர்களுள் நீ யார்? நான் அறியலாகாதா?

ஸைரந்த்ரீ:-ஐயா! பரபுருஷர்களுடன் பேசுவதில்லையென்பது என் விரதம். என்னைத் தாங்கள் இவ்வாறு வர்ணிப்பது தகுதியல்ல.

கீசகன்:—பெண்மணி! உன்னைக்கண்டவர் யார்தான் மதிமயங்காதிருப்பார்கள். சந்திரனைக்கண்ட சந்திரகாந்தக்கல் உருகாதிருக்குமா? மேகத்தைக்கண்ட மயில் ஆடாதிருக்குமா? சூரியனைக் கண்ட பத்மம் விகசிக்காதிருக்குமா? பருவகாலங்களில் சமுத்திரம் பொங்காதிருக்குமா? இப்படிப்பட்ட திவ்ய ரூபத்தைக்கண்டும் மன அமைதியுடன் இருக்கமுடியுமா? அது என்னுடைய குற்றமன்று. உன்னுடைய குற்றம். என்மனம் உன்னை நாடியதென்றால் அதை அடக்க எனக்குச் சக்தியில்லை.

ஸைரந்த்ரீ:-ஐயா! தாங்கள் யாரோ நான் அறியேன். ஆயினும், உலக தர்மங்களையெல்லாம் நன்குணர்ந்தவரென்று எண்ணுகின்றேன். பரஸ்த்ரீயைப் பார்ப்பதே தவறு; அவளுடன் வார்த்தையாடுவது கொடிது. அவளைக் கண்டு மனத்தை அடக்காமல் தத்தளிப்பது மிகவும் கொடியது

கீசகன்:—பெண்மணி! நான் யாரென்று நீ அறியாய்போலும். இந்நாடு நகரனைத்தையும் அடக்கியாள்பவன் யான். இந்த விராடராஜனும் அவனுடைய ராஜ்யமும் என்னுடைய அதீனமே. என் பெயர் கீசகன். என்னை ஸிம்மபலன் என்றும் சொல்லுவார்கள். போர்புரிவதில் சல்லியன், பீமன், பலராமன்: இவர்களே எனக்குச் சமானமானவர்கள். ஆயினும் என்னை ஜயிக்கத்தக்கவர்கள் இவ்வுலகில் ஒருவரும் இல்லை. அப்படிப்பட்ட பராக்ரமம்பொருந்திய நான் உனக்கு அடிமையாகிவிட்டேன்.

ஸைரந்த்ரீ:-ஐயா! வேண்டத்தகாதவளும் ஹீனஜாதியிற்பிறந்தவளும் வேலைக்காரியும் அருவருக்கத்தக்கவளும் கூந்தல்பின்னுகிற வளுமான என்மீது தாங்கள் ஏன் ஆசைப்படுகிறீர்கள்? நானோ பிறருடையமனைவியாயிருக்கின்றேன். உமக்கு மங்கள முண்டாகட்டும். இது உமக்குத் தகாது.

கீசகன்:— கண்மணி! நன்றாகச்சொன்னாய். இப்படிப்பட்ட திவ்யரூப வதியான நீ தாழ்மையான ஸ்திதியிலிருப்பது தகாது. ஸுதேக்ஷணையைப்போன்ற எத்தனையோ ஸ்த்ரீகளை நான் உனக்குத் தாதிகளாக நியமிக்கின்றேன். மூன்று லோகங் களையும் நடுங்கச்செய்ய எனக்குச் சக்தியுண்டு. யக்ஷ கின் னர கந்தர்வர்களும் என்பெயரைக் கேட்டமாத்திரத்தில் நடுங்குவரர்கள். கண்மணி! நான் உன்னைப்பெறத்தகாதவ னல்லன். என்னை அடைந்து ஸமஸ்த இன்பங்களையும் அநு பவிப்பாயாக.

ஸைரந்த்ரீ:-சூதபுத்ரரே! உலகில் ப்ராணிகளுக்குத் தர்மந்தான் முக்ய மானது. தர்மத்தினால்தான் இவ்வுலகம் நிலைநிற்கின்றது. தர்மத்தினால்தான் சூர்யசந்த்ராதி தேவதைகள் எல்லோரும் தங்கள் நிலையினின்றும் தவறாதிருக்கின்றார்கள். ப்ராணா தாரமான வாயுவும் தர்மத்திற்கடங்கியே நிற்கின்றது. சமுத் திரமும் அதனாலேயே கரைக்குளடங்கி நிற்கின்றது. ஆகை யால் தர்மத்தைச் சிந்தியும். எனக்கு ஐவர் கந்தருவர் பதிக ளாக இருக்கின்றார்கள். நான் அவர்களுடைய பஹிர்ப்ராணன் போலச் சஞ்சரிப்பவள். ஆகையால் தங்களால் நான் அடை யத்தக்கவளில்லை. எப்படிப்பட்ட பலவானாயினும் எனக்கு அணுவளவேனும் தீங்கிழைப்பனாயின் அவன் உயிரிழக்க நேரும்.

கீசகன்:— இவ்வளவு தர்மங்கள் அறிந்த நீ மிகவும் பரிதபிக்கும் ஒரு புருஷனைத் தள்ளிச் செல்லலாமா? ஆர்த்தரக்ஷணம் ப்ரதம தர்மமல்லவா? இது என்னுடைய குற்றமா? உன்னை நான் கண்டதுமுதல் அவ்வநங்கன் என்னெதிரில்வரப் பயந்து

என்மனத்தில் நின்று அதைப் பிளக்கின்றனே. இவ்வாறு பரிதபிக்கும் என்னை நீ ஆதரிக்கவேண்டாமா?

ஸைரந்த்ரீ:- [தனக்குள்] சீ! இவன் மூடனாகவிருக்கின்றான். தர்மங்களை எவ்வளவு எடுத்துக்கூறியும் பயன்படவில்லை. இனி நான் இங்கிருக்கலாகாது. [ப்ரகாசமாய்] ஸூதபுத்ரரே! இவ்வாறு பரஸ்த்ரீகளை இச்சித்து நாஸத்தையடைந்த இராவணாதிகளை மறந்தீரா? பரஸ்த்ரீகள் தாய்க்குச்சமமாகப் பாவிக்கத்தக்கவர்கள். இன்று இந்த லோகத்தில் இப்படிப்பட்ட துஷ்க்ருத்யங்களைச் செய்தால் நாளை இதற்குப் பலன் அநுபவிக்குங்கால் அந்த யமன் பழுக்கக் காய்ச்சின இரும்பினால் செய்யப்பட்ட ஸ்த்ரீரூபத்தைத் தழுவச்செய்வான்.

கீசகன்:— பெண்ணரசே! அந்த ராவணன் பயந்து ரூபத்தை மாற்றிக்கொண்டு சந்நியாசியாகவந்து திருட்டுத்தொழிலிற் புகுந்து பலஹீனனாய் மடிந்தான். நானோ ஸிம்மபலன்; உன்னை நேரில் வேண்டுகிறேன். நான் நரகத்தில் யமனிடும் தண்டனையையாவது பொறுப்பேனேயன்றி இப்பொழுது நான் அநுபவிக்கும் நரகவேதனையை என்னால் ஸஹிக்கமுடியாது. உன்கடாக்ஷ வீக்ஷணமாவது என்மீது படலாகாதா?

ஸைரந்த்ரீ:- [தனக்குள்] நாம் சொல்லச்சொல்ல இவனுக்குப் புத்தி விபரீதமாகவே மாறுகின்றது. இனி நாம் இங்கிருக்கலாகாது. [ப்ரகாசமாய்] ஏ மூடா! நான் கூறவேண்டியதைக் கூறிவிட்டேன். இனி உன்தலைவிதி எப்படியோ அப்படி நடக்கட்டும்

[ஸைரந்த்ரீ போதல்.]

கீசகன்:— கண்மணி! என்னை ஆதரிக்காமல் இப்படிச் செல்லலாமா? இதோ உன் பாதத்தில் வீழ்கின்றேன்.

அங்கம் II. காட்சி III.

சுதேக்ஷ்ணையின் அந்தப்புரம்.

சுதேக்ஷ்ணையும் ஸைரந்த்ரியும் ப்ரவேசம்.

[கீசகன் வருகிறான். உடனே ஸைரந்த்ரி போய்விடுகின்றாள்.]

கீசகன்:— அக்கா! நமஸ்காரம்.

சுதேக்ஷ:— இஷ்டப்ராப்தி அடைவாய். வா. உட்கார்.

கீசகன்:— அது நிறைவேறுவது உன்கையில்தானிருக்கின்றது. அக்கா! இப்பொழுது உன்பக்கத்திலிருந்து சென்ற மாது சிரோமணி யார்?

சுதேக்ஷ:— யாரைப்பற்றிக் கேட்கின்றாய்? இங்கே சேடிகள் பலர் சஞ்சரிக்கின்றார்கள்.

கீசகன்:— இப்பொழுது இங்கு ஸம்பாஷித்துக்கொண்டிருந்தாள். என்னைக் கண்டவுடன் திடீரென்று எழுந்துசென்றாள்.

சுதேக்ஷ:— அவளா? அவள் தாழ்ந்தஜாதியில் பிறந்தவள். என்னிடத்தில் அடிமையாக இருக்கின்றாள். அவளைப்பற்றி என்ன?

கீசகன்:— அக்கா! அத் திவ்யரூபத்தை நான் இன்று உன் நந்தவனத்திற் கண்டேன். களித்திருந்தேன். ஆசைகொண்டேன்.

சுதேக்ஷ:— யார்மீது?

கீசகன்:— அவள் நாமதேயம் ஸைரந்த்ரியாம். அந்தச் சந்த்ரமுகியுடன் ஸம்பாஷித்தேன். அவள் ஒரு நல்வார்த்தையேனும் உரைக்காமல் திடீரென்று இங்கு வந்துவிட்டாள். அவள் யார்? எங்கிருப்பவள்?

சுதேக்ஷ:— யார்மீது? ஸைரந்த்ரியின்மீதா? உனக்கென்ன? புத்தி கெட்டுவிட்டதா? அல்லது பைத்தியம் பிடித்துவிட்டதா? அழகில் ரம்பையையும் பேச்சில் கிளியையும் நடையில் ஹம்ஸத்தையும் பழிக்கக்கூடிய சுந்தரிகள் அநேகர் உனக்கிருக்க, நீசஜாதியிற் பிறந்து பணிவிடைசெய்யும் ஒரு அற்பஸ்த்ரீமீதா நீ மனத்தைச்செலுத்துவது? கேட்டவர்கள் நகைப்பார்களே!

கீசகன்:— அக்கா! அம்மாதின்மீது என்மனம் நாடாமலிருக்கவேண்டுமென்று நீ இவ்வாறு உரைக்கின்றாய்! அக் காந்தாமணியைப் போன்ற ஸ்த்ரீகள் இவ்வரண்மனையில் ஒருவருமில்லை. ஏன்? மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் மற்றெவ்வுலகத்திலும் அவளைப்போன்ற ஒரு பெண்மணியைக் காணமுடியாது. இப்படிப்பட்ட ரூபலாவண்யத்தைப் பிரமன் எவ்வாறு படைத்தானோ! அவளழகை விரித்துரைக்க ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும் முடியாது.

சுதேக்ஷ:— அப்பா! உனக்கேன் இப்படிப்பட்ட புத்தி ஏற்பட்டது? பரஸ்த்ரீகளைக் கண்ணெடுத்தும் பார்க்கலாகாதென்பதை நீ அறியாயோ? அதனால் ஏற்படும் துக்கங்களை நீ நினைக்கவில்லையோ? அவர்களுடைய பர்த்தாக்களறிந்தால் ப்ராணஹாநி ஏற்படும். அரசர் அறிந்தால் கொடிய தண்டனை விதிப்பார். பந்துக்கள் அறிந்தால் குலத்துக்கே ஹீனம் சம்பவிக்கும். உலகோர் அறிந்தால் நிந்திப்பார்கள். இவ்வளவு துக்கங்களுக்கும் இடமான பரஸ்த்ரீவாஞ்சை உனக்கேன்?

கீசகன்:— அக்கா! இந்தத் தர்மங்களையெல்லாம் நான் நன்கறிவேன். இவையெல்லாம் பலமில்லாத மூடர்கள் ஏட்டில் எழுதிவைத்த புராணங்கள். நீ அந்த மனோன்மணியை நன்றாக அறியவில்லைபோலும்! அவள் நல்ல வம்சத்தில்தான் உதித்திருக்கவேண்டும். அவளையடைந்தவர்களுக்கு இப்பூமண்டலத்தையே ஆளும் பராக்ரமம் உண்டாகுமென்பதில் சந்தேகம் இல்லை. அவள் என்னை அடையும்வரை நீ அவளைப் பரஸ்த்ரீ என்று சொல்லலாம். அவள் என்னை யடைந்தபிறகு எவ்வாறு பரஸ்த்ரீ ஆவாள்? உன்னை நமஸ்கரிக்கின்றேன். அந்த ஜகதேக ரத்நத்தை நான் அடையும்வரை என் மனம் தாளாது. ஆவி நில்லாது. ஹ்ருதயம் கலங்கிவிடும். ஆகையால் அக்கா! எப்படியாவது நான் அவளைப் பார்க்கும்படி செய்யலாகாதா?

சுதேக்ஷ:- கீசகா! என்ன விபரீதகாலம் உனக்கு ஏற்பட்டது? ஒரு கால் இன்னும் அவளுக்கு விவாகமாகவில்லை என்று எண்ணுகிறாய்போலும். அவளுக்கு ஐவர் கந்தருவர் பதிகளாக இருக்கின்றார்கள். இவ்விஷயத்தை அவள் இங்கு வந்தவுடனே என்னிடம் தெரிவித்திருக்கின்றாள். இது சத்தியம். அவர்கள் அவளை சதாஸர்வகாலமும் ரக்ஷித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு காரணத்தால் அவள் இங்கு அடிமையாக வந்திருக்கின்றாள். அவள் என்னிடத்திற் சேரும்பொழுதே பரபுருஷர்கள் தன் கண்ணிற்படாதிருத்தற்கும், தன்னிஷ்டப்படி நடப்பதற்கும் என்னிடம் உறுதிமொழிவாங்கிக்கொண்டபிறகே இங்கிருக்கச் சம்மதித்தனள் ✓

கீசகன்:— அவள் நன்றாகமொழிந்தாள். இந்தத் திவ்யவிக்ரஹம் என் கண்ணிற்படாதிருந்தால் என் மனநிலை இப்படி இராது. இப்பொழுதோ அவளுடைய அழகாகிய மதுவை நான் பருகிவிட்டேன். ஆதலால் எனக்கு மயக்கம் உண்டாகிவிட்டது. நான் அவளை அடையாவிடில் என் ப்ராணன் போய்விடும்போலிருக்கிறது. நான் உயிரிழப்பது உனக்குச் சம்மதமானால் நீ உன்னிஷ்டப்படி செய்.

சுதேக்ஷ:- [தனக்குள்] என்ன கஷ்டம். நான் இதுவரை எவ்வளவோ ஜாக்ரதையாக இருந்தேனே! இப்பொழுது அவள் இவன்கண்ணிற் படவேண்டுமா? ஐயோ! இவனுக்கோ எவ்வளவு சொன்னபோதிலும் தெரியவில்லை. [ப்ரகாசமாய்] கீசகா! நான் சொல்வதைக் கேள். உன் நலத்தைக் கருதியே சொல்லுகின்றேன். இத் துராசையை விட்டுவிடு. அப்படி என்வார்த்தைக்கிணங்காவிட்டால் நீ எனக்கு ஸஹோதரனல்லவென்று எண்ணும்படி நேரிடும்.

கீசகன்:— அக்கா! நான் என்ன? பலஹீனனென்று எண்ணுகின்றாயா? அல்லது எனக்குச் சாமர்த்தியமில்லையென்று நினைக்கிறாயா? மூன்றுலகத்தையும் ஜயிக்க எனக்கு வல்லமை உண்டு. ஐந்து கந்தருவர்களல்ல; ஆயிரம் கந்தருவர்கள்

வந்து எதிர்த்தபோதிலும் அவர்களை வெல்ல எனக்குச் சௌரியமில்லையா? அப்படி அவர்களால் எனக்கு மரண மேற்படுவது உண்மையானால் இம்மதனாக்நியில் வேவதை விட அவர்களால் மடிவது நலமே. எப்படியாவது நான் அவளை ஏகாந்தமாய்ப் பார்க்கும்படி நீ செய்யவேண்டும்.

சுதேக்ஷ:— கீசகா! நீ என் தம்பியாகப் பிறக்காவிட்டால் நான் உனக்கு இப்படி எடுத்துக்கூறமாட்டேன். ஐயோ! இந்த ஸஹோதர வாஞ்சை என்னைப் பாதிக்கின்றது. நீ கெடுவதுடன் உன்னுடன்பிறந்தாரையும் நாசமடையச்செய்வாய். அக் கந்தருவர்களோ மஹாபலிஷ்டர்களாம். தர்மத்தோடுகூடியிருப்பவர்களாம். நீ எவ்வளவு பலிஷ்டனாக இருந்தபோதிலும் பாதாரகமனம் பண்ண இச்சிக்கும் உனக்கு அப்பலம் எப்படி உபயோகப்படப்போகின்றது. உன் கதி இப்படியானால் உன்னை யார்தான் தடுக்கமுடியும்! ஐயோ! இப்படிப்பட்ட காலமும் நேரவேண்டுமா? [தனக்குள்] எப்படியும் இவனுக்கு அந்தியகாலம் ஸமீபித்துவிட்டது; இங்கு மதனாலேயோ, அங்கு கந்தருவர்களாலேயோ! இவனுக்கு உதவிசெய்யலாமென்றாலோ என்னை அண்டிவந்தவளைக் கைவிட்டு மான ஹானி செய்தேனென்ற அபகீர்த்தி ஏற்படுமே. சீ! இப்படிப்பட்ட துஷ்டன் உயிருடனிருப்பதைவிட இறப்பதே மேல். [ப்ரகாசமாய்] கீசகா! கடைசிமுறை சொல்லுகின்றேன். கேள். இதை விட்டுவிடு. அவளோ பதிவ்ருதாதிலகம். நான் அம்மாதுசிரோமணியினிடம் அதிக மரியாதையுடனிருந்துவருகிறேன். அவளுடைய மனம் சிறிது கலங்கினாலும், அன்றி அவளுடைய கண்ணீரில் ஒருதுளி நம் நாட்டில் விழுந்தாலும், அல்லது அவளது பாதிவ்ருத்யத்துக்குச் சிறிதேனும் பங்கம் நேரிட்டாலும் நீ நாசமாய்ப் போவதுமன்றி இந்த நாடு நகரம் நமது குலம் வம்சம் சகலமும் இந்த லோகத்தில் அழிந்துபோவதுடன் பரலோகத்திலும் எந்த நரகத்தில் நாம் தவிக்கவேண்டிவருமோ? இவ்வற்பசுகத்தை விரும்பி உன்னையொத்த புத்திமான்கள் ஆழ்ந்த நரகத்தில் வீழ்வார்களா? நான் மறுமுறையும் சொன்னேன். என் வார்த்தையை உல்லங்கனம் செய்யாதே. உன் துஷ்டநடத்தையை இப்பொழுதே விட்டுவிடு.

கீசகன்:— அக்கா! என்னுடைய சுகதுக்கங்களை உன்னுடையதாகப் பாவிப்பாயெனக் கருதி உன்னிடம் தெரிவித்தேன். நான் சுகத்தையடைவது உனக்கு இஷ்டமில்லையா? ஏன்? இந்த ராஜ்யமெல்லாம் யாருடைய பாகுபலத்தால் இருக்கின்றதென்று அறியாயா? இந்த ஸிம்மபலனாகிய நான் நினைத்த மாத்திரத்தில் உன் நிலைமையைக் குறைத்து நான் இச்சித்த பொருளையடைய எனக்குச் சக்தியில்லையென்று எண்ணுகிறாயா? அக்கா! நான் சுகமாக இருக்க உனக்கிஷ்டமில்லையெனின் நான் ஏன் உயிர்தரித்திருக்கவேண்டும்? இதோ உன்னெதிரிலேயே தற்கொலைசெய்துகொள்ளுகின்றேன்.

[உடைவாளால் குத்திக்கொள்ள முயலல்.]

சுதேக்ஷ்:— [தடுத்து] தம்பி! என்ன மூர்க்கத்தனம்? என்ன தௌராத்மியம். [தனக்குள்] இந்தப்பழி நமக்கெதற்கு? [ப்ரகாசமாய்] கீசகா! உன்னிஷ்டப்படியே ஆகட்டும். நீ போய்வா.

கீசகன்:— அக்கா! உனக்கு அநேக நமஸ்காரம். நீ என் தமக்கையென்பதை இப்பொழுதுதான் நிலைநிறுத்தினாய். ஜாக்ரதை. சீக்ரம் அனுப்பவேண்டும்.

சுதேக்ஷ்:— அப்படியே. [கீசகன் வெளியேபோகப் புறப்படுதலைக்கண்டு] அப்பா! இங்குவா. உன் முககமலத்தை நான் இன்னும் ஒருதடவை பார்க்கட்டும். [பார்த்து] இதுவரை நீ இங்கிருந்ததால் உன் பலத்தால் நான் எவ்வளவோ சௌக்கியங்களை அனுபவித்துவந்தேன். அந்தக் கண்ணன் இவ்வுலகத்திலாயினும்சரி, வேறு எவ்வுலகத்திலாயினும் சரி, உனக்கு மங்களத்தை அளிப்பாராக. போய்வா.

கீசகன்:— நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நான் போய்வருகிறேன். நீ அவளைச் சீக்ரம் அனுப்புகின்றாயா? [போதல்.]

சுதேக்ஷ்:— [தனக்குள்] இனி மறுபடியும் வருவதேது? ஐயோ நூறு ஸஹோதாருடன்பிறந்த எனக்கும் துர்யோதனாதிகளுக்கும் ஸாம்யம் என்று எண்ணினேன். அம் மகாபுருஷர்களாகிய பாண்டவர்கள் அக்ஞாதவாஸம் கழித்துவந்தவுடன் ஒருகால்

போர் நேரிடின் துர்யோதனாதிகளுக் கெதிராக என் ஸஹோதரர்கள் பாண்டவர்களுக்கு ஸஹாயமாயிருப்பார்களென்று எண்ணியிருந்தேன். இப்பொழுது நான் என்னசெய்வது? அவனுடைய புத்தியோ சிதறிப்போய்விட்டது. தன் மனநிலையை அவன் அறியவில்லை. நான் கூறியபடி ஸைரந்த்ரியை அனுப்பாவிட்டால் தற்கொலை செய்துகொள்வான். அல்லது ராஜ்பத்தை நாசஞ்செய்துவிடுவான். இவ்வளவு பெரிய ராஜ்பம் நாசமடைவதைக்காட்டிலும் அவன் ஒருவன் போனாற் போகட்டும். [யோசித்து] ஆம். இதுவும் ஒரு யோசனைதான். [ப்ரகாசமாய்] குமுதா! நீ கீசகனுடைய பத்தினிகளிடம் சென்று அவர்களுடைய மாங்கல்யத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு அவர்களுடைய பதியின் மனத்தைத் திருப்ப வழிதேடிக்கொள்ளச் சொல். [குமுதாவை அருகில் அழைத்து இரகசியமாகச் சங்கதிசொல்லி யனுப்பக் குமுதா போனபின் தனக்குள்] ஐயோ என்மனம் பதறுகின்றதே! தெய்வமே! ஏன் எனக்கு இப்படிப்பட்ட துர்க்கதியை ஏற்படுத்தினாய்! அவளோ மஹா குணவதி. பதிவ்ருதா சிரோமணி. சீ! நான் ஏன் பயப்படவேண்டும்? அவளுடைய கற்பிற்கு ஒருகாலும் அழிவு ஏற்படாதென்று நன்கறிந்திருந்தும் நான் ஏன் துக்கிக்கின்றேன்? ஆடும் நாடகத்தில் நானும் ஒரு நாடகமாடவேண்டுமா? ஐயோ! இதுதான் முதற்காட்சியா? [ப்ரகாசமாய்] ஈசனே? ஈசனே! [சயனத்தில் ஸயனித்து] ஸாஸா! ஸாஸா! ஸைரந்த்ரீ எங்கே?

[ஸைரந்த்ரீ வருதல்.]

ஸைரந்த்ரீ:- அம்மா என்னகட்டளை? ஏன் அழைத்தீர்கள்?

ஸுதேஷ்ண:— என்பக்கத்தில்வந்து சற்று உட்கார். இன்று எனக்குத் தாகமும் தாபமும் மிகவும் அதிகம். ஏதோ என்மனத்தில் சஞ்சலம் ஏற்பட்டிருக்கின்றது. தேகமெல்லாம் நடுங்குகின்றது. ஒருபகாரம் செய்வாயா?

ஸைரந்த்ரீ:- அம்மா! என்னசெய்யவேண்டும்?

சுதேக்ஷ:—என் தம்பி கீசகனிடம் திவ்யமான மது இருக்கின்றது. அதை வாங்கிக்கொண்டுவா. இங்கிருக்கும் வேறு யாரை யேனும் அனுப்பலாமென்றாலோ அவர்கள் அவ்வளவு பரிசுத்தர்களல்ல. ஆதலால் உன்னை யனுப்புகின்றேன். இந்தத் தங்கக்கிண்ணத்தை எடுத்துக்கொள். நான் கேட்ட தாகச்சொல்லி இதுநிறைய மதுவைவாங்கிவா. அம்மா!

ஸைரந்த்ரீ:-[ஆச்சர்யத்துடன் தனக்குள்] என்ன இது! இந்தத் தேவியும் அவனுடைய துன்மார்க்கத்திற்கு இணங்கிவிட்டாளா!! தெய்வமே! நான் இப்பொழுது என்னசெய்வேன்? அங்கே சென்றால் என்கதி என்ன ஆகுமோ? செல்லாவிட்டாலோ இதுவரை என்னை ஆதரித்த தேவியின் ஆணையை மீறினவ ளாவேன். ஐயோ? எனக்கு இன்னது செய்வதெனத் தோன்றவில்லையே. [ப்ரகாசமாய்] அம்மா! அம்மா!! இதுவரை எவ்வளவோ மரியாதையுடன் பாதுகாத்துவந்த தாங்கள் இப் பொழுது என்னை இப்படி ஏவலாமா? பாபுருஷர்களைப் பார்ப்பதில்லையென்று முன்பே நான் தங்களிடம் தெரிவிக்க வில்லையா? தங்களிடத்தில் நான் அடிமையாக இருக்கும் பொழுது எனக்கு ஏதேனும் அவமானம் ஏற்பட்டால் தங்களுக்கும் இழிவல்லவா?

சுதேக்ஷ:—ஸைரந்த்ரீ! என்மனநிலைமை அறியாமல் நீ இவ்வாறு பேசு கின்றாய். என்தம்பி அப்படிப்பட்ட துஷ்டனில்லை. எப் படியிருந்தபோதிலும் உன் பதிகளால் காக்கப்படும் உனக்கு என்னதுன்பம் நேரப்போகிறது? நீதான் அம்மதுவை வாங்கிவரத் தகுந்தவளென்று எண்ணி உன்னை அனுப்பு கின்றேன். நீ நேரே அவனிடம்சென்று கேட்கவேண்டிய தில்லை. அங்கு லலிதா இருப்பாள். நான் கூறியதாக வுரைத்து என்தம்பியிடமிருந்து மதுவை வாங்கித்தரச் சொல். அம்மா! இனி, பேசுவதற்கும் எனக்குச் சக்தி யில்லை.—........கொண்டுவந்துவிட்டனையா?

ஸைரந்த்ரீ:-அம்மா! தாங்கள் மனஸ்தாபப்படவேண்டாம். என்விதிப்படி நடக்கட்டும். தங்களிடத்தில் நான் இருக்குமளவும் தாங்களிட்ட வேலையைச் செய்யவேண்டியவள்தானே? ஆயினும், இப்படிப்பட்டநிலைமை வாராதென்று எண்ணினேன். போய் வருகிறேன். [போதல்.]

அங்கம் III. காட்சி I.

வீராடன்நகரில் ஒரு வீதி.

[ஸைரந்த்ரீ வருதல்.]

ஸைரந்த்ரீ:-ஹே முராரே! பரந்தாமா! உனக்கு இதுவும்ஒரு விளையாட்டா? இவ்வுலகில் துஷ்டர்களை ஸிக்ஷிக்கவேண்டுமானால் எங்களைப்போன்ற சிஷ்டர்களைத் துன்புறுத்தியபிறகா ஸிக்ஷிக்கவேண்டும்? அவர்கள் முடிவில் அடையும் தண்டனையைவிட நாங்கள்படும் துயரம் எவ்வளவோ அதிகமாக இருக்கின்றதே. த்ருபதசக்ரவர்த்தியின் செல்வக்குமாரியாகப் பிறந்து, மூன்றுலகத்தையும் ஜயிக்கவல்ல பாண்டுபுத்ரர்களைப் பதிகளாகப் பெற்று, தாசதாசீஜனங்கள்சூழ ஸமஸ்த ஸாம்ராஜ்யவைபவங்களையும் அனுபவித்து, அப் பரமாத்மா - வாஸுதேவன்- ஜகந்நாதன்-கண்ணன்-கருணைக்குப் பாத்ரமாயுள்ள நான் இப்பொழுது பிறர்க்குப் பாங்கியாய் என் தேவியின் கட்டளைக்குப்பயந்து பரமதுஷ்டனும் காமியுமான நீச கீசகனிடம் செல்லும்படி நேரிட்டதே! ஐயோ! என்னகாலம் இது? அன்று எனக்கு மானபங்கம் நேர்ந்தபொழுது என் பர்த்தாக்கள் தர்மத்துக்குக் கட்டுப்பட்டு ஒன்றும் செய்யமுடியாதிருந்தார்கள். அந்தத் தர்மத்தை நிலைநாட்டுவதற்கே நிர்மலமூர்த்தி-தர்மஸ்வரூபி-ஒருவராலும் ஜயிக்கப்படாத யுதிஷ்டிரர்-தர்மநந்தனர் தம் ஸஹோதரர்களுடன் இப்பொழுதும் ஹீனஸ்திதியில் இருக்கின்றார். யாரைக்குறித்து நான் துக்கப்படுவது. இவ்விஷயத்தைச் சிறிதேனும் என் நாதர்கள் அறிவார்களாகில் இந்தத் துஷ்டனைத் தண்டித்துவிடுவார்கள். ஐயோ! நான் எந்த வ்ருக்ஷத்தின் நிழலைநாடி இதுவரை வசித்துவந்தேனோ அந்த வ்ருக்ஷத்தின் கிளை

களையே வெட்டவேண்டியிருக்கிறதே. ஹே முராரே! த்வாரகா வாஸா! ஹ்ருஷீகேசா! அந்தத் துஷ்டனுடைய மனநிலையை மாற்றி என்னை ஆதரிக்கலாகாதா? இந்த ஒருமாதமும் நிந்தனையின்றி நாங்கள் காலத்தைக் கழிக்கும்படி செய்யலாகாதா? [சூர்யனைப்பார்த்து] ஹே தேஜோமூர்த்தி! தினமணி! ஜோதிர்மணி! ஹே கர்மஸாக்ஷி!

வஸர்வலோகப்ரகாசித காஞ்சநாபூஷித
ஜ்யோதிர்மணே! தினமணே!

ஸஹஸ்ரகிரணஜாத வரவர்ணநிர்மலநிராகரிஷ்ண
ப்ரகாசகர! திவாகர!

வஸர்வலோகஸந்தாப ப்ரணாசந ஸர்வஜ்ஞ
வந்தனவந்த்ய வந்திதவாஞ்சிதஸம்பூர்ணித
ஸகலஸுரவந்த! வந்திதபாதந!

ஜகந்நாத நிரஞ்ஜநப்ரதீப்த பாபாபஹாரிணீய
கர்மஸாக்ஷிந்! ப்ரணதவத்ஸலதிநு!
ஸஹஸ்ரகிரணாகரயிநு! நமஸ்தே நமஸ்தே நம:

சூர்யன்:— [தோன்றி] பயப்படவேண்டாம். நான் ஸதா ரக்ஷிக்கிறேன்.

ஸைரந்த்ரீ:-[கண் திறந்துபார்த்து வணங்குதல்.]

அங்கம் III. காட்சி II.

கீசகன் அரண்மனை.

[கீசகன் ப்ரவேசம்.]

கீசகன்:— இவ்வளவுநேரமாகியும் என் ஹ்ருதயேச்வரி ஏன் வரவில்லை! நான் ஏன் அன்று அங்கு அவளைக் கண்டேன்? ஏ பாழான மனமே! இதுவரை என்னுடன் சுகமாக வசித்துவந்து அந்த ரூபத்தைக்கண்டவுடன் நீ என்னைவிட்டு அகன்றனையே. உனக்கேன் அவ்வளவு சபலம்? உன்னைக் கட்டுவதற்கு எனக்குப் பலமில்லாமற்போயிற்றே! ஒருவேளை என தமக்கை அவளை அனுப்பாமலிருப்பாளோ? அப்படி இராது,

ஸஹோதராவாஞ்சை அவளுக்கு மிகவும் அதிகம். கட்டாயம் அனுப்புவாள். ஒருவேளை ஸைரந்த்ரீ வாராமல் எங்கேனும் சென்றுவிடுவாளோ? அவள் அப்படிச்செய்யமாட்டாள். அவள் தர்மத்தை நன்கறிந்தவள். இங்குவருவதாக என் தமக்கையிடம் வாக்களித்தபிறகு அதினின்றும் தவறமாட்டாள். ஸைரந்த்ரீ! ஹா! ஹா! அப்பெயரைச் சொன்னமாத்திரத்தில் நீ என்முன் நிற்கின்றாயே. உனது ஸர்வ அங்கங்களையும் வர்ணிக்க என்னால் சாத்யமா? வண்டுகள்போன்ற அளகங்களையும், நீலோத்பலத்தையொத்த கருவிழிகளையும், உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கும்படியான இடையையும், வாழைத்தண்டுபோன்ற ஊருப்ரதேசத்தையும், பாக்குமட்டையைஒத்த கால்களையும், பத்மம்போன்ற பாதங்களையும் உடைய உன்னை எவ்வாறு வர்ணிப்பேன்? ஏதோ ஒரு முத்தம் தா!

[கீசகன்மனைவி முரளீ வருதல்.]

முரளீ:— நாதா! இதோ தருகின்றேன்.

கீசகன்:— [எழுந்து ப்ரமித்து] தேவி! இந்த ஆஸனத்தில் உட்கார். [தலைக்குள்] என்ன ப்ரமாதம் ஸம்பவித்துவிட்டது! இவளுக்கு யார் கூறியிருப்பார்கள்! [ப்ரகாசமாய்] தேவி! ஏது இப்பொழுது இங்குவந்தது? ஏன் உன்முகம் வாடியிருக்கின்றது? எப்பொழுது என்னிடம்வந்தாலும் நீ ஆலிங்கனம்செய்து கொள்வாயே? ஏன் இன்று அம்மாதிரி நடக்கவில்லை? எதன் பொருட்டு இவ்வளவு விசனத்துடனிருக்கின்றாய்? மூன்றுலகத்தையும் ஜயிக்கவல்ல என்னை நாயகனாக அடைந்திருந்தும் நீ ஏன் இவ்வாறு கவலைப்படுகிறாய்? உன்னை யார் என்ன சொன்னார்கள்?

முரளீ:— பிராணநாதா! எனக்கு மாங்கல்யப்பிச்சை தாரும்.

[காலில்விழுதல்].

கீசகன்:— கண்ணே! என்ன இது?

முரளீ:— தருவதாகக்கூறினால் நான் எழுந்திருப்பேன்.

கீசகன்:— கண்மணி! யாரிடத்தில் உனக்கு இந்தப் பயம்?

முரளீ:— தங்களிடத்திருந்தே.

கீசகன்:— என்ன ஆச்சர்யம்! என்னிடத்திலிருந்தா?

முரளீ:— ஆம். தங்கள் மனம் இப்படிக் கெட்டுவிடுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. அந்த ஸைரந்த்ரியோ மஹாபதிவ்ருதை. அவளுக்குச் சிறிது தீங்கிழைத்தாலும் அதற்கு உயிரிழக்க வேண்டி வரும்.

கீசகன்:— பிராணேச்வரீ! இதன்பொருட்டா நீ துக்கிக்கின்றாய்? எனக்கு ஒருகெடுதலும் சம்பவிக்காது. நீ கவலையற்றுச் செல்.

முரளீ:— பிராணேச்வரா! மோகம் என்பது மிகவும் கொடிது. காமம் என்பது அதிலும் கொடியது. பரஸ்த்ரீயை இச்சிப்பதோ எல்லாவற்றிலும் கொடியது அவளது பாதிவ்ருத்யமே உங்களைப் பொசுக்கிவிடும். மேலும், அவளுக்கு ஐந்து கந்தர்வர்கள் பர்த்தாக்களாக இருக்கின்றார்களாம். ஆகையால் நீங்கள் இவ்வெண்ணத்தை விட்டுவிட்டு எனக்கு மாங்கல்யப் பிச்சை தாருங்கள். ஐயோ! அவள் உங்கள் கண்ணெதிர்ப் படாமலிருந்திருக்கலாகாதா? ஏ விதியே!

கீசகன்:— தேவீ! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. தர்மாதர்மங்களை நான் அறிந்தவனல்லவா? பாகுபலத்திற்குமுன் எந்தப்பலந்தான் பெரிது? ஸிம்மபலனான எனக்கு ஒரு தீங்கும் நேராது. நீ உன் மனதை ஸமாதானப்படுத்திக்கொண்டு செல். நான் சற்று உறங்கவேண்டும். லலிதா! தேவியை அழைத்துச்செல்.

முரளீ:— ஹா! ஈசனே! ஈசனே! [போதல்.]

கீசகன்;— இந்த விஷயத்தை யார் தேவிக்குத் தெரிவித்திருப்பார்கள்? அவள் சொல்வதும் வாஸ்தவம்தான். பேதை. ஒன்றுமறியாதவள். தன் மனநிலைக்குத் தக்கபடியே பேசுகின்றாள். அந்த லோகசுந்தரியின் காத்தைப் பெற்றபிறகு என்னை எதிர்க்கவல்லவர் யார்? சுந்தரீ! சுந்தரீ!

[ஸைரந்த்ரி ப்ரவேசம்]

ஸைரந்த்ரீ:—லலிதா! லலிதா!

கீசகன்:— ப்ராணநாயகீ! வந்தனையா!

ஸைரந்த்ரீ:—[தனக்குள்] ஐயோ! என்னைப் ப்ராணநாயகீ என்று அழைக்கின்றானே பாதகன். லலிதாவையும் இங்கே காணோமே. [ப்ரகாசமாய்] சுதேக்ஷணாதேவியார் மிகவும் தாகத்துடனிருக்கின்றார்கள். மதுவாங்கிவரும்படி இந்தத் தங்கக்கிண்ணத்தை அனுப்பினார்கள். இதோ கிண்ணம் இருக்கின்றது. சற்று மதுவைக் கொண்டுவந்து கொடுங்கள்.

கீசகன்:— பத்மாக்ஷீ! ஏன் பயப்படுகின்றாய்? உன்னை நினைத்து நினைத்துப் பரிதபித்து, நீ எப்பொழுது வருவாயோ—எப்பொழுது ஆதரவுடன் என்னிடம் பேசுவாயோ—என்று ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது நீ வந்தும் என்னுடன் ஒரு வார்த்தையேனும் பேசாமல் லலிதா! லலிதா! என்று அழைக்கின்றாயே. ப்ராணநாயகீ! [ஸைரந்த்ரியை அணுக முயல, மாயை ப்ரவேசித்து அவனைத் தடுக்கக்கண்டு சற்று நிதானித்து] ஹா! என்ன இது? யார் என்னை இங்கே தடுப்பது? ....ஒருவேளை அப்படியிருக்குமோ? சீ! கண்மணி!

ஸைரந்த்ரீ:—விதியே! விதியே! தங்கள் ஸஹோதரி தாகத்தால் மிகவும் பரிதபித்துக்கொண்டிருக்கிறார். நான் அதிசீக்ரம் வருவதாகக் கூறிவந்தேன். சற்று மதுவைக் கொடுத்தனுப்புங்கள்.

கீசகன்:— ப்ரியே! என் தமக்கையின் தாகத்தைத் தீர்க்க எண்ணுகின்றாயேயொழிய என் தாபத்தை நினைக்கவில்லையே. நான் என்ன? அழகிற் குறைந்தவனா? ரூபத்திற் குறைந்தவனா? நீ இப்பொழுது எப்படித் தப்புவாய்? என் மனோரதத்தைப் பூர்த்திசெய்துகொள்ளாமல் உன்னை நான் விடமாட்டேன்.

ஸைரந்த்ரீ:—சீ! துஷ்டா! நீசா! நான் எவ்வளவு சொல்லியும் உனக்குப் புத்தியில்லை. இதனால் உனக்கு நேரும் கேட்டை நீ கொஞ்சமேனும் எண்ணவில்லையே. நீ மதுவைக் கொடுத்தாற் சரி. இல்லாவிடில் நான் போகின்றேன்.

கீசகன்:— கண்மணி! நீ எப்படிப் போகமுடியும்! [ஸைரந்த்ரியைப் பிடிக்க முயலுதல்.]

ஸைரந்த்ரீ:—ஹா! ஹா ரா த்மா! என்னைத் தொடாதே. ஹே மாதவா! ஜகந்நாதா! நீ தான் என்னைக் காக்கவேண்டும். [மாயை ப்ரவேசித்துக் கீசகனை வீழ்த்தக் கண்டு தனக்குள்] சீ! இனி நாம் இங்கிருக்கலாகாது. இவ்விஷயத்தை அரசனிடம் தெரிவித்து அங்கிருக்கும் என் பரமபுருஷனுடைய ஆக்ஞைப்படி செய்கிறேன். [போதல்.]

கீசகன்:— [கோபாவேசத்துடன் புரண்டு, தனக்குள்] ஏன் இப்படியாகிவிட்டேன்? யார் இங்கு வந்தது? லலிதா! லலிதா! என்ன? லலிதாவைக் காணோமே? [ப்ரகாசமாய்] கண்மணி! ஸைரந்த்ரி! இந்த மாயாபலமெல்லாம் என்னிடத்திற் செல்லாது. நில் நில். எங்கு சென்றாய்? தூக்குகின்றேன். [போதல்.]

அங்கம் III. காட்சி III.

விராடனரண்மனைவாயில்.

மல்லன்ப்ரவேசம்.

மல்லன்:— [தனக்குள்] நான் ஐம்பத்துநான்குதேசத்திலும் திரிந்தும் எனக்குச் சமானமான பலிஷ்டன் ஒருவனும் அகப்படவில்லை. பீமனைத்தவிர வேறு யாரும் என்னை எதிர்க்கச் சமர்த்தரில்லையென எண்ணித் துர்யோதனமஹாராஜா என்னை அனுப்பினர். எங்கு பார்த்தாலும் மல்லர்களெல்லாம் என்னால் அபஜயமடைந்து மடிந்து சென்றார்கள். இவ்விராடநகரத்திலோ ஐந்துநாள் காத்திருந்தும் நாளைக்கு ஒருவராக மல்லர்கள் மடிந்தார்கள். ஆதலால் பாண்டவர்கள் ஐவரும் எங்கிருக்கிறார்களோ தெரியவில்லை. என் அரசன் கட்டளையை நிறைவேற்ற நான் கொடுத்துவைக்கவில்லையே. இந்தத்தேசம் மிகவும் சுபிக்ஷமாக இருப்பதைக் கண்டு இங்கேதான் பாண்டவர்கள் வசிப்பார்களென எண்ணி வந்தேன். இங்கும் அவர்கள் இல்லையென்று ஏற்படுகிறது. இனி அரசனிடம் சென்று பரிசுபெற்றுச் செல்வேன். [ப்ரகாசமாய்] யார் அங்கே? சேவகா! மல்லன்வந்திருக்கிறானென்று அரசரிடம் தெரிவி.

சேவகன்:—[தனக்குள்] யார் இவன்? நேற்றுவந்த மல்லனா? இவன் எங்கு வந்தான் இழவு? இவன் என்னை ஏன் கூப்பிடுகிறான்? எல்லாரையும் விழுங்கி ஏப்பம்விட்டது போதாதா? என் மீதும் கண்வைத்துவிட்டானே! நான் எம்மாத்ரம்? [வெளிப்படையாய்] ஏன்? என்ன செய்தி?

மல்லன்:— இங்கேவா. சொல்லுகிறேன்.

சேவகன்:—அப்பா! நான் வரமாட்டேன். என்னையும் சுழற்றிக் கொல்லவா?

மல்லன்:— சும்மா வா. பயப்படாதே.

சேவகன்:—ஏன்? எதற்கு?

மல்லன்:— மஹாராஜாவைப் பார்க்க இப்பொழுது சமயமா என்று பார்த்துக்கொண்டு வா.

சேவகன்:—இதோபோகின்றேன். [போதல்.]

அங்கம் III. காட்சி IV.

அரண்மனை ரங்கஸ்தலம்.

விராடராஜனும் கங்கபட்டரும் வருதல்.

சேவகன்:—[விராடனைக்கிட்டி] மஹாராஜா! மல்லன் வந்திருக்கின்றான்.

விராடன்:—ஹா! ஹா! இவன் இங்கிருக்கப்பட்ட மல்லர்களையெல்லாம் ஜயித்துவிட்டான். கங்கபட்டரே! இதனால் நம் அரசுக்கே ஒரு குறைவு ஏற்பட்டது.

கங்கபட்:—அப்படியொன்றும் குறைவு ஏற்படாது. தங்களிடத்தில் அடிமையாகப் பாகசாலையிலிருக்கும் பலாயனன் மற்போரில் சிறந்தவனென்று நான் நன்கறிவேன். தர்மநந்தனருடைய ஸபையில் நான் இருந்தபொழுது அவன் திறமையை அடிக்கடி பார்த்திருக்கிறேன். அவன் ஒருவனாலன்றி மற்றெவராலும் இந்த மல்லனை ஜயிக்கமுடியாது.

விராடன்:— அப்படியா! சேவகா! நீ போய்ப் பலாயனனை அழைத்து வா. மல்லனையும் வாச்சொல்.

[சேவகன் போதல். மல்லன் விராடன்ஸமீபம் வருதல்.]

மல்லன்:- மஹாராஜா? இந்த ஐந்துநாட்களாகத் தாங்கள் என்னைப் பரீக்ஷித்தாய்விட்டது. எனக்கு உத்தரவு அளித்து அனுப்பவேண்டும்.

[பலாயனன் வருதல்.]

பலாய:— ஸ்வாமி! என்ன ஆக்ஞை?

விராடன்:-பலாயனரே! இந்த மல்லன் மகாபராக்ரமமெல்லாம் பேசுகின்றான். தன்னை எதிர்ப்பவர் ஒருவரும் இல்லை என்று சபதம் கூறுகின்றான். இவ்விராஜ்யத்தில் உள்ள மல்லர் ஐவரையும் வென்றுவிட்டான். நீர் இவனுடன் மற்போர் புரிய இசைவீரா?

பலாய:— அரசரின் ஆக்ஞைப்படி நடக்க ஸித்தமாயிருக்கின்றேன்.

கங்க:— மல்ல! உனக்குச் சமானமானவீரன் இங்கு இல்லை என்று இறுமாப்புக் கொள்ளவேண்டாம். உன்பலத்தை அறியும் பொருட்டுச் சாமான்யரான மல்லரை இதுவரை உன்னுடன் போர்புரிய அனுப்பினோம். இப்பொழுது இதோநிற்கும் பலாயனனுடன் போர்புரிந்து உனது சாமர்த்யத்தைக் காட்டு. பலாயன! ராஜபக்தியைக் காண்பி.

பலாய:— ஆக்ஞை.

[மல்லனும் பலாயனனும் சண்டையிட மல்லன் வீழ்தல்.]

மல்லன்:- பீ...... [பலாயனன் மல்லன்வாயைப் பொத்துதல்.]

மல்லன்:- ஸ்வாமீ! சரணம். [பலாயனன் எழுந்துநிற்க விராடனைப் பார்த்து] மஹாராஜா! நமஸ்காரம். நான் இதுவரை எவ்வளவோ பேர்களுடன் போர்புரிந்தேன். இப்படிப்பட்ட பலசாலியை நான் பார்த்ததில்லை. நான் போய்வருகிறேன். [பலாயனனைப் பார்த்து] ஸ்வாமீ! நமஸ்காரம்.

பலாய:— யார் ஜயித்தது?

மல்லன்:- ஸ்வாமீ! தாங்கள்தான். நான் போய்வருகிறேன். [போதல்.]

விராடன்:- பலாயனரே! அந்த அகங்காரம் படைத்த துராத்மா எங்கள் கீர்த்தியையெல்லாம் அபகரிக்கப் பார்த்தான். உம்மால் அது நிலைநிறுத்தப்பட்டது. இந்த ரத்நஹாரத்தைப் பெற்றுக் கொள்ளும்.

பலாய:— ஸ்வாமீ! தங்களுடைய அநுக்ரஹத்தை நான் பெறவேண்டு வதைத் தவிரப் பாகசாலையிலிருக்கும் எனக்கு இந்த ஹாரம் எதற்கு? எனக்குப் பாக காரியங்கள் இருக்கின்றன. நான் போய்வருகிறேன்.

கங்க:— என்ன இது? அழுகைக்குரல் கேட்கின்றதே?

ஸைரந்த்ரீ:-[விராடன்காலில் வந்து விழுந்து] தேவ! தங்கள் ராஜ்யத்தில் இப்படிப்பட்ட அநீதியும் அந்யாயமும் நடக்கலாமா? ஏதோ விதிவசத்தாற் கட்டுப்பட்டுப் பாங்கியாக இருக்கும் பதிவ்ருதையாகிய என்னை இப்பாதகன்—சண்டாளன்—கீசகன்—தொடர்ந்து ஹிம்ஸிக்கத் தாங்கள் ந்யாயாந்யாயங்களை விசாரியாமலும் அவனைத் தண்டியாமலும் உபேக்ஷையாயிருக்கலாமா?

[கீசகன் வருதல். பலாயனன் கோபத்தால் துடித்தல்.]

கங்க:— பலாயன! இந்த வ்ருக்ஷம் இன்னும் உலரவில்லை. இம்மரத்தின் உச்சியைப்பார். உனக்கு அது இப்பொழுது உபயோகப்படாது, சற்று உலர்ந்தபிறகு வெட்டிக்கொள்ளலாம்.

கீசகன்:— [சைரந்த்ரியைப் பார்த்து] சீ! துஷ்டை. இச்சபையில் உன்னை யார் காக்கப்போகிறார்கள். [போதல்.]

கங்க:— ஸைரந்த்ரீ! ஏன் நாட்டியஸ்த்ரீபோல் இந்த ராஜஸபையில் நடிக்கின்றாய்? ஸ்த்ரீகளுக்கு நாணம் அச்சம் முதலிய குணங்கள் இயற்கையாக இருக்கவேண்டுமென்று நீ அறியாயோ? உன்குறையை உன்தேவியிடம்போய்ச் சொல்லிக்கொள்.

ஸைரந்த்ரீ:-ஹா! விதியே! இதுதானா என்கதி. ஹா! ஹா! நான் நாட்டியஸ்த்ரீயாகிவிட்டேனா? என்புருஷன் நாட்டியக்காரனாக இருக்கும்பொழுது நான் நாட்டியக்காரியாயில்லாமல் யாராக இருப்பேன்? ஐயோ! இந்த ராஜ்யத்தில் பதிவ்ருதைகளைக் காக்க ஒருவருமில்லையா?

கங்க:— ஏன்? உனக்கு ஐந்து கந்தருவர்கள் பதிகளாக இருக்கின்றார்களென நான் கேட்டிருக்கின்றேனே. உன்பதி நாட்டியக்காரனென்று சொன்னாய்? அவரிடத்தில் தெரிவித்துக்கொள். அதைவிட்டு ராஜஸபையில் தலைவிரிகோலமாய் இப்படிக் கதறுவது ந்யாயமன்று.

ஸைரந்த்ரீ:-ஹே புண்யமூர்த்தி! தீனரக்ஷகா! ஜகந்நாதா! இதுதானா என்கதி? [வணங்கிப் போதல்.]

விராடன்:-[கங்கபட்டரைப் பார்த்து] ஸ்வாமி! என்மனம் மிகவும் சஞ்சலமடைகின்றது. [இருவரும் போதல்.]

அங்கம் IV. காட்சி I.

ஸுதேக்ஷணையின் அந்தப்புர வாயில்.

குமுதா ப்ரவேசம்.

குமுதா:— [தனக்குள்] தேவிஆக்ஞாபித்தாள்; "குமுதா! மஹாராஜா மிகவும் வ்யாகூலத்தில் மூழ்கியிருக்கின்றார். அவர் மனக் கவலையைத்தீர்க்க நமது உத்தரையின் நாட்டியத்தை ப்ரதர்சிக்கவேண்டுமென்றுநினைக்கிறேன். அதற்கு நீ சித்தமாயிரு" என்று ப்ருஹந்நளையிடம்போய்ச்சொல் என்று. [புறப்படுதல்.]

லலிதா:— [வந்து குமுதாமேல் விழுந்து] என்னடி உனக்கு இவ்வளவு அவசரம்? உன்னெதிரேவரும் என்னையும் பாராமல் எங்கே போகிறாய்? பயந்தவள்போல் ஓடுகிறாயே?

குமுதா:— லலிதா! எங்கே வந்தாய்?

லலிதா:— அம்மா! வாயைத்திறந்தாயே!

குமுதா:— நான் ஒரு துஷ்டன் கையிலும் அகப்படவில்லை. என்னைப் பரிகாசம் செய்யவேண்டாம்,

லலிதா:— நான் என்ன பரிஹாஸம்செய்தேனம்மா? புலியால் துரத்தப்பட்ட மான்குட்டிபோல் நீ ஓடினதாக எனக்குத் தோன்றிற்று.

குமுதா:— நன்றாகச் சொன்னாய். புருஷர்களெல்லாரும் ம்ருகங்களாகி விட்டால் நான் இவ்விதம் ஓடவேண்டியதுதானே! அப்பா! கீசகன் இங்கில்லை.

லலிதா:— ஏனம்மா! அவரை அவ்வாறு நிந்திக்கிறாய்?

குமுதா:— நிந்திப்பதா? அவரை நிந்திப்பதா என்ன? உலகத்திலுள்ள புருஷர்களெல்லாம் அவ்வளவுதான். ப்ரும்மதேவன் ஸ்த்ரீகள் காய்க்கும்படியான ஒரு வ்ருக்ஷத்தைச் சிருஷ்டித்து ஒவ்வொருவருக்கும் ஒரு வ்ருக்ஷத்தைக் கொடுத்தால் அப்பொழுதேனும் த்ருப்திப்படுவார்களோ என்னவோ? இவர்களையெல்லாம்—

லலிதா:— மெல்லப்பேசு. உன் கணவனுக்குக் கேட்கப்போகின்றது.

குமுதா:— வந்தவினை அதுதானே. நம்மையெல்லாம் இவர்கள் பஞ்சரத்தில் வளரும் கிளிகள்போல் வளர்த்துவிட்டார்கள். நமக்கு ஸ்வதந்த்ரமேகூடாதாம்.

லலிதா:— அதுதான் தர்மம்.

குமுதா:— ஆம். அதுதான் தர்மம். அதனால்தான் காகம் கா! கா! என்றால் போதும். அங்கு நிற்பதற்கே நாம் பயந்துசெல்கின்றோம். நமக்கும் சிறிது ஸ்வதந்த்ரம் கொடுக்கட்டும். நமக்குத் தைர்யம் வரும். எவனாவது நமக்கு த்ரோஹம்செய்தால் அவனை அப்படியே—

லலிதா:— கட்டிக்கொள்வாய்.

குமுதா:— ஆம். அப்படியே செய்வேன். அவனை இருட்டறைக்கு இழுத்துச்சென்று அவன் கண்ணில் மிளகுபொடியைத் தூவி அவனை அங்கேயே புதைத்துவிடுவேன். போடி போ.

லலிதா:— என்னடி! எல்லாப்புருஷர்களையும் ஒரேமாதிரியாக நிந்தித்துவிட்டாய்? ஸ்த்ரீகள் மாத்திரம் ரொம்பவும்— ஹூம்: ஹூம்— அதனாலேதான் ஒரு ஸ்த்ரீக்கு ஐந்துபுருஷர்கள் ஏற்பட்டார்கள். வெட்கமில்லை? கேட்போர் நகைக்கமாட்டார்களா?

குமுதா:— ஏன்? ஸ்த்ரீ என்ன செய்வாள்? பாவம். ஜகதேகவீரனை அர்ஜுனன் மச்சயந்திரத்தையெய்து அப்பெண்மணியை அடைந்து அவளை க்ருஹத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தான். அங்கே அவனுடைய அண்ணன் தம்பிமார் நான்குபேரும் ஐயோ! என்று பார்த்து ஏங்கினார்கள். உடனே அவர்களுடைய தாயார் பார்த்தாள். சரி, நீங்கள் எல்லோரும் அவளுக்குப் பதியாயிருங்கள் என்று ஆக்ஞாபித்தாள். அவள் என்ன செய்வாள்? பாவம்! எல்லாம் புருஷர்களாலேதான் வருகின்றது வினை.

லலிதா:— அடி! உன்னை ஒரு புருஷனாகவே ஸ்ருஷ்டித்திருக்கவேண்டும். ப்ரும்மதேவனுக்குத் தெரியாமற்போயிற்று.

குமுதா:— என்னை அப்படிச் சிருஷ்டித்திருந்தால் புருஷர்கள் எப்படியிருக்கவேண்டுமோ அப்படி இருப்பேன். பலிஷ்டர்களுக்குத் தர்மம் வேண்டாமா? [ஸரஸா வரக் கண்டு] வாடி ஸரஸா! நல்ல ஸமயத்தில் வந்தாய். என்னடி! இப்படிப் பயந்து ஓடி வருகிறாய்? உன்னையும் கீசகன் துரத்தினானா என்ன?

ஸரஸா:— எங்கேயடி? ஐயோ! ஐயோ!

குமுதா:— இங்கே இல்லையடி. ஏன் வீணில் பயம்?

ஸரஸா:— பிழைத்தேன். உலகத்தில் எத்தனையோ இடிகள் விழுகின்றனவே. இப்படிப்பட்டவர்கள் தலைமேல் ஒரு இடியாவது விழலாகாதா?

குமுதா:— அதிருக்கட்டும். இப்பொழுது எங்கே வந்தாய் பெருமூச்சு விட்டுக்கொண்டு?

ஸரஸா:— மஹாராஜா கீசகனிடம்போய் அவனுடைய துர்ச்செய்கைகளுக்காக நிந்தித்துக் கண்டித்தார். அவனோ ஒன்றையும் காதிற்போட்டுக்கொள்ளாமல் திக்கரித்தான். மஹாராஜா இப்பொழுது தேவியைக் காணவேண்டுமென்று என்னை அவசரமாக அனுப்பினார். லலிதா! நீ எங்கடி வந்தாய்?

லலிதா:— இது ஒரு ரகஸியம். கீசகன் தன் தமக்கையைப் பார்க்க வேண்டுமாம். இது ஸமயமா என்று பார்த்துவரும்படி ரகஸியமாகச் சொன்னான்.

குமுதா:— என்ன கெட்டகுணம்? இந்த அபவாதம் தன்னுடன் போகக் கூடாது? இந்த ஸாது ஸுதேக்ஷணையையுங்கூடச் சேர வேண்டும்போலும். இப்பொழுதோ மஹாராஜா தேவியைப் பார்க்கப் போகிறார். இது ஸமயமில்லையென்றுசொல். போ. ஸரஸா! நீ போய் மஹாராஜாவைச் சீக்கிரம் வரும்படி சொல். போ. தேவி மஹாராஜாவைப் பார்க்கவேண்டு மென்று கருதியே ப்ருஹந்நளையிடம் நாட்டியத்துக்கு ஆயத்தம்பண்ணும்படி சொல்லச்சொன்னாள். நானும் போகிறேன்.

[எல்லோரும் போதல்.]

அங்கம் IV. காட்சி II.

ஸுதேக்ஷணையின் அந்தப்புரம்.

ப்ருஹந்நளை வருதல்.

ப்ருஹந்:—[தனக்குள்] எப்படியோ இதுவரை எங்கள் அக்ஞாதவாஸ காலத்தைக் கழித்துவிட்டோம். இன்னும் ஒருமாதந்தான் பாக்கியிருக்கின்றது. ஹே க்ருஷ்ணா! இந்த ஒருமாதத்தையும் ஓரபவாதமுமின்றி ஸுகமாகக்கழிக்கும்படி செய்வாயாக. உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

ஆயினும், நேற்று நடந்த விஷயங்களைக் கேட்க என்மனம் வ்யாகுலமடைகின்றது. என்ன என் ஜன்மம்? இப்படிப்பட்ட கஷ்டஸமயத்தில் என் ஹ்ருதயேச்வரி யாக்ஞசேனியைக் காப்பதற்கில்லையே. இங்கு மானத்தை விட்டு அந்தப்புரத்தில் மாதர்களுக்கிடையில் நாட்டியம் கற்பித்துக்கொண்டிருக்கின்றேனே. இதற்காகத்தான் ஊர்வசி என்னைப் பேடியாகச் சபித்தாள்போலும். ஏன் இந்திரன் அந்தச்சாபத்தை ஒருவருஷத்துக்குமட்டும் மாற்றினான்? ஹே அர்ஜுனா! உன் வீர்யத்தையெல்லாம் தொலைத்தவா?

உன்பராக்ரமத்தையெல்லாம் அழிக்கவா? நீ பிறந்தது முதல் பேடியாகவே இருக்கின்றாய். அந்தப் பாபி துச்சாஸனன் அவள் கூந்தலைப் பிடித்திழுத்தபொழுது நீ பேடிபோல் பார்த்துக்கொண்டிருக்கவில்லையா? வஸ்த்ராபஹரணம் செய்த பொழுது ஹா! நீ என்னசெய்தாய்? பேடிபோல் பார்த்துக் கொண்டுதானே இருந்தாய்? இப்பொழுதோ? த்ருபதராஜ புத்ரிக்கு மானக்கேடு சம்பவிக்கையிலும் உண்மையில் நீ பேடியாகவே இருக்கின்றாய். [சூர்யனைநோக்கி] ஹேகாலஸ்வ ரூபியே! நீயாவது சற்றுச் சீக்ரம்செல்லலாகாதா? ஹே சூர்யபகவானே! நீ சீக்ரத்தில் உதித்துச் சீக்ரமாய் அஸ்த மிக்கலாகாதா? இந்த ஒருமாதமும் சீக்ரத்தில் கழியும்படி செய்யலாகாதா? உன்னை வணங்குகிறேன்.

[ஸைரந்த்ரீ வருதல்.]

ஸைரந்த்ரீ:—[ப்ருஹந்நளையைப் பார்த்து] நாதா! [ஒரு பக்கமிருந்து ப்ருஹந்நளை தன்னைநோக்குதலையும் மற்றொருபக்கம் குமுதா வரு தலையும் கண்டு தனக்குள்] ஐயோ! தேவியின் சேடி வருகின் றாள். நான் இங்கிருக்கலாகாது. [போதல்.]

குமுதா:— ப்ருஹந்நளா! மஹாராஜா இன்று குழந்தை உத்தரையின் நாட்டியத்தைப் பார்ப்பதற்கு இங்கு வருகின்றார்; அதற்கு நீ சித்தமாயிருக்கவேண்டுமென்று தேவி ஆக்ஞாபித்தாள்.

ப்ருஹந்.—நான் முன்னமே வந்திருக்கிறேனென்று தேவியிடம் தெரிவி. குழந்தையையும் அழைத்துவா.

குமுதா:— குழந்தை இதோ வருகின்றாள். நான்போய்த் தேவியிடம் தெரிவிக்கின்றேன். [போதல்.]

ப்ருஹந்:—ஹா! ஹா! ஜகதேகவீரனாக ஜனித்து இப்படிப்பட்ட நிலைமையை யடைந்து ஒருவர்கண்ணிலும் படாமல் ரகஸிய மாக அந்தப்புரத்தில் இருந்த நான் இப்பொழுது அரசன் கண்ணில்படவேண்டியதாக ஏற்பட்டுவிட்டது. ஹா! தனஞ்சயா! தனஞ்சயா!!

[உத்தரை வருதல்.]

உத்தரை:—[நான்குபக்கங்களிலும் பார்த்து] ப்ருஹந்நளா! நீ யாருடன் இங்கே பேசிக்கொண்டிருந்தாய்? தனஞ்சயனு?

ப்ருஹந்:— [துக்கத்தை அடக்கிக்கொண்டு] குழந்தாய்! தனஞ்சயனு? தனஞ்சயன் யார்?

உத்தரை:—அர்ஜுநனுடைய மற்றொருபெயர்.

ப்ருஹந்:— அர்ஜுனனு? உனக்கு அவரைத்தெரியுமா என்ன?

உத்தரை:—எனக்குத் தெரியாதா? அவர் அபிமன்யுவின் தந்தை.

ப்ருஹந்:— நீ அபிமன்யுவைப் பார்த்திருக்கின்றாயோ? எங்கே பார்த்திருக்கின்றாய்?

உத்தரை:—எங்கள் மாமாவின் க்ருஹத்தில் பார்த்திருக்கிறேன்.

ப்ருஹந்:— மாமாவா? எங்கிருப்பவர் அவர்?

உத்தரை:—த்வாரகையில் நாங்கள் விளையாடுவதைக்கண்டு மாமா—

ப்ருஹந்:— உங்கள் இருவருக்கும்—

[குமுதா வருதல்]

குமுதா:— அதோ தேவியார் வருகிறார்கள்.

உத்தரை:—ப்ருஹந்நளா! [புன்சிரிப்புடன்] அம்மா வருகின்றாள். நேற்று மஹாவிஷ்ணுவின் அவதாரங்களில் க்ருஷ்ணவதாரத்தைப் பற்றி நீ கற்றுக்கொடுத்தாயே. அந்தப் பதத்தைச் சொல்லுகிறேன்.

ப்ருஹந்:— நீ. அபிமன்யுவை—......—........

[சுதேக்ஷ்ணை வருதல்].

சுதேக்ஷ:— ப்ருஹந்நளா! அரசர் மிகவும் வ்யாகூலத்துடன் இருக்கின்றார். நம். உத்தரையின் நாட்டியத்தைப் பார்த்து அவர் மனம் தேறும்படி செய்யவேண்டும்.

ப்ருஹந்:— அப்படியே. [புன்சிரிப்புடன் உத்தரையைப் பார்த்து] ஏன்? ஆரம்பிக்கலாமோ? [உத்தரை நமஸ்கரிக்க] நீ விரும்பிய வரனைப்பெற்றுச் சுகமாக வாழ்வாய்.

உத்தரை:—போ ப்ருஹந்நளா! என்ன பரிஹாஸம்? [ப்ருஹந்நளையிடம் கொஞ்சுதல்].

ப்ருஹந்:— ஏன்? நான் என்ன சொன்னேன்? உன் மனோபீஷ்டம் நிறைவேறட்டும் என்று சொன்னேன். இதில் என்ன பரிஹாஸம்?

சுதேக்ஷ:— என்னடி! உத்தரை! பேஷ். நான் ப்ருஹந்நளையிடம் நாட்டியம் கற்றுக்கொள்ளச்சொன்னால் நீ என்ன? ஸ்ருங்கார சேஷ்டைகளெல்லாம் ஆரம்பித்துவிட்டாயே?

குமுதா:— யௌவனம் ப்ராதுர்ப்பவித்துக்கொண்டிருக்கின்றது. சேஷ்டைகளும் அதற்குத் தகுந்தபடிதான் இருக்கும்.

உத்தரை:—அம்மா! இந்தக் குமுதா என்னை எப்பொழுதும் இப்படிப் பரிஹாஸம்பண்ணிக்கொண்டேயிருக்கிறாள். [சுதேக்ஷணையிடம் சென்று] அம்மா! அம்மா! நான் இங்கு வந்தேனா! வரும்பொழுது ப்ருஹந்நளை தனஞ்சயா! தனஞ்சயா! என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

குமுதா:— அதற்குள், தனஞ்சயன் என்றால் அர்ஜுனன்; அவர் மைந்தன் அபிமன்யுஞாபகம் குழந்தைக்கு வந்துவிட்டது.

உத்தரை:—பாரம்மா! ப்ருஹந்நளைசொன்னதைத்தான் அம்மா நான் சொன்னேன்.

சுதேக்ஷ:— [உத்தரையைக் கட்டியணைத்து] கண்மணி! உனக்கு நான் சீக்ரத்தில் விவாகம்பண்ணிவைக்கிறேன்.

உத்தரை:—என்ன அம்மா இது?

குமுதா:— இல்லையம்மா! உன்னை அர்ஜுனனுக்கே கொடுத்து விவாகம் செய்துவைக்கிறேன் என்று சொல்லுகிறார்கள்.

[ப்ருஹந்நளை புன்சிரிப்புக்கொள்ளல்.]

உத்தரை:—உன்னை யார் கேட்டார்கள்? எப்பொழுதும் இப்படித்தான் அவருக்குத்தான் விவாஹம் ஆய்விட்டதே.

ப்ருஹந்:— [சிரித்துக்கொண்டு] உத்தரா! ஏன்? அபிமன்யுவுக்கே உன்னைக் கொடுத்து விவாஹம் செய்விக்கும்படி நான் செய்கிறேன்.

சுதேக்ஷ:—[ப்ருஹந்நளையைப் பார்த்து] என் நாதர் குழந்தையின் துடுக்கான வார்த்தைகளைக்கேட்டால் எவ்வளவு ஆநந்தப்படுவார்? [உத்தரையைப் பார்த்து] உத்தரா!

உத்தரை:—அம்மா! நீங்களெல்லாம் ஒரேமாதிரியாக—

[விராடன் வருதல்.]

விராடன்:—தேவி! உத்தரா! [ப்ருஹந்நளையைப் பார்த்து] என்ன ஆச்சர்யம்? நாட்டியத்திற்குச் சித்தமாயிருக்கின்றீர்களா?

ப்ருஹந்:— சித்தமாயிருக்கின்றோம்.

விராடன்:—என்ன காந்தி? இதுவரை நான் இந்தரூபத்தைப் பார்த்ததில்லையே! தேவி! பார்த்தனையா ப்ருஹந்நளையின் முககாந்தியை. இந்தரூபமா பேடிரூபம்?

உத்தரை:—அப்பா! அப்பா! [விராடனை அணுகுதல்.]

குமுதா:— மஹாராஜா! இவர் பேடியாக இருப்பதனால் தான் சரியாய்ப் போய்விட்டது. இல்லாவிட்டால் நமது உத்தரை-சுபத்ரையாயிருப்பாள்.

உத்தரை:—[கொஞ்சி] அப்பா! இவர்களெல்லாம் எதையோ மனத்தில் வைத்துக்கொண்டு என்னைப் பரிஹாசம் செய்கின்றார்கள். ப்ருஹந்நளா தனஞ்சயா என்று சொன்னாள்.

விராடன்:—ஓ! ஓ! அப்படியா! சரிதான். தனஞ்சயன்—அர்ஜுனன். அர்ஜுனன்மைந்தன் அபிமன்யு— —

உத்தரை:—தாங்களும் இவர்களுடன் சேர்ந்துவிட்டீர்களா?

ப்ருஹந்:— குழந்தாய்! பாண்டவர்கள் அக்ஞாதவாஸஞ்செய்கின்றார்கள். அது தீர்ந்தவுடன்—

விராடன்:—நீங்கள் குழந்தைக்கு விவாஹம் ஏற்படுத்துகிறீர்களா? அர்ஜுனனுக்கா? அபிமன்யுவுக்கா?

ப்ருஹந்:- இந்த ரத்நத்தைத் தன் மைந்தனுக்கு அலங்கரித்துத்தான் ஆநந்தமடைவர் தனஞ்சயர்.

விராடன்:-குழந்தாய்! அதோபார். ப்ருஹந்நளே உன்னை அபிமன்யுவுக்கே விவாஹம்செய்து வைக்கப்போகிறாளாம். அவரை அடைந்து பாண்டவர்கள் வம்சத்தை நிலைநிறுத்துவாயாக.

[உத்தரையை அணைத்து முத்தமிடுதல்.]

உத்தரை:-நான் இன்று நடிக்கமாட்டேன்? நீங்களெல்லோரும் என்னைப் பரிகஸிக்கின்றீர்கள்.

ப்ருஹந்:—[விராடனைப் பார்த்து] மஹாராஜா! ஏதோ குழந்தையின் மீதுள்ள வாத்ஸல்யத்தால் தங்களை ஸமமாகப்பாவித்து வார்த்தையாடிவிட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்.

விராடன்:-என்ன விநயம்? என்ன மரியாதை? ப்ருஹந்நளா! ஏதோ நாட்டியம் நடக்கட்டும் பார்ப்போம்.

[ப்ருஹந்நளை பாட உத்தரை தானும்
பாடிக்கொண்டே நாட்டியம் ஆடுதல்.]

ராகம்-காம்போஜி. தாளம்-மிஸ்ரஜம்பை.

பல்லவி.

நீ தா மபம கமா பாப.
*மா வின் ...... பெரு மை.

பத மா பதநிநி தபமா பத—
புக லத் திறமோ ... ... திரு—

கண்ணிகள்.

காம்போஜி

1 தா நி ப த ம ப நி, தா நி ப த க ம நி,
மீ ன உரு வத்துடன், ஏ கி நீ ரி னில் மறை

தா நி ப த ரி க நி, தா நி ப த ம ப ஸ,
யோடு சென்ற துர்முகி, யான மது கைடப

தா நி ப த ம ப த—
ரா க்ஷ ஸரைவதைத்த — ... திரு—

* இந்தப்பாட்டு மதுரை ப்ருஹ்மஸ்ரீ ஸேஷபாகவதரவர்களால் இயற்றப்பட்டது.

சங்காபரணம்.

2 பா, தபமபா, மகமபா,
தேவர்களும்தா னவரும்பால்

கரிஸநிதபா, தநிஸரிஸபா,
கடையமந்தரா, சலமதையும்தாங்

மபதபா, நிதநிபா,
கிய கூர்மா உருவத்தோ

ஸநிபத—
டுடன்வந்த— — திரு —

கமாஸ்.

3 தா தா நிதபம பா பா பா
ஸாகேதபதியின் பால் சேயா

தபமகமா, கமபமா, மபதபா
யவதரித்து மிதிலையில், சிவதனுர்

பதநிதா, நிதநிஸா, நிஸரிஸாநி
பங்கம்செய்து, ஜானகியை, மணம்புரிந்து

தநிஸ நீத, பதநிதாப, மபதபாம,
அழகில்மாரன், அமரில்சூரன், மிகவுய்பாரன்

கமப, மபத, பதநி, தநிஸ, நிதபத,
அனகன், அபயன், அசலன், அதுலன், கபியுடன்

ஸா ஸா நித, நீ நீ தப, தா தா பம,
லங்கேசனைக் கொன்றுபுகழ் கொண்டுநகர்

பா பா மக, கமபத நிஸரிஸ
சென்று வரை சிங்காதனம் அமர்ந்துபட்

ரிஸநித நிதபத—
டாபிஷேகம் கொண்ட திரு —

ஆனந்தபைரவி.

4 பா ஸா நி ஸ ரி ஸா ப ஸ நி த ம பா
பூ தே வி சுமையை அகற்றிடவேகோ

பா ம க ம பா, த ப ம கா ம பா ம க ரி க ம
பா ல தேவனுப் வந்துதித்துப்பூ தனையையும்தீர்த்து

ப ஸா நி த பா த, நி தா ப ம கா ம, த பா மக ரி
கோபி ய ருடனே, கூடிவிளையாடி, கோவர்த்தனத்தை

க ம ம பா நி ஸா, க ரி ஸா நி ஸ க ரி ஸா
குடை யாய்ப்பி டித்துக் காளியன் சிரத்திலாடி

ஸ க ரி கா ம க ம க ரி கா கமகரிஸாநிஸ
கம்ஸனைமாய்த்துத் துஷ்டச்சிசுபா லனையும்வென் றுருக்மி

க ரி ஸ நி ரி ஸா ஸ பா மபா ம கா
ணிதேவியை விவா ஹ மும் முடித் திட்டு

ம ப ப த—
விளங்கிய— — திரு —

விராடன்:—[சுதேக்ஷணையிடம் ப்ருஹந்நளையைச் சுட்டிக்காட்டி] தேவீ! இந்த ரூபத்தைப்பார்த்தனையா! பத்மம்போன்ற முகத்தில் பராக்ரமத்தையும், மத்ஸ்யங்களைப்போல் துடிக்கும் கண்களில் வீர்யத்தையும், இரண்டு கன்னங்களிலும் மார்த்தவத்தையும் பார். மேலும் அவ் அளகங்கள் எவ்வளவு ஆநந்தகரமாயிருக்கின்றன பார்த்தனையா? [கையைப்பார்த்து] என்ன? கட்டைவிரலில்— —

[விராடன் தன்விரலைக் கவனிப்பதை ப்ருஹந்நளா பார்த்து அதனை மறைத்துக்கொள்ளுதல்.]

சுதேக்ஷ:— சரிதான். உத்தரைக்குத்தான் பயித்தியம் பிடித்ததென்று நினைத்தேன். உங்களுக்கும் பயித்தியம் பிடித்துவிட்டதா?

விராடன்:—தேவி! ப்ருஹந்நளையைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

ப்ருஹந்:— நாட்டியத்தை நிறுத்தலாமா?

விராடன்:—ப்ருஹந்நளா! நீ பாண்டவர்கள் அரண்மனையில் நாட்டியம் கற்பிப்பவள் என்று கூறினுய். அவர்கள் உன்னை எங்கிருந்து ஸ்வீகரித்தார்கள்? உன்னுடைய ரூபமும் குணமும் பரஸ்பர விருத்தமாக இருக்கின்றனவே.

ப்ருஹந்:— ஆம் மஹாராஜா! அநேகர் இப்படிச்சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அந்தத் தனஞ்சயரும் இப்படித்தான் சொல்வார். ஒருகாலத்தில் தனஞ்சயர் தேவலோகம் சென்றிருந்தார். அங்கே ஊர்வசியிடமிருந்து என்னை க்ருஹித்தார்.

விராடன்:—உனக்கு நாட்டியமும் வருமா? அல்லது கற்பிக்கமட்டுந்தான் தெரியுமா?

ப்ருஹந்:— எனக்கு நாட்டியத்திலும் பரிச்சயமுண்டு. இதற்குமுன் என்நாட்டியம் வீரரஸப்ரதானமாயிருந்தது. இப்பொழுதோ-

விராடன்:—சொல்வானேன். குழந்தையின் முகபாவத்தையும் ரஸபுஷ்டியையும் ஹஸ்தவின்யாஸத்தையும் லயக்ஞானத்தையும் கண்டால் உன்ஸாமர்த்யம் இவ்வளவென்று நன்ருகத் தெரிகின்றது. ஏதோ இப்பொழுது கடைசியில் பாடியதை மறுபடியும் பாடு. [ப்ருஹந்நளை பாட உத்தரையும் பாடிக்கொண்டே நடிக்கக் கண்டு] இதென்ன? ராமாவதாரத்தின் வரலாறு போலும்.

ப்ருஹந்:— ஆம். நன்ருக அறிந்தீர்கள்.

விராடன்:—[கீசகனை நினைத்து] என்மனம் இங்கில்லை.

ப்ருஹந்:— [மறுபடியும் பாடுதல்.]

விராடன்:—ஐயோ! ஈசனே! இம் மஹான்கள் இங்கு இருக்கும்வரை ஒருகுறையுமில்லாமற் காப்பாற்றலாகாதா? தெய்வமே! தெய்வமே! [சுதேக்ஷ்ணைமீது சாய்தல்].

ப்ருஹந்:— அம்மா! என்ன இது? என் மஹாராஜா—

உத்தரை:—அப்பா! அப்பா! [விசிறியால் வீசுதல்].

சுதேக்ஷ்:— நாதா! என்ன? ஏன் இந்த ப்ரமை! ஏன் விசனம்?

விராடன்:—ஐயோ! இம் மஹானுபாவர்கள் இங்கு வருவதும் இங்கு இவ்வளவு துர்க்ருத்யம் நடப்பதும்! ஹா! ஹா! அந்த நாரீரத்நத்துக்காகத் துக்கப்படுவேனு? கையாலாகாமல் ப்ருஹந்நளைபோல் ஆய்விட்டேனென்று துக்கப்படுவேனு? இந்தத் துராத்மனுக்கு நான் ஏன் இடம் கொடுத்தேன்?

சுதேக்ஷ:— அதைப்பற்றித் தாங்கள் கவலைப்படவேண்டாம். நான் அவனுக்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறுகின்றேன்.

விராடன்:—ஐயோ! நான் ஏன் இவர்களை இங்கு.........

ப்ருஹந்:— மஹாராஜா! எங்களால் தங்களுக்கு யாதொரு துன்பமும் ஏற்படாது. துஷ்டர்கள் தங்கள் துரெண்ணத்தினுலேயே மடிவார்கள். தர்மஸ்வரூபிபோலிருக்கும் தங்களுக்கு எங்களால் ஒரு குறையும் ஏற்படாது. அப் பாண்டவர்களோ தாங்கள் எங்களை இவ் வொருவருஷமும் காத்ததற்காக ஸந்தோஷித்துத் தங்களுக்கு எவ்வளவோ மேன்மையுண்டாகும்படி செய்வார்கள்.

உத்தரை:—அப்பா! நாட்டியத்தை நிறுத்தட்டுமா? நாளை மறுபடி பார்க்கிறீர்களா?.

சுதேக்ஷ:— நாதா! இக்கவலையைவிட்டுச் சற்று உல்லாஸமாயிருங்கள். அம் மாதுசிரோமணிக்கு யாதொரு தீங்கும் நேராதென்று எனக்கு நன்றாய்த்தெரியும்.

விராடன்:—ஆம். நான் கங்கபட்டரிடம் சென்று ஸல்லாபித்துக்கொண்டிருக்கிறேன். நாழிகை ஆய்விட்டது. குமுதா! தேவியை ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள். அந்த நீசன் இங்கு வரப்போகிறுன். [உத்தரையிடம்] கண்ணே! இதற்குள் நீ எவ்வளவு விந்தையாய்க் கற்றுக்கொண்டாய். நான் மறுபடி வந்து உன்னைப் பார்க்கிறேன். இப்பொழுது நான் போய் வரட்டுமா?

உத்தரை:—அப்பா! அப்படியே செய்புங்கள். தாங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்? இன்னும் ஒருமாதத்திற்குள் பாண்டவர்கள் வந்துவிடுவார்கள்.

ப்ருஹந்:- உடனே குழந்தைக்கு விவாஹஞ்செய்துவிடலாம்.

உத்தரை:-அப்பா! பாரப்பா!

விராடன்:- [உத்தரையைத் தழுவி முத்தமிட்டு] கண்மணி! நீ இங்கு வேடிக்கையாகப் பொழுதுபோக்கு. நான் போய்வருகிறேன். [ப்ருஹந்நளையைப் பார்த்து] ப்ருஹந்நளா! உன்னையும் உனது நாட்டியத்தையும் உனது கற்பிக்கும் திறமையையும் கண்டு நான் மிகவும் ஆநந்தமடைந்தேன்.

ப்ருஹந்:- மிகவும் ஸந்தோஷம். மாதவன்க்ருபையால் தங்களுக்கு ஒரு குறையும் ஏற்படாது.

[விராடன் போதல்.]

சுதேக்ஷ:- [உத்தரையைப் பார்த்து] கண்ணே! வா. [சேடியைநோக்கி] குமுதா! குழந்தையை அழைத்துச்செல். [ப்ருஹந்நளையைப் பார்த்து] ப்ருஹந்நளா! நான் போய்வருகிறேன்.

ப்ருஹந்:- ஹா! ஹா! என்ன ஆச்சர்யம்? இம் மஹாராஜா எங்களுக்கு நேரிடும் துன்பங்களுக்காக எவ்வளவுவருந்துகிறுர்! ஐயோ! இந்த ஸிம்மபலனை அடக்கும் ஸாமர்த்தியம் இல்லாமையால் மிகவும் கஷ்டப்படுகிறுர். ஸாமர்த்தியம் இருக்குமாயின் அவனை ஒழித்தேயிருப்பார். தர்மத்தை அனுசரியாமல் கேவலம் பாஹுபலத்துடன் இருப்பவர்களை ஒழிப்பது தர்ம ஸ்வரூபிகளான எங்கள் கடமை. அதனுல் எங்கள் தர்மத்தை நாங்கள் அநுஷ்டித்தவர்களாவதோடு இவ்வரசனுக்கு ப்ரியமான கார்யத்தையும் செய்தவர்களாவோம். ஆயினும் இந்தஸ்திதியிலிருக்கும் நான் என்ன செய்வது?

ஸைரந்த்ரீ:—[வந்து] ஹா! நாதா! [அழுதல்.]

ப்ருஹந்:—ஸைரந்த்ரீ! ஏன் துக்கப்படுகிறுய்?

ஸைரந்த்ரீ:-அன்று ஒருவராலும் அடிக்கமுடியாத மத்ஸ்ய யந்த்ரத்தை அடித்து த்ருபதபுத்ரியாகிய என்னைக் கைப்பற்றிய மகாவீரரும், காண்டவவனத்தைத் தஹித்த மஹா சூரரும்,

ஈசனை மெய்ப்பித்து அஸ்த்ரங்களைப் பெற்ற மஹா தீரரும், தேவேந்த்ரனுடைய அர்த்தாஸநத்தில் வீற்றிருந்த ஜெய சீலருமான என் நாதர் நாட்டியம் கற்பிக்கும்படியான நிலைமையிலிருக்குங்கால் அந்தத் துக்கத்தில் என் துக்கம் எவ்வளவு பெரிது? [பகவானை நினைத்து] மாதவா! உன்னை அண்டினவர்களை இப்படிச்செய்யலாமா?

ப்ருஹந்:—நீ கூறுவதில் புதுமையொன்றையும் காணேமே. ஒரு பெரிய தர்மத்தை நிலைநாட்டும்பொருட்டு இச்சிறிய துன்பத்தை நாம் அனுபவித்துத்தான் தீரவேண்டும். கண்ணே! என்ன சமாசாரம்?

ஸைரந்த்ரீ:—என் துக்கத்தை நானே தெரிவித்துக்கொள்ளவேண்டுமா?

ப்ருஹந்:—எனக்கு எல்லாம் தெரியும். ஆயினும், நாம் இப்பொழுது என்ன செய்வது?

ஸைரந்த்ரீ:—இதையறிந்துதான் நான் ராஜஸபையில் போய் முறையிட்டேன். அங்கு அந்தத் தர்மஸ்வரூபி தங்களிடத்தில் விஷயங்களைத் தெரியப்படுத்தச் சொன்னார். ஐயோ! அந்த இடத்தில் தங்கள் ப்ராதா பட்ட கஷ்டங்களைப் பார்த்தால் ஹா! ஒரு ஸ்த்ரீயின்பொருட்டு நூறு ஸஹோதரர்கள் மடியும்படி ஏற்படுமே? அதனால் இந்த மஹாராஜாவுக்கு மனக் கவலை ஜனிக்குமே? இந்த அபவாதம் என்னால் ஏற்பட வேண்டுமா? ஹே முராரே!

[பலாயனன் வருதல்.]

பலாயன:—நம் அண்ணா தர்மநந்தனர் அச்சமயத்தில் என்னைத் தடுத் திராவிட்டால் அப் பாதகனை அங்கேயே கசக்கியிருப்பேன்.

ஸைரந்த்ரீ:—ஹா! நாதா! கொஞ்சம் மெள்ளப் பேசுங்கள். யாராவது பார்க்கப்போகிறார்கள். இப்பொழுது சமயபங்கம் நேரிட்டால் ஐயோ! பாவியான இந்த ஸ்த்ரீயால் மறுபடி பன்னிரண்டுவருஷம் வனவாஸமும் ஒருவருஷம் அக்ஞாதவாஸமும் செய்யவேண்டிவருமே. என்னால் அந்த நிந்தனையை ஸஹிக்கமுடியாது. நான் இதுவரை எந்த பாதிவ்ருத்யத்தை அநுஷ்டித்துவந்தேனோ அதுவே என்னைக் காக்கும்.

பலாயன:—ஆம். இப்படிச் சொல்லிச்சொல்லித்தான் இக்கதிக்குக் கொண்டுவந்துவிட்டார். தர்மமாம் தர்மம்? என்ன தர்மம்? க்ஷத்ரியராகப்பிறந்தும் நமக்குத் துன்பமிழைப்பவர்களை அழிக்காமல்—க்ஷத்ரிய தர்மத்தை பாராட்டாமலிருப்பது தர்மமாம்? இக் கைகளை எதற்காகப் படைத்தான்? இந்த ஸிம்ஹத்தை எதற்காக ஸ்ருஷ்டித்தான்? இனி அரைக்கணமும் பொறுக்கமாட்டேன். இவ் வரசனையும் அரசியையும் அத்துஷ்டனையும் அவன் ஸஹோதரர்களையும் இப்பொழுதே ஹதம்செய்கிறேன்.

[பலாயனன் புறப்படல். ஸைரந்த்ரீயும் ப்ருஹந்நளையும் அவனைத் தடுத்து நிறுத்துதல்.]

ஸைரந்த்ரீ:—தாங்கள் அத்தகைய வல்லமையுடையவரென்று எங்களுக்கு நன்றாய்த் தெரியும். இப்பொழுது சமயபங்கம் நேரிடலாகாது.

ப்ருஹந்:—அண்ணா! எல்லாம் உங்களுக்குத் தெரிந்தனவே. இது வரை பொறுமையுடனிருந்த தாங்கள் இன்னும் ஒருமாத காலம் பொறுங்கள். இவ்விஷயத்தைக்கேட்டு மஹாராஜா அவர்கள் என் முன்னிலையிலேயே மிகவும் பரிதபித்தார்கள். அன்றியும், அவர் ப்ரதிக்ரியை செய்யமுடியாது என்கிறார். ஆகையால் அத்துஷ்டர்களை ஏதாவது உபாயம் செய்து ஒழிக்கவேண்டும்.

பலாயன:—ரகஸ்யம்—உபாயம்—என்ன வேண்டியிருக்கிறது? அர்ஜுனா! நீ இப்பொழுதிருக்கும் நிலைமைக்குத் தக்கபடி பேசுகிறாய். இவை க்ஷத்ரியவீரனுடைய வார்த்தைகள் அல்ல.

ஸைரந்த்ரீ:—நாதா! இதனால்தான் நான் தங்களை முதலில் பார்க்கவில்லை. தம்பி சொல்லும் வார்த்தையைக் கேட்டு ஏதாவது ஒருபாயம் தேடுங்கள். இனி நாம் இங்கே பேசிக்கொண்டிருப்பது உசிதமன்று. யாராவது அறியப்போகிறார்கள்.

[போக முயலுதல்.]

பலாயன:—[ஸைரந்த்ரியைத் தடுத்து] வீரபத்நி! நீங்கள் இருவரும் சொல்வது வாஸ்தவம்தான். சமயபங்கம் செய்தோமென்ற பழி நமக்கேன்? [யோசித்து] ஆம் இதுதான் சரி. யாக்ஞசேனி! நீ இப்பொழுதே அவனிடம் சென்று ஒரு ஸங்கேதஸ்தலத்தை நிர்த்தேசித்து அவன் அங்கு வரும்படி செய்.

ஸைரந்த்ரீ:—ஐயோ! மறுபடியும் அந்த நீசனை நான் காணவா?

பலாயன:—வேண்டாம், வேண்டாம். சேடிகள்மூலமாகச் சொல்லியனுப்பு.

ப்ருஹந்:—அண்ணா! இப்பொழுதுதான் தாங்கள் தர்மநந்தனருடைய தம்பியென்பது உண்மையாயிற்று.

பலாயன:—அர்ஜுனா! என்ன உண்மை? சீ! இருக்கட்டும் [ஸைரந்த்ரியைப் பார்த்து] தேவி! நாளை இரவு [யோசித்து] சுமார் பத்துநாழிகைக்கு நகருக்கு வெளியிலிருக்கும் வசந்த மண்டபத்துக்கு வரும்படி செய்.

ஸைரந்த்ரீ:—[கண்ணீர்விட்டு] நாதா! அவர்கள் நூறுபேர்கள் ஸஹோதரர்களாம். சமயபங்கம் நேராமலும் தங்கள் தேகத்துக்கும் பாக்ரமத்துக்கும் குறைவுவாராமலும் நடந்துகொள்ளவேண்டுகிறேன். அவனே ஸிம்மபலன்.

பலாயன:—தேவி! என்ன? நீயும் இவ்வாறு நினைக்கின்றாய்? அந்தச் ஸிம்மத்தை வெல்ல இந்தச் சரபம் இருக்கின்றதென்று நினை.

[ஸைரந்த்ரீ பலாயனன் காலில் வீழ்ந்து வணங்கி எழுந்து போதல்.]

ப்ருஹந்:—நன்றாக யோசித்தீர். அக்கண்ணன்தான் உம்மைக் காக்கவேண்டும். நான் போய்வருகிறேன். [நமஸ்கரித்துப் போதல்.]

பலாயன:—ஹா! துராத்மா! நீசா! மதிமந்தா! நிர்லஜ்ஜா! உன் வீர்ய கர்வத்தை அடக்குகின்றேன் பார். [போதல்.]

அங்கம் IV. காட்சி III.

வஸந்தமண்டபம்.

கீசகன் ப்ரவேசம்.

கீசகன்— இதுதான் ஸங்கேத ஸ்தானம். இதுதான் அந்த மண்டபம். ஹா! ஹா! இந்தவனத்தில் எங்கேபார்த்தாலும் ஸைரந்த்ரியின் சின்னங்களைப்போலவே காணப்படுகின்றன. ஸைரந்த்ரீ! கண்மணீ! மனோநாயகி! உனக்கு இவ்வளவு ஸங்கோசமா? ஆம். "சுந்தரிகள் தங்கள் காதலர்கள்மீது ப்ரியம் வைப்பார்கள். ஒரு ஸமயம் இணையமுடியாதபடி நிந்திப்பார்கள். ப்ரியர்களோ அவர்களுடைய ஸஞ்சலமனத்தையறிந்து அவர்களைக் கவரவேண்டும்". ரமணீ! நானும் அப்படியே. அந்த லலிதாவின் சொற்படி இதோ இங்கு வந்திருக்கின்றேன்; நீ என்னை மோசம் செய்யமாட்டாயென்று. இதோ! ஏன் கண்கள் மாத்திரம் இங்கிருக்கின்றன? சீ! இவைகள் நீலோத்பலங்களா! என்ன? அதரம் மாத்திரம் இக்கொடியிலிருக்கிறது? ஓ! ஓ! கோவைக்கனியா? [கூப்பிடும் குரல் கேட்டதுபோல் பாவித்து] ஆ! ஸைரந்த்ரீ! எங்கிருக்கின்றாய்? சீ! குயில்கள் கொஞ்சுகின்றன. இல்லை: இல்லை: இதோ இந்தப்பக்கம் வருகின்றாள். [பார்த்து] ஐயோ! அன்னங்கள் அன்றோ! சீ! என்ன மதிமயக்கம்? ஒருகால் அவள் மலையின் அருவிப்பக்கத்தில் போயிருப்பாளோ? கண்மணீ! நீ ஆக்ஞாபித்தபடி நான் வந்திருக்கின்றேன். ஏன் நீ இன்னும் வராமலிருக்கின்றாய்? [தன் தலை காணமற்போனது போல் பாவித்து] என் சிரஸெங்கே? ஹூம்! நான் இப்பொழுது எங்கிருக்கின்றேன். என்ன இது! இந்த உத்யானவனத்திலுள்ள திவ்யமான வ்ருக்ஷங்களெல்லாம் இப்பொழுது ஸ்வர்ணமயமாயிருக்கின்றனவே! சீ! என்ன! ஸிம்மபலனுன எனக்குமா இத் துர்நிமித்தங்கள்! ஒருகால் இதில் ஏதாவது க்ருத்ரிமம் இருக்குமோ? அங்கு யாரோ பேசுகின்றார்கள். போய்ப் பார்க்கின்றேன். [போதல்.]

பலாயன:-[ஸைரந்த்ரீ வேஷத்துடன் வந்து முகத்தை மறைத்துக்கொண்டு] இதுதான் அந்த ஸங்கேத ஸ்தானம். அந்த நீசன் இன்னும் வரவில்லைபோலும். [புஜங்களைத் திமிறிக்கொண்டு தன் வேஷத்தைப் பார்த்து] நன்றாயிருக்கின்றது என்வேஷம். என்னைக் கண்டு கீசகன்தான் மோகங்கொள்ளவேண்டும். ஐயோ! இதென்ன! நான் ஸ்த்ரீயைப்போல் எப்படி நடிப்பது; தெரியவில்லையே. [ஸயனித்து எழுந்து] அந்த நீசன் வந்தவுடன்...........படு—

[கீசகன் வருதல். அதைக்கண்டு பலாயனன் படுத்துக்கொள்ளுதல்.]

கீசகன்:— அங்கும் காணோமே! ஒருவேளை என் ப்ரியை வாராமலிருப்பாளோ? இதோ நிலவு நன்றாக ப்ரகாசிக்கின்றது. தென்றல் வீசுகின்றது. மதனபரிவாரங்கள் ஜங்காரஞ்செய்து கொண்டு சஞ்சரிக்கின்றன. இந்த மந்தமாருதமோ ஆங்காங்கிருக்கும் புஷ்பங்களின் பரிமளத்தையெல்லாம் அபகரித்துக்கொண்டுவந்து என்மீது தூவுகின்றது. ஹா! ஹா! அந்த ரமணியின் ரூபத்துக்கேற்ற குணம். குணத்திற்கேற்ற மனம். மனத்திற்கேற்ற சாதுர்யம். ஹா! ஹா! நான் இதுவரை இவ்வனத்தின் அருமையை அனுபவித்ததில்லை. கண்மணி! இன்றுதான் நான் தன்யனானேன்.

பலாயன:-[பெண்குரலுடன்] ஹூம். நாதா!—

கீசகன்:—இதோ வந்திருக்கின்றனையா! இப்பொழுது தெரிந்தது; இந் நறுமணமும் இப்பிரகாசமும் எங்கிருந்தேற்பட்டனவென்று. கண்ணே! இல்லாவிட்டால் இம் மந்தமாருதத்துக்கு இவ்வளவு மஹிமை யேது? நிஜமாக நீ சொன்னபடி வந்துவிட்டாய். என்மீது இவ்வளவு அன்புவைத்திருக்கிறாயென்பதை இப்பொழுது அறிந்தேன். [கால்களைத் தொட்டுப் பார்த்து] என்ன? இந்தக்கால்கள் இவ்வளவு கடினமாயிருக்கின்றன? ஒருவேளை பாதசாரியாய்வந்ததால் இருக்கலாம். [கைகளைத் தொட்டுப்பார்த்து.] கைகளும் அதிகடினமாக இருக்கின்றனவே! ஐயோ! பாவம்! என் தமக்கைக்குச் சந்தனம்

அரைத்து, மலர்சூட்டிக் கூந்தல் அலங்கரித்து அதிகப் பணிவிடைகள் செய்வதனால் கைகள் கடினமாயிருக்கின்றன போலும். [பீமன் பெருமூச்சு விடக் கண்டு] கண்மணி! வாஸ்தவத்தில் நான் உனக்கு மிக்க துன்பத்தை உண்டு பண்ணினேன். ஐயோ! பாவி யான் உன்னை இவ்வளவு தூரம் வருப்படி செய்தேனே. இது நீயே தேடிக்கொண்டது. கண்ணே! இங்குவந்து என்னைக் கண்டபிறகும் ஒரு வார்த்தையேனும் பேசாமலும் உன் கடாக்ஷ வீக்ஷணம் என்மேற் படாமலும் சயனித்துக்கொண்டிருக்கின்றாயே. ஏதோ ஒரு முத்தந் தருகின்றாயா ?

பலாயன:— ஆஹா !

கீசகன்:— இப்பொழுதுதான் நான் தன்யனானேன். [முத்தமிடமுயன்று பலாயனன் முகத்தில் மீசையை நோக்கி] என்ன இது ? உன் பவழவாயின் மதுவை அருந்த உன்முகத்திலேயே வண்டுகள் ஸஞ்சரிக்கின்றனபோலும்.

பாலயன:— [கர்ஜித்து] ஹூம்.

கீசகன்:— என்ன இது ? வேறு குரல் ! தேவி ! ப்ராணநாயகி !

பலாயன:— இதோ வந்திருக்கிறேன். ப்ராணநாயகி ! [எழுந்து ஸ்வயரூபத்துடன்] ப்ராணநாயகி ! கீசா ! மதிமந்தா ! நிர்லஜ்ஜா ! ப்ராணநாயகி !

கீசகன்:— [பார்த்துப் பயந்து] ஹா ! ஹா ! ஏன் இங்கு வந்தாய், உன் பாகத்தொழிலைவிட்டுவிட்டு ?

பலாயன:— நானா ? அந்தத் தர்மராஜன் தனக்குத் தகுந்த ஆகாரம் வேண்டுமென்று சொல்லியனுப்பினார். அதை இங்கேதான் பாகம்செய்து அனுப்ப வந்திருக்கின்றேன். அந்தத் தர்மராஜன் யார் தெரியுமா? தென்திசைக்கு அதிபதி. துராத்மா ! இப்பொழுது என் இருகைகளாகிய பஞ்சரத்தில் உன்னை அடைத்து இறுக்குகின்றேன்.

[கீசகனைக் கட்டிப்பிடித்துக் கீழே தள்ளல். சண்டைமுடிவில் கீசகன் மடிதல்.]

அங்கம் V. காட்சி I.

விராடன் அரண்மனே.

விராடனும் கங்கபட்டரும் வீற்றிருத்தல்.

விராடன்:-ப்ராஹ்மணோத்தமரே! நூறுஸஹோதரர்களோடு ஸிம்ம பலனுகவிளங்கியும் தர்நடத்தையாலன்றே பலமெல்லாம் இழந்து ஏககாலத்தில் ஸஹோதரர் அனைவருடனும் கீசகன் மடியும்படிநேர்ந்தது. ஸ்வாமி! இவர்கள் புஜபலத்தைத் துணையாகக்கொண்டு நான் இதுவரையும் ராஜ்யத்தைப் பரிபாலித்துவந்தேன்.

கங்கபட்:- ராஜனே! உலகில் புஜபலத்தை ப்ரதானமாகக்கொண்ட புருஷர்கள் தர்மத்தைக் கைவிட்டால் அப்பலமும் அவர்களை விட்டுச் செல்லுகின்றது. அது நாம் அறிந்த விஷயம் தானே கைலையங்கிரியைப் பந்தாக ஆடின அந்த ராவணேச்வான் தர்மநெறியைக் கடக்க உத்தேசித்தமாத்திரத்திலேயே தன் வல்லமையையிழந்தான்; ப்ராணனையும் இழந்தான். ராஜனே! ஆகையால் தர்மபலம் எங்கில்லையோ அங்குப் புஜபலமும் குன்றிப்போகின்றது.

விராடன்:- தாங்கள் உரைப்பது மிகவும் சரி. ஆசார்யவர்ய! நானும் இதுவரையில் தர்மநெறி தவறுமலும், ப்ரஜைகளுக்கு யாதொருகுறைவும் நேரிடாமலும் அரசுசெலுத்திவந்தேன். அப்படியிருந்தும் என் நாட்டிலும் இப்படிப்பட்ட துர்க்ருத்யம் ஏற்பட்டுவிட்டது. ராஜ்யத்தில் ஏற்படும் புண்ய பாபங்க ளெல்லாம் அரசனைச் சேரும். அம்மாதுசிரோமணி இங்கு வந்து கதறுங்கால் நான் ப்ரதிக்ரியை செய்யாமலிருந்து விட்டேன். அப்பாவம் என்னைப் பிடிக்குமே ஆயினும், அத்துஷ்டர்கள் மடிந்துவிட்டார்கள். அவர்கள் என் பந்துக்க ளாக இராவிட்டால் என்மனத்துக்கு இவ்வளவு சங்கடம் ஏற்பட்டிராது. தேவி எவ்வாறு வருந்துகிருளோ?

கங்கபட்:- அரசே! உலகமே மாயை. ஈசன் கட்டளைப்படி நடப்பதே மேல். நடந்துவிட்டதைப்பற்றிச் சிந்திப்பது கவலைக்குக் காரணமாகும். அவரவர்களுடைய புண்ய பாபங்களை அவ

ரவர்களே அனுபவித்துத் தீரவேண்டும். அதைப்பற்றி நம்மாலாவது ஒன்றுமில்லை. [கீசகன்மனைவி அழுகுரல் கேட்டு] என்ன இந்த அழுகைக்குரல்...............

1-வது வீரன்:–[ஓடிவந்து] மஹாராஜா! நமது கோக்களையெல்லாம் கௌரவர்கள் பிடித்துக்கொண்டுசெல்கிறார்கள். தக்ஷிணதிக்கில் ஸுசர்மாவானவர் சல்ய விகர்ணாதிகளுடன் போர் புரிகின்றார்.

2-வது வீர:-[விரைந்து வந்து] ராஜாதிராஜனே! நமது தந்த்ரீபாலர் பசுவைக்காப்பவர் அவர்கள் நடுவில் வ்ருஷபங்களின் நடுவே சஞ்சரிக்கும் ஸிம்மத்தைப்போல் எதிரிகளையெல்லாம் சிதற அடித்துக்கொண்டிருக்கிறார். அசுவபாலகரான தாமக்ரந்தியும் அவருக்கு ஸஹாயமாகப் போர்புரிகின்றார். ஆனால், கௌரவ பலமோ அபரிமிதமாயிருக்கின்றது. தங்களிடம் தெரிவிக்கவே நான் ஓடிவந்தேன்.

விராடன்:–ப்ராஹ்மணோத்தமரே! பிறர்க்குத் தீங்கிழைபாது இயன்றவரை நன்மையையே செய்துகொண்டுவரும் எங்கள்மீது கௌரவர்களுக்கு இவ்வளவு க்ஷாத்ரம் ஏன் உண்டாகவேண்டும்? ராஜநீதியை மறந்து நம்மிடம் ஒருவார்த்தையேனும் சொல்லியனுப்பாமல் இப்படி யுத்தத்திற்கு வருவானேன்? இது தர்மமா?

கங்கபட்:–அதற்கு ஒரு மஹத்தானகாரணம் இருக்கலாம்.

[மற்றொரு வீரனும் உத்தரனும் வருதல்.]

உத்தரன்:–வடதிக்கில் நம் கோக்களையெல்லாம் அபகரித்துக்கொண்டதுமன்றி, துர்யோதனன், பீஷ்மர், த்ரோணர், அசுவத்தாமா முதலியவர்கள் நம் நகரின் ஆசாரவாசலை முற்றுகையிட்டிருக்கின்றார்கள்.

விராடன்:–விப்ரஸ்ரேஷ்டரே! இப்பொழுது நாம் என்னசெய்யலாம்?

கங்கபட்:–ஏன்? அவர்களை எதிர்க்க நமக்கு வல்லமை இல்லையா? உத்தரகுமாரரே! நீர் வடக்குத்திக்கில் சென்று ஜெயமடைந்து வருகிறீரா?

உத்தரன்:-ஆசார்யவர்ய! தந்தையே! எனக்கு அந்த ஸாமர்த்யம் உண்டென்று எண்ணுங்கள். அந்தத் துர்யோதனுதிகளை ஜெயித்து அவர்களைக்கட்டித் தங்கள்பாதத்திற் கொண்டுவந்துசேர்ப்பேன் ஒரு க்ஷணத்தில். ஆனல் என் பராக்ரமத்திற்கொத்த சாரதியில்லையே யென்றுதான் நான் கவலைப்படுகின்றேன்.

கங்கபட்:-அப்பா! குமாரா! கௌரவபலங்களின் சாமர்த்யத்தை நீ நன்கறியமாட்டாய்.

உத்தரன்:-என்ன? என் ஸாமர்த்யத்தைப்பற்றி நீங்கள் அவ்வாறு எண்ணுகின்றீர்களா? அதை நீங்கள் நன்ருக அறியவில்லைப்போலும். கையில் நான் தனுஸையெடுத்துப் பாணத்தைத் தொடுத்துவிடுத்தால் கண்டவர்கள் நான் தனஞ்சயனென்றே எண்ணுவார்கள்.

3 வது வீர:-[வந்து] மஹாராஜா! தக்ஷிணத்தில் ஆரவாரம் அதிகமாக இருக்கின்றது.

விராடன்:-[கங்கபட்டரைப்பார்த்து] ப்ராஹ்மணோத்தமரே! நான் சென்று தக்ஷிணதிக்கைக் காக்கின்றேன். [உத்தரனைப்பார்த்து] மைந்தா! நீ உத்தரத்திற்குச் செல்கின்ருயா? ஆம், உனக்குத் தகுந்த சாரதியில்லையே.

கங்கபட்:-நன்ருக யோசித்தீர்கள். மஹாராஜா! தாங்கள் தக்ஷிண திக்குக்கு நம் பலாயனனை அழைத்துச் செல்லுங்கள். கௌரவர்களுடைய சூக்ஷ்மங்களையெல்லாம் அவன் நன்ருக அறிந்தவன். உத்தரகுமாருடன் நம்முடைய ப்ருஹந்நளையைச் சாரத்யத்திற்கனுப்பி உத்தரதிக்கைக்காக்கும்படிசெய்கிறேன்.

உத்தரன்:—ப்ராஹ்மணோத்தமரே! தாங்கள் பெரியோரென்றும், என் தந்தையின் மரியாதைக்குப் பாத்ரமானவரென்றும் நினைத்துத் தங்கள் வார்த்தைகளை நான் பொறுத்தேன். சூரனுகிய எனக்கு ஒரு பேடியையா சாரதியாக அனுப்ப எண்ணுகின்றீர்கள்?

கங்கபட்:—அவளைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. ஏதோ ஒரு காரண விசேஷத்தால் அவள் அவ்வாறிருக்கிருள்.

[சேவகனைப் பார்த்து] சேவகா! நீ போய் ப்ருஹந்நளையை அழைத்துவா.

4-வது வீரன்:—[வந்து] மஹாராஜா! உத்தரத்தில் நமது பசுக்களை யெல்லாம் பிடித்துக்கொண்டுபோகின்றார்கள். கோபாலர்கள் ஒன்றுஞ்செய்யமுடியாமல் தவிக்கின்றார்கள்.

[ப்ருஹந்நளை வருதல்.]

உத்தரன்:—ப்ருஹந்நளா! உனக்குச் சாரத்யத்தில் சாமர்த்யமுண் டென்றும் யுத்தத்தில் சூரனைப்போல் நடிப்பாயென்றும் நம் ஆசார்யர் சொல்லுகின்றார். யுத்தத்திற்கு வந்திருப்பவர் களோ கௌரவர்கள்; நானோ மஹாரதன். நீ எனக்குச் சாரத்யம் செய்வாயா?

5-வது வீரன்:—[வந்து] மஹாராஜா! தந்த்ரீபாலரைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். ஆரவாரம் அதிகரிக்கின்றது.

விராடன்:—[வீரனைப்பார்த்து] இதோ நான் வந்துவிட்டேன். [உத்தரனைப் பார்த்து] மைந்தா! நீ ப்ருஹந்நளையை அழைத்துக்கொண்டு இந்தப்பக்கம் செல். [கங்கபட்டரைப் பார்த்து] ப்ராஹ்மண ஸ்ரேஸ்டரே! பட்டணத்திற்குள் எதிரிகள் ப்ரவேசித்து விட்டால் என்னசெய்வது?

கங்கபட்:—அதை நான் பார்த்துக்கொள்கிறேன். சீக்ரம் செல்லுங்கள். பலாயனனையும் கூட அழைத்துப் போங்கள். [என்று விரா டனை அனுப்பிவிட்டு ப்ருஹந்நளையைப்பார்த்து] ப்ருஹந்நளா! இன்று பாத்ரபதபகுள அமாவாஸ்யை. இன்னும் ஆறு ஜாமம் இருக்கிறது. அதற்குப் பின் உன் பராக்ரமத்தை நீ காட்டலாம். [ப்ருஹந்நளை நமஸ்கரிக்க] ஸகலரிபுஸம்ஹாரம் செய்து கீர்த்தியைப் பெறுவாய்!

உத்தரன்:—[நமஸ்கரித்து] ஆசார்யவர்ய! என்னையும் ஆசீர்வதியுங்கள்.

கங்கபட்:—உன் பராக்ரமத்துக்குத் தக்க பதவியை நீ அடைவாய். [ப்ருஹந்நளையைப்பார்த்து] ப்ருஹந்நளா! நீங்களிருவரும் சீக் ரம் செல்லுங்கள்.

உத்தரன்:—[ப்ருஹந்நளையைப்பார்த்து] ப்ருஹந்நளா! ஆரவாரம் அதி கரிக்கின்றது. [பகைவர்களை நோக்கி] கௌரவயோதர்களே! நில்லுங்கள்; நில்லுங்கள்; இதோ வருகிறேன்.

அங்கம் V. காட்சி II.

உத்தரனும் அர்ஜுனனும் ரதாரூடராய் விராடநகரின் அருகிலுள்ள சிமீவ்ருக்ஷத்தின்பக்கம் வருதல்.

உத்தரன்:—[ரதத்தினின்றும் திடீரென்று குதித்து] ப்ருஹந்நளா! ரதத்தை இந்த ஸ்மஸானத்தின் பக்கம் ஏன் திருப்பிக்கொண்டுவந்தாய்?

ப்ருஹந்:— ஏன்? அதோபார். ஸைந்யங்கள் தெரிகின்றன. அவைகள் தென்படாவிட்டால் ரதத்தின்மேல் ஏறிப்பார்.

உத்தரன்:—[ஏறிப்பார்த்து] ப்ருஹந்நளா! அங்கு யாரோ வயதுமுதிர்ந்த இருவர் ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றார்கள்; அவர்கள் யார்?

ப்ருஹந்:— [பார்த்து] ஒருவர் பீஷ்மாசார்யர்; மற்றொருவர் துரோணாசார்யர்.

உத்தரன்:—[சேனைகளைப்பார்த்து நடுநடுங்கி] மாணிக்க மகுடங்களணிந்து கையில் வில்லேந்தியவர்களாய்ப் பார்ப்பதற்கு அதிக பயங்கரர்களாய்த்தோன்றும் அவ்விருவர் யார்? எவ்வளவு பெருத்த சேனை? நான் ஏதோ சாமான்யமாக இருக்குமென்றெண்ணி இங்கு வந்தேன். [பயந்து ரதத்திலிருந்து கீழேகுதித்து] ப்ருஹந்நளா! இனி நான் இங்கிருக்கமாட்டேன். ஊருக்குச்சென்றுவிடுவோம்; ரதத்தைத் திருப்பு.

ப்ருஹந்:— ஏன்? கௌரவர்களை ஜயிக்கவேண்டாமா? கோக்களையெல்லாம் மீட்டுச்செல்லவேண்டாமா? தவிரவும் உன்பிதாவின் கட்டளையை நிறைவேற்ற வேண்டாமா? நீ ஏன் அஞ்சுகின்றாய்? நான் உன்னைக் காப்பாற்றுகின்றேன். ரதத்தில் ஏறு.

உத்தரன்:—சுத்தவீரனாகிய நானே இதைக்கண்டு நடுங்குகிறேனென்றால், பேடியாகிய நீயோ என்னை ரக்ஷிக்கப்போகின்றாய்? நீ யாது கூறியபோதிலும் நான் நம்பமாட்டேன். என் உடம்பெல்லாம் நடுங்குகின்றது. நீ என்னுடன்வரச் சம்மதிக்காவிடில் நீ மட்டும் யுத்தரங்கத்திற்குச்செல். நான் மீண்டும் பட்டணத்திற்குச் செல்லுகின்றேன். அப்பா! இனி ஒரு அடியேனும் போர்க்களத்தின்பக்கம் செல்லமாட்டேன். அது திண்ணம். [புறப்படுதல்.]

ப்ருஹந்:- [அவனைப்பிடித்து] ஹே க்ஷத்ரியா! இன்று நீ உன் தந்தையின்முன் வீண் ப்ரதாபங்களெல்லாம் கூறினயே! நீ க்ஷத்ரியனல்லவா? ராஜபுத்ரனல்லவா? வில்வித்தை நன்றாகக் கற்றவனல்லவா? அப்படிப்பட்ட நீ இப்பொழுது நகருக்குள் புகுவாயாகில் உன்னைப் பார்த்த ப்ரஜைகள் என்னைப்போல் நீயும் ஒரு பேடி யென்று ஏளனம் செய்யமாட்டார்களா? உனது குலதர்மம் போர்க்களத்தினுட்சென்று எதிரிகளோடு அஞ்சாநெஞ்சத்துடன் போர்புரிந்து வெற்றிக்கொடியுடன் திரும்பும்படி உனக்குப் போதிக்கவில்லையா?

உத்தரன்:-[தீனக்குரலுடன்] ப்ருஹந்நளா! நான் அமர்க்களத்தினுட் புகுந்தால் நான் எதிரிகளின் ப்ராணனை அழிக்குமுன் என் ப்ராணன் போய்விடும், அது நிச்சயம். என் தாயின் முகத்தை நான் மறுமுறை காணமுடியாதே? ப்ருஹந்நளா! உன்னை நான் வேண்டிக்கொள்கிறேன். உனக்கு வேண்டிய பொருளைத் தருகிறேன். என்னை விட்டுவிடு. [காலில் விழுதல்]

ப்ருஹந்:—எனக்கு வேண்டிய பொருளை நானே எடுத்துக்கொள்ள எனக்கே சக்தியுண்டு. [உத்தரனைக்குலுக்கி] புருஷனாகப் பிறந்து அதிலும் ஒரு க்ஷத்ரியன் மற்றொருவர் பாதத்தில் விழுவதா? அது உனக்கு இழிவாகத்தோன்றவில்லையா? நீ மறுபடியும் முன்வைத்தகாலைப் பின்வைக்க நான் விடேன். உனக்கு அவர்களுடன் போர்புரியச் சக்தியில்லையெனில் ரதத்திலேனும் ஏறிச் சாரத்யம்செய். நான் யுத்தம் செய்கின்றேன். [வன்னிமரத்தைக் காட்டி] இதோபார். இந்த வ்ருக்ஷத்தில் பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களையெல்லாம் அக்ஞாதவாஸம் செய்யக் கருதிச் செல்லும்பொழுது பத்திரமாக வைத்துவிட்டுச் சென்றார்கள். அதில் அர்ஜுனனுடைய காண்டீவமிருக்கின்றது. அதை யெடுத்துவா.

உத்தரன்:-ப்ருஹந்நளா! என்னை விட்டுவிடு. உனக்கு மிகவும் புண்யமுண்டு.

ப்ருஹந்:—அப்படியே உன்னை விட்டுவிடுகின்றேன்; அதோ தோன்றும் அவ்வில்லை எடு.

உத்தரன்:-[வில்லை எடுக்கப்போய்ப் பாம்பைக்கண்டு பயந்து ஓடிவருதல்.]

ப்ருஹந்:—ஏன் அவசரமாகத் திரும்பிவிட்டாய்? என்ன சமாசாரம்?

உத்தரன்:-[பயந்து] அங்கு ஒரு காலஸர்ப்பம் இருக்கின்றது. இவ்வளவு நயத்துடன் பேசி என்னை ஓர் காலஸர்ப்பத்துக்கு இரையாக்கப் பார்த்தனையா?

ப்ருஹந்:—[சிரித்து] அப்படியா! [தனக்குள்] ஞாபகமில்லாமல் இவனை அனுப்பினேன். [ப்ரகாசமாய்] உத்தரா! அங்கு ஒன்றுமில்லை. வேறொருவரும் அவற்றை அபகரிக்காமலிருக்கும் பொருட்டுப் பாண்டவர்கள் இவ்விதம் சூழ்ச்சி செய்திருக்கிறார்கள். அது நீ நினைத்தபடி சர்ப்பமல்ல அதுதான் அர்ஜுனனுடைய காண்டீபம். உனக்குப் பயமாயிருந்தால் நான்போய் எடுத்துவருகிறேன். [போதல்.]

உத்தரன்:—[தனக்குள்] என்ன ஆச்சர்யம்! ப்ருஹந்நளையை இதுகாறும் பேடியென்றே நான் நினைத்திருந்தேன். இங்கு அவள் நடத்தையைப் பார்த்தால் பெரிய வீரன்போல் தோன்றுகின்றது. [ப்ரகாசமாய்] ப்ருஹந்நளா! ஏன் தாமதம்?

ப்ருஹந் :-[உள்ளேயிருந்து] பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களை நன்றாகக் கட்டிவைத்திருக்கின்றார்கள். அதிலுள்ள என் காண்டீவத்தை எடுத்துவரவேண்டாமா?

உத்தரன்:-[ப்ருஹந்நளை வெளிவந்து தன் உடையை மாற்றுவதைக்கண்டு] ஏன் உன் வஸ்த்ரத்தை எடுத்துவிடுகின்றாய்? [ப்ருஹந்நளை அர்ஜுனனாகத் தோன்றக்கண்டு] இதென்ன ரூபம்? மஹாநுபாவா! தாங்கள் யாரோ நான் அறியேன். இதுவரை பேடியாக இருந்து ஒரு க்ஷணத்திற்குள் திவ்யமானரூபத்தைத்தரித்து வந்திருக்கிறீர்கள். தங்களைக் கண்டமாத்திரத்தில் என் ஹ்ருதயத்தில் தங்களிடம் அச்சமும் ஒரு புதிதான ஆனந்தமும் உண்டாகிறது. தங்களுடைய மஹிமையை அறியாமல் நான் இதுவரை தவறாகப்பேசிவிட்டேன். அதற்கு என்னை க்ஷமிக்கவேண்டுகின்றேன். தங்களைப்பார்த்தால் சுத்தவீரரான தனஞ்சயரைப்போல் விளங்குகின்றீகள்.

அர்ஜுன:-[உத்தரனை அணைத்து] அப்பா! உனக்குப் பாண்டவர்களை நன்ருகத்தெரியுமா?

உத்தரன்:-ஆம். அவர்கள் எனக்கு நெருங்கிய பந்துக்கள். அப்பஞ்சவரும் இப்பொழுது எங்கிருக்கின்ருர்களோ? அம் மஹாபதிவ்ருதாசிரோமணி எங்கிருக்கிருளோ?

அர்ஜுன:-அப்பா! உன் ஸமீபத்திலேயே இருக்கின்ருர்கள். நீ கூறிய தனஞ்சயன் என்பவன் யானே. ப்ராஹ்மணோத்தமராகிய உன் ஆசார்யர்—கங்கபட்டர் என் தமயனாராகிய தர்மபுத்ரர். பாகசாலையிலிருக்கும் பலாயனர்தான் பீமசேனர். அஸ்வ கோபாலர்களாகிய இருவரும் நகுலஸஹாதேவர்கள். அந்தப்புரத்தில் உள்ள ஸைரந்த்ரி என்ற நாமதேயம் பூண்டவள் தான் த்ரௌபதீ.

உத்தரன்:-என்ன ஆச்சர்யம்! நான் முன்பே சந்தேகம் கொண்டேன்; இப்பொழுது ஆனந்தபரவசமடைந்தேன். தங்களைக் கண்டவுடன் தங்களுக்கு ஸாரத்யம் செய்ய எனக்குத் துணிவுண்டாகிவிட்டது. இனி நான் ஒன்றுக்கும் அஞ்சேன்.

அர்ஜுன:-உத்தரா! சிறிது நில். தர்மதேவதையிடமிருந்து எனது சங்கத்தையும் கவசத்தையும் நான் பெறவேண்டும். [தர்மதேவதையை ஸ்தோத்ரம் செய்தல்.]

தர்மதேவ:-[சங்கத்தையும் கவசத்தையும் கொடுத்து] விஜயதாம். ஆயுஷ்மான்!

அர்ஜுன:-தேவீ! நமஸ்கரிக்கின்றேன். மாத்ருவாத்ஸல்யத்துடன் என்னை இதுவரை ரக்ஷித்த தாயே! ஸதாஸர்வகாலமும் இப்படியே என்னைக் காப்பாற்றியருளவேணும்.

தர்மதேவ:-ததாஸ்து. [மறைதல்.]

அர்ஜுன:-[ஆகாசத்தைப்பார்த்து] துர்யோதனு! துச்சாசனு! குருக்களே! கர்ண! அஸ்வத்தாமாமுதலியவர்களே! பீஷ்ம த்ரோண க்ருபாசார்யாதி ஆசார்யஸ்ரேஷ்டர்களே! மற்ற வீரர்களே! எல்லோரும் கேளுங்கள். பாண்டவர்கள் கூறியசொல் தவருதபடி தங்கள் கடமையையெல்லாம் நிறைவேற்றி இதுவரை

புகைந்துகொண்டிருந்த தங்கள் கோபாக்நியை ஜ்வலிக்கும் படிசெய்து, கௌரவவனத்தையெல்லாம் தஹித்துத் தங்கள் சௌரியத்தை எங்கும் பரவச்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். கௌரவர்களே! மூடர்களே! ராஜநீதியைவிட்டுக் கேவலம் அற்பர்கள்போல் பயந்து பசுபாலர்களைஜெயித்துக் கோக்களைப் பற்றிச்சென்றோமென்ற இறுமாப்புடன் இருக்கவேண்டாம். க்ஷத்ரியவீரர்கள்போல் யுத்ததர்மத்தை அனுஷ்டிக்காமல் கேவலம் கள்வர்கள்போல் நடிக்கிறீர்கள். இப்பொழுது என்ன சொல்லுகின்றீர்கள். [சங்கத்வனியும் தநுஷ்டங்காரமும் செய்து] உத்தரா! ஏறு ரதத்தில் சீக்ரமாக. முதலில் பசுக்களை விடுவித்துவிட்டுப் பிறகு போர்செய்வோம்.

அங்கம் V. **காட்சி III.**

போர்க்களம்.

துர்யோதனன், கர்ணன் அஸ்வத்தாமா பீஷ்மர் த்ரோணர் க்ருபர்களுடன் ப்ரவேசித்தல்.

த்ரோண:—பீஷ்மரே! இப்பொழுது நாம் கேட்ட சங்கத்வனி யாரிடமிருந்து வருகின்றது தெரியுமா?

பீஷ்மர்:—[பரமாநந்தத்துடன்] த்ரோணரே! அநேக காலமாக நாம் கேட்காத இந்தத்வனி என் மனத்தை உத்ஸாகப்படுத்திவிட்டது. இன்னும் சொல்பநேரம்தான் இருக்கின்றது. அதன்பின் தங்கள் ப்ரியஸிஷ்யனைத் தாங்கள் ஸ்தோத்ரம்செய்யலாம்.

துர்யோத:-[பீஷ்மரிடம்] ஆசார்ய! நமது மல்லனை வெல்லத்தக்க ப்ராக்ரமசாலி பீமனொருவனே என்றும், கீசகனை வெல்லக்கூடியவனும் அவன்தான் என்றும், மற்றும் இவ் விராடநகரத்தில் ஐந்துபுருஷர்களும் ஒருஸ்த்ரீயும் தங்கள் பாண்டவர்களுடைய பரிஜனங்கள் என்று கூறி ஏககாலத்தில் வந்து வசிக்கிறார்கள் என்று நாம் கேள்விபுற்றதும் அவர்கள் பாண்டவர்களே என்று எண்ணியும் நாம் இங்கே படையெடுத்துவந்தோம். ஆகிலும் அவர்களில் ஒருவனையேனும் காணோமே.

பீஷ்மர்:—சுயோதனு! இப்பொழுது பரவிய சங்கத்வனியைக் கேட்டாயா? அது தேவதத்த சங்கத்தினின்றும் வந்தது. இப்பொழுது நம்மை எதிர்த்து நாம் அபகரித்த பசுக்களை யெல்லாம் திருப்பிக்கொண்டுபோக அர்ஜுனன் வந்துகொண்டிருக்கின்றான்.

த்ரோண:—சுயோதனு! உன்னுடைய பலங்களையெல்லாம் வ்யூகமாக நிறுத்திவை. உங்கள்மீதுண்டாகிய தும் இந்தப்பதின்மூன்றுவருஷங்களாக அடக்கிவைத்துக்கொண்டிருந்ததுமான க்ஷாத்ரம்பொங்கித் தன்தோள்கள் துடிதுடிக்கக் கூட்டினின்றும் விடுவிக்கப்பட்ட ஸிம்மம்போல் அர்ஜுனன் வெகு வேகமாக வந்துகொண்டிருக்கின்றான். [அர்ஜுனனுடைய தனுஷ்டங்காரத்தைக்கேட்டு] கேட்டனையா காண்டீபடங்காரத்வனியை?

அஸ்வத்:—துர்யோதனு? எவன்தோள்வலியைக்கொண்டு எனக்கு நிகரில்லையென்று இறுமாப்புக்கொண்டிருந்தனையோ — எவனுக்குப் பாதிராஜ்பத்தை அளித்து அர்த்தாஸநத்தில் உட்காரவைத்துக்கொண்டாயோ - எவனை இந்தக் கௌரவ ஸேனைக்கெல்லாம் அதிபதியாக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கின்றனையோ— அந்தக் கர்ணனே இப்பொழுது உன்னைக் காக்கட்டும். தக்க சமயம் வாய்த்திருக்கின்றது.

கர்ணன்:—த்ரோணபுத்ர! என் வீணுக அரசனை இப்பொழுது நிந்திக்கின்றாய்! ஒரு அர்ஜுனன் இங்கு வருகிறானெனக் கேள்வியுற்று அவன் வருமுன்னரே பயந்து அரசனிடம் ஏன் இவ்வாறு ப்ரலாபிக்கின்றாய்? இந்தக் கௌரவஸேனையை ரக்ஷிக்கவோ—இக்கௌரவபதியின் கீர்த்தியை நிலைநிறுத்தவோ—அல்லது அர்ஜுனன் எதிரில்நின்று யுத்தஞ்செய்யவோ—வல்லமையுள்ள வீரன் என்னைத்தவிர வேறொருவருமில்லையென்று நினைத்தே இக் கௌரவராஜன் இப்படிச்செய்தார். நீ இதன்பொருட்டு இவரை நிந்திக்கலாமா?

க்ருபர்:—அங்கபதி! நீ எப்பொழுதும் வம்புச்சண்டைக்குச் சித்தமாயிருக்கின்றாய். த்ரோணரென்ன—பீஷ்மரென்ன—அஸ்வத்

தாமா என்ன: இவர்களைக்காட்டிலும் நீ பெரிய வீரன் என்று எண்ணுகின்றாயா?

த்ரோணர்:-ஹே ஸூதபுத்ரா! அர்ஜுனன் ஒருவனென்று கூறினை? மத்ஸ்ய யந்த்ரத்தை எய்தபொழுதும் உங்களனைவோரையும் சிதற அடித்து அவன் ஒருவன்தான் வெற்றிகொண்டான். ஸுபத்ரையைக் கைப்பற்றினபொழுதும் அவன் ஒருவனே உங்களை எதிர்த்தான். கந்தர்வராஜனால் பிடிக்கப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்த இந்தக் கௌரவராஜனை உதார குணத்துடன் விடுவித்து "வயம் பஞ்சோத்தரசதம்" என்று வம்சத்துக்குக் கீர்த்தியை நிலைநாட்டினவனும் அவனொருவனேதான். இப்பொழுது பசுக்களைத் திருப்பிக்கொண்டு செல்வதுடன் உங்களுடைய கௌரவத்தை அபகரிக்க வருபவனும் அவனொருவனேதான். ஏதோ இப்பொழுது நீயும் உன் அரசனும் உங்களுடைய வல்லமையைக் காட்டுங்கள்.

அஸ்வத்:- கர்ணா! என்ன சொன்னாய்? இந்தப் பார்த்தனை ஜபிக்க வேறொருவர்க்கும் வல்லமையில்லையென்று? இந்த த்ரோணதிகளோ மஹாபூஜிதர்கள்; தர்மாதர்மம் அறிந்தவர்கள். அவர்கள் எங்கிருந்தபோதிலும் அவர்களுடைய கீர்த்தியும் பராக்ரமமும் ப்ரகாசித்துக்கொண்டேயிருக்கும். இப்பொழுது நீ உரைத்த வார்த்தைகளை அவர்கள் ஸஹித்துக் கொண்டிருக்கலாம். பார்த்தனை வெல்ல அவர்களுக்கில்லாதசக்தி உனக்கா ஏற்படப்போகின்றது?

கர்ணன்:- [பரிகசித்து] பேஷ்! சுத்தவீரர்! பிராமணர்களுக்கு இந்த க்ஷத்ரியவ்ருத்தி எதற்கு? நீர் பார்த்தனைக்கண்டு பயமடைந்தால் நீரும் வீரர்களுக்கு ஆசார்யரான அந்த ஆசார்யருடன் சுகமாக வீற்றிருக்கலாம். இவர்களைஜபிக்க எங்களுக்கு வல்லமை உண்டு.

அஸ்வத்:- துராத்மா! ஆசார்யரையே நிந்திக்கின்றாயா?

[ஒரு வீரன் வருதல்.]

வீரன்:— துர்யோதன மஹாராஜா எங்கே? அவருக்குச் சீக்ரமாகத் தெரிவிக்கவேண்டும். தக்ஷிண திக்கில் ஸுசர்மாவைப் பந்தித்துப் பசுபாலர்களையும் விடுவித்துக்கொண்டுபோய் விட்டார்கள்.

2-வது வீரன்:-[வந்து] மஹாராஜா! விராடராஜனுடைய சை ருடன் வந்து விகர்ணரையும் துச்சாசனரையும் ரையும் சின்னபின்னம்செய்து பறக்க அடித்துவிட் ருத்ரனைப்போல் ப்ரகாசித்துக்கொண்டு பீமசே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்.

துர்யோத:-[த்ரோணரைப் பார்த்து] ஆசார்யவர்ய! இப்பொழுது செய்வது?

அஸ்வத்:-கர்ண! ஆசார்யரைச் சற்றுமுன் நிந்தித்தாயே! பொழுது உன் அரசனைக் காப்பாற்று. உன் வீரப் களைப் பார்ப்போம்,

துர்யோத:-அங்கராஜ! நீ இங்கே இரு. நான்போய்த் துச்சாசன விடுவித்துக்கொண்டு வருகிறேன்,

அர்ஜுனன் த்ரோணர்பாதத்தில் ஓர் பீஷ்மர்பாதத்தில் ஓர் அம்பும் ஸமர்ப்பி

த்ரோணர்:—
பீஷ்மர்:— } இது பார்த்தனது.

அஸ்வத்:-நமஸ்காரபூர்வக பாணம் போலும்.

பீஷ்மர்:-சுத்தவீரனது முறையை அநுஷ்டிக்கிறான்.

அர்ஜுன:-[உள்ளிருந்து] துர்யோதன துச்சாசன க்ரூரர்களே! கர்ண அஸ்வத்தாமா முதலிய யோதர்களே! பீஷ்ம த்ரோண க்ருபாத் யாசார்யர்களே! எல்லோரும் கேளுங்கள். கௌரவர்களால் மூட்டப்பட்ட க்ரோதாக்னி இதுவரை புகைந்து கொண்டிருந்தது. அதன் ஜ்வாலை இப்பொழுது எங்கும் பாவுகின்றது. அது கௌரவ சேனையிலிருக்கும் யோதர்களே! இங்கு வாருங்கள்; எனக்கு இரையாகுங்கள் என்று

கோஷிக்கிறது. பசுபாலர்களை வெருட்டிப் பசுக்களை அபகரித்தோமென்று கர்வம்கொண்டிருந்தீர்கள். இப்பொழுது பசுக்களெல்லாம் விராடநகரம்போய்ச்சேர்ந்துவிட்டன என்பதை அறியுங்கள்.

அஸ்வத்:— சுயோதனு! இப்பொழுது என்னசெய்வாய்? அங்கு உனது தம்பியைக் காப்பாற்றப்போகின்றனையா! இங்கு அர்ஜுனனுக்குப் பதில் கூறப்போகின்றனையா? [கர்ணனை நோக்கி] ஸபாஷ் — கர்ணு! சூதபுத்ரா! அங்கராஜா! சேனுபதி! தருணம் இப்பொழுது வாய்த்தது. என்ன செய்யப் போகின்ருய்?

கர்ணன்:— த்ரோணபுத்ர! யுத்தத்தில் ஸத்ருக்களைவெல்வது க்ஷத்ரியர்களுடையது; உங்களுடையதன்று.

[அர்ஜுனனும் உத்தரகுமாரனும் வருதல். அர்ஜுனன் பீஷ்மர் த்ரோணர் க்ருபர் அஸ்வத்தாமா: இவர்களை வணங்கித் துர்யோதனனையும் கர்ணனையும்பார்த்துத் தனுஷ்டங்காரம் செய்தல்.]

3ம் வீரன்:-[வந்து] மஹாராஜா! பீமசேனர் ஆங்காங்குச் சஞ்சரித்துக் கௌரவசேனையை த்வம்ஸம்செய்துகொண்டுவருகிருர்.

அர்ஜுனன்:-[த்ரோணரைப்பார்த்து] ஆசார்யவர்ய! இதுகாறும் எங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களையும் பன்னிரண்டுவருஷவனவாஸத்தையும் ஒருவருஷ அக்ஞாதவாஸத்தையும் கழித்து நாங்களைவரும் உங்களைக் காணும்ஸமயத்தை எதிர்பார்த்த வண்ணம் துடித்துக்கொண்டிருந்தோம். நீங்களே எங்களைக் காண வந்துவிட்டீர்கள். இனி நாங்கள் எவ்விதமாக நடக்க வேண்டுமோ அதை ஆக்ஞாபியுங்கள்.

4ம் வீரன்:-[வந்து] மஹாராஜா! பீமஸேனர் சுயோதனன் எங்கே? சுயோதனன் எங்கே? என்று ஆரவாரித்துக்கொண்டு வருகிருர்.

[ஸ்ரீ க்ருஷ்ணபகவான் வருதல். எல்லோரும் வணங்குதல்.]

க்ருஷ்ண:-விஜயதாம், விஜயதாம், பார்த்த! ஸகே! வா. [அர்ஜுனனை அணைத்து] நீ எனக்கு ஸகாவாயிருப்பதுடன் பரமசிவனுக்கும் ஸகாவாய்விட்டாய். உங்களுடைய கஷ்டகாலமெல்லாம் நிவர்த்தியாகிவிட்டதா? உங்களுடைய வீர்யத்தையும் தைர்யத்தையும் பராக்ரமத்தையும் காட்டக்கூடிய சமயம் வாய்க்கட்டும். பீஷ்ம த்ரோண க்ருபாசார்ய ஸ்ரேஷ்டர்களே! துர்யோதனா! கர்ணா! நீங்கள் கவலைப்படவேண்டாம். துச்சாஸநாதிகளையெல்லாம் விடுவிக்கும்படி நான் ஆக்ஞாபித்துவிட்டேன். இனியாவது—

பீமன்:— [வந்து] ஸுயோதனா! பதரே! நிர்லஜ்ஜா! எந்தப்பலத்தைக்கொண்டு இதுவரை எங்களுக்குத் தீங்கிழைத்தாயோ—எந்தப்பலத்தைக்கொண்டு—

அர்ஜுன:-[பீமன் ஸமீபம் வந்து] அண்ணா! க்ருஷ்ணபகவான் இங்கிருக்கின்றார். வெகு மர்யாதையுடனும் வினயத்துடனும் கௌரவத்துடனும் நாம் பேசவேண்டும்.

பீமன்:— [க்ருஷ்ணனைப் பார்த்து] பகவான்! முகுந்தா! கோவிந்தா! நந்த நந்தன! இதுகாறும் எங்களுக்கு நேர்ந்த விபத்துக்களையெல்லாம் அனுபவித்துத் தங்கள் க்ருபையால் அவைகளிலிருந்து வீரப்ரதாபத்துடன் வெளியேறினோம். இப்பொழுது நாங்கள் சுயேச்சையை அடைந்துவிட்டோம். தங்கள் ஆக்ஞைப்படி நடக்க ஸித்தமாயிருக்கின்றோம்.

[காலில் விழுதல். க்ருஷ்ணன் அவனைத்தூக்கி அணைத்தல்.]

அர்ஜுன:-பகவான்! உங்களை நான் எப்படித் துதிப்பேன். என்னுடைய ஸகா என்று எண்ணுவதா? மைத்துனன் என்று எண்ணுவதா? அல்லது தேவதேவனென்று போற்றுவதா? எனது ஆனந்தத்தில் ஒன்றும் தோன்றவில்லையே!

[விராடன், தர்மன், நகுலன், ஸஹாதேவன் த்ரௌபதி இவர்கள் வருதல். எல்லோரும் ஈசனைத் துதித்தல்.]

க்ருஷ்ண:—பீஷ்மாசார்யரே! தாங்கள் இரண்டு வம்ஸத்திற்கும் மூல புருஷராக இருக்கின்றீர்கள். இனி எப்படி நடக்கவேண்டுமோ அவ்விஷயத்தைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். [துர்யோதனனைப்பார்த்து] கௌரவநாயக! ஸுயோதனு!! நீ எவ்வளவு சயநபத்துடன் ப்ரவர்த்தித்தாயென்று பாண்டவர்கள்மட்டுமல்ல, உலகிலுள்ளோரனைவரும் அறிவார்கள். ஆயினும் அது பாண்டவர்களுக்கு நன்மையாகவே முடிந்ததென்று என் அபிப்பிராயம். துர்யோதனு! இதனால் கேவலம் பாகுபலமும், க்ருத்ரிமமும், பொறுமையும் உலகத்தில் மேன்மையடையாவென்று நிரூபித்துவிட்டாய் [ஸுயோதனனும் கர்ணனும் காலில்விழ] வீரர்களே! இனிபாவது பாண்டவர்களிடம் ஸஹோதரபாவததுட னிருப்பீர்களானல் உங்களுக்கு நன்மை யுண்டு.

பீஷ்மர்:—பகவான்! தேவதேவ!! தேவரீருடைய அபிப்பிராயம் எப்படியோ—அப்படியே எல்லாம் நடக்கும். தாங்கள் ஹ்ருஷீகேசரல்லவா?

[தர்மன் முதலியோர் நமஸ்கரித்தல்.]

க்ருஷ்ண:—இந்தத் தர்மபுத்ரர் இருக்குமிடமெல்லாம் மேன்மேலும் வ்ருத்தியடையவேண்டியது. [விராடராஜனைப் பார்த்து] நீரோ ஒரு வருஷகாலம் எல்லோரையும் காப்பாற்றித் துஷ்டர்களை ஸிக்ஷித்துத் தர்மத்திற்கு ஹானி ஏற்படாமலும் தர்மவ்ருக்ஷம் இவ்வுலகில் எப்பொழுதும் புண்யபலனைக் கொடுக்கும்படியாகவும் செய்தீர். உம்மீது மிகுந்த ப்ரீதியை அடைந்தேன்.

விராடன்:—கோவிந்தா! தம்முடைய திவ்யதரிசனம் கிடைத்தபின் வேறு இச்சிக்கத்தக்கது யாதுளது? ஆயினும் இனிமேல் மங்களமுண்டாகும்படி ஆசீர்வதிக்கவேணும்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய꞉ பரிபாலயந்தாம்
ந்யாயேந மார்கேண மஹீம் மஹீஶா꞉।
கோப்ராஹ்மணேப்ய꞉ ஶுபமஸ்து நித்யம்
லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகிநோ பவந்து॥

க்ருஷ்ண:—ததாஸ்து. [த்ரௌபதியைப் பார்த்து] தங்காய்! உனது வேணீ ஸம்ஹாரம் செய்யும் ஸமயத்தை எதிர்பார்த்தவண்ணம் இரு. உன் மனோரதம் குறையின்றி நிறைவேறும்.

[illegible]

மங்களம்.

பாண்டவ அக்ஞாதவாஸ நாடகம் முற்றிற்று.